Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24

දිනමුරසු වාරමලර්

ஜூன் 02 - 08, 2011

ரூபா 30.00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 913



## வெட்டிய குழிக்குள் வீழ்ந்தது கூட்டமைப்பு



## இலங்கைக்கு சர்வதேசம் விரிக்கும் சதிவலை



## இராணுவப் பாசறைக்குள் தலைமைத்துவப் பயிற்சி!

## அசத்தலும் அதிரடியும்

## பேசற்க; பிறவார்த்தை

மனித வாழ்வில் ஆலய வழிபாடு தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது. அதுவும் ஆன்மீக மார்க்கத்தில் ஈடுபாடுடையவர்கள் அல்லும் பகலும் இறை நாமத்தை உச்சரிப்பதும், இறைவன் குடி கொண்டிருக்கும் ஆலயத்தை நாடிச்செல்வதும் வாழ்வில் ஒரு நியதியாகிவிட்டது.

ஆயினும், இந்த நியதியைக் கடைப்பிடிப்பவர்கள் எல்லோரும் இறைபக்தர்கள் அல்லர். மனம் தூய்மையடைவதற்காகவும், வாழ்வில் ஏற்படும்; ஏற்படவிருக்கும் இடுக்கண்களில் இருந்து காத்துக்கொள்வற்கும், இறைபக்தி மேலோங்கவும் இறைவ-னின் பாதார விந்தத்தை பற்றிப் பிடிக்கச் செய்பவர்களோடு, பக்திமார்க்கம் அறியாதவர்களும் செல்வதால், ஆலயத்துள் பக்திச் சூழ்நிலைகள் மாசடைகின்றது; மாறுபாடு அடைகிறது. உண்மைப் பக்தனுக்கு உபத்திரவங்களாக அமைகிறது.

"பரம்பொருளின் பெரும்புகழைப் பாடிப் பணிதலின்றி பிறவார்த்தையாதொன்றும் பேசற்க ஆலயத்துள்" என்ற ஆன்மீக போதனையைத் தெரிந்தவர்கள் கூட, ஆலயத்தினுள் இருந்து அநாவசியமான வீண்வார்த்தைகளைப் பேசுவதால், பக்கத்தில் இருப்பவரது பக்தி வழிபாடு பாழடிக்கப்படுகிறது என்பதை இன்றிலிருந்து நாம் உணர்ந்து இறையுணர்வோடு ஆலயங்களுக்குச் செல்வோமாக.

அனந்தநாராயணன், கைதடி.

## இயேசுவின் நாமத்தின் நிமித்தம்

ஒரு கிறிஸ்தவனின் ஆவிக்குரிய ஜீவியத்தில் வேதவாக்கியங்களின்படி ஒழுகி நடப்பது பாடுகள் பலநிறைந்த பயணமாகும். துன்மார்க்கர் மிகுந்திருக் கும். இவ்வுலகில் ஒரு கிறிஸ்தவன் தனது மீட்பருடைய சத்தியவசனத்தை போதிக்கும்போது பல இன்னல் களுக்கு ஆளாகின்றான்.

துன்மார்க்கருக்கு பரலோக இராஜ்ஜியம் தூரவாக இருப்பதால், அவர்கள் சத்தியத்தை அறிய வும், அதன்படி ஒழுகி நடக்கவும் விரும்பவில்லை. இப்படிப்பட்டவர்கள் மத்தியில் ஒரு ஆவிக்குரிய சில கிறிஸ்தவ விசுவாசி இயேசுவின் போதனைகளைப் பின்பற்றி நடப்பதென்பது இலகுவான விடயமல்ல.

சத்தியத்துக்காக மரித்த பலரை நாம் வேதாகமத்தில் பார்ப் பதில் இருந்து கிறிஸ்தவ ஜீவியம் என்பது அன்று தொடக்கம் இன்றுவரையிலும் உபத்திரவம் மிகுந்ததாகவே தென்படுகிறது. இந்த உபத்திரவத்தின் நிமித்தம் பலர் தம் கிறிஸ்தவ ஜீவியத்திலிருந்து இடறல்பட்டு பின் மார்க்கத்தைத் தழுவியவர்களாக பின்நாளில் பாதைமாறிப் போய்விடுகிறார்கள்.

இத்தனைக்கும் அவர்கள் இயேசுவைத் தமது இரட்சகர் என்று ஏற்றுக்கொண்டதினாலேயாகும். இதையே இயேசுவும் "என் நாமத்தின் நிமித்தம் நீங்கள் எல்லோராலும் பகைக்கப்படுவீர்கள். முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான். (மத்தேயு-10:22)" என்று கூறுகிறார்.

சாமுவேல்-புதுக்குடியிருப்பு.

ஆன்மீகம்

## வாழ்க்கை வழிமுறை

இன்னும் எம்மில் சிலரை தமது ஈடேற்றத்தைத் தங்களது நடத்தைகளாலும் நடவடிக்கைகளாலும் சீரழித்துக் கொண்டிருக்கின்றனர். இவ்வுலக ஆதாய நோக்கங்களைக் கொண்ட இவர்கள் இஸ்லாத்தின் போதனைகளுக்கும் வழிகாட் டல்களுக்கும் அப்பால் சென்று கொண்டிருக் கின்றனர்.

அல்குர்ஆனின் அறைகூவலை அவதானியுங்கள் இங்கே நீங்கள் பிணக்குகளை ஏற்படுத்திக்கொள்ளாதீர்கள். தோல்வியடைவீர்கள். உங்களது பலம் குன்றிவிடும்.

ஆம். அல்குர் ஆனின் போதனைகளை மறக்கும் மானிடர்களுக்கு ஈருலகிலும் ஈடேற்றம் ஏது?

எமக்குள் ஏற்படும் பிளவு அதன் விளைவு ஒரு சமூகமே தோல்விக்கு உள்ளாகிவிடும். ஒரு தனிமனிதன் தனது நடவடிக்கைகள் சரி-யெனக் கருதினால் தான் என்ன செய்ய வேண்டும். தன்னுடைய செயற்பாடுகளை மற்றவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். இதன் மூலம் சமுதாய சந்தேகங்கள் சரிசெய்யப்பட வேண்டும். இவைகள்தான் ஒருவர் கடமையுணர்வோடு கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை வழிமுறைகள்.

எம்.சீ.கலீல்-கல்முனை-05

## வாசகர் சாலை

### யதார்த்தமான உண்மை!

முரசுக்கு வணக்கம். உன்னில் பிரசுரமாகும் அத்தனை அம்சங்களும் எனக்குப் பிடித்துள்ளது ஒவ்வொரு வாரமும் புதுமையான, வியப்பான பல அம்சங்களையும் சுமந்து வருகின்றாய். 912 ஆவது முரசில் வெளிவந்த வாழ்பவர்களை மறந்து ஆவிகளுக்காக அழலாமா? என்ற கட்டுரையில் யதார்த்தமான உண்மைகளை கட்டுரையாசிரியர் நாசூக்காக கையாண்டிருக்கிறார்.

க.கந்தசாமி,
கிளிநொச்சி

### மாற்றம் தேவை

ஒவ்வொரு வாரமும் உன்னை படித்து வருகின்றேன். பல நல்ல விடயங்களை பிரசுரிக்கின்ற அதேவேள்ளை இன்னும் பல அம்சங்களைச் மாற்ற வேண்டிய கட்டாய பொறுப்பு முரசுக்கு உண்டு. தொடர்கள், அரசியல் கட்டுரைகளை குறைத்து வேறு கருத்துகள், கட்டுரைகளை சேர்த்துக் கொள்ள வேண்டிய கட்டாய தேவை உண்டு வாசகனாகிய எனது இந்த விமர்சனத்தை கருத்திற் கொண்டு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

சீ.சக்திவேல்,
நுவரெலியா


### வசந்தம்

தினமுரசுக்கு வணக்கம்!
வாரமொரு முறை வந்து வசந்தம் வீசும் போது அதிலும் ஒரு சுகம் உண்டு. முரசில் வெளிவரும் அத்தனையும் என்னைக் கவர்ந்துள்ளது. அதாவது மனதுக்கு நிம்மதி, சினிமா, பாப்பா முரசு என்பவை சிறப்பு. 911 இலிருந்து வெளிவரும் Dr. சி.ஜமுனானந்தாவின் தொடரான 'காச நோயும், சுவாச ஆரோக்கியமும்' எனும் தொடர்கட்டுரை காச நோய்க்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக உள்ளது. எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.




க.வாகீசன்,
திருநெல்வேலி

## கவிதைப் போட்டி இல.913



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 14.06.2011

கவிதைப் போட்டி இல. 913
தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### எது?

இது
அன்பின் அடையாளமா?
இல்லை
ஆழிப்பேரலையின்
துயர் நினைவா?

சி.விதுஷன்,
மட்டக்களப்பு.

### விதைப்பு!

கடல் அலையோரம்
காதல் சின்னத்தின் மீது
அன்பை விதைக்கிறாளோ
இந்த ஆறு வயதுச் சிறுமி!

கே.சைந்தவி, பளை.

### கவனமாயிரு...

பிள்ளாய்!
பேரலை வரும் கரையில்
பூவொடு
உனக்கென்ன வேலை?
போய்வீடு மகளே!
சுனாமி அலை
சொல்லாமல் வந்துவிடும்.

காவியன்-திருகோணமலை

### எதுவாகயிருக்கும்...?

ஆழ்கடல் கரையோரம்
மண்ணுள்
ஆழப் புதைந்தவரை நினைத்து
வெள்ளைச் சிறுமியொருத்தி
விடுகிறாளோ கண்ணீர்த்துளிகள்?

ம.வசந்தன், கொழும்பு -06

### வியப்பு!

உறவுகள் அற்றனையோ?
ஊர் இழந்தனையோ?
சிறகுகள் முளைக்கும்
வயதில்
சிறுதளிரே!
உன் சிந்தனை
வியப்புக்குரியது.

கு.வர்ஷா,
வவுனியா.


### வாழ்க!

இந்தப் பிஞ்சு வயதினிலும்
அன்பெனும் உணர்வுகொண்டு
அலைகடல் கரை மீது –தன்
எண்ணத்தைப் பிரதிபலிக்கும்
இந்த
இளந்தளிரின் செயற்பாடு
போற்றுதற்குரியது...!
புகழப்பட வேண்டியது...!
வாழுங்காலத்தால்
வாழ்த்தப்பட வேண்டியது...!

த.அன்பரசி,
மயிலிட்டி.

கவிதைப் போட்டி இல.911

## பாராட்டுக்குரியது



### தெரியாதா உனக்கு?

குழந்தாய்
அன்பின் அடையாளத்துக்கு
உனக்கு
அலைகடல்
கரையோகிடைத்து!
உன் அடையாளத்தை
நீரலை வந்து
நிர்மூலமாக்கிவிடுமல்லவா.
கொஞ்சம்
நினைத்துப்பார்.

ஏவ்.எம்.ஷாஹிரா
கிண்ணியா.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 1772,
கொழும்பு,
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212221811
தொலை நகல் (Fax):
0212221811
ஈ-மெயில்: (E-mail):-
thinamurasu@live.com


## உங்கள் பக்கம்

### மீள் பரசீலனை வேண்டும்

உயர் கல்வி அமைச்சினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள, பல்கலைக்கழகங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி நடாத்த இராணுவ முகாம்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை பல்வேறு மட்டங்களிலும் பல விமர்சனங்களைத் தோற்றுவித்துள்ளதை அவதானிக்கக் கூடியதாவுள்ளது.

இவ்விடயம் பல்கலைக்கழகங்களுக்கு புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள மாணவர்களாகிய எமக்கும் அதிர்ச்சியையும், தெளிவற்ற தன்மையையும் உருவாக்கியுள்ளது. இராணுவ முகாம் சூழல் என்பது இதுவரை காலமும் நாம் வாழ்ந்த சூழலுடன் ஒப்பீடும் போது முற்றுமுழுதாக மாறுபட்ட செயற்பாடுகளைக் கொண்டிருக்கும் என்பதில் மாற்றம் இருக்காது என நம்புகின்றோம்.

குறிப்பாக வடக்கை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் பேசும் மாணவர்களாகிய எமக்கு மொழிப் பிரச்சினையும் பிரதான பிரச்சினையாக இருப்பதால் இராணுவ முகாம்களில் தங்கியிருந்து எமக்கான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வது என்பது உள ரீதியில் தயக்கத்துக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது.

அதேபோன்று எமது பெற்றோர், உறவினர்களும் தலைமைத்துவப் பயிற்சிக்காக இராணுவ முகாம்களுக்கு எம்மை அனுப்புவதற்கு தயக்கம் காட்டி வருகின்றனர். எனவே எம் போன்ற மாணவர்களுக்குத் தோன்றியிருக்கின்ற பிரச்சினைக்கு ஆரோக்கியமான தீர்வைப் பெற்றுத் தருவதற்கு ஜனாதிபதி, உயர் கல்வி அமைச்சர் ஆகியோர், தீர்மானத்தை மீண்டுமொரு பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டுமென தினமுரசின் உங்கள் பக்கம் ஊடாக வினயமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

பல்கலைக்கழக புதுமுக மாணவி, யாழ்ப்பாணம்.

# இலங்கையின் புனர்வாழ்வுப் பணிகளை சிறப்புடன் நிறைவேற்ற கால அவகாசம் தேவை!

### மனித உரிமைப் பேரவையில் அமைச்சர் மகிந்த சமரசிங்க



**மனிதஉரிமைகள் பேரவை அவசரப்படாமல் இலங்கை அரசாங்கம் புனர்வாழ்வுப் பணிகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு சிறிது காலஅவகாசம் வழங்க வேண்டும் என்று மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றிய போதே மகிந்த சமரசிங்க இவ்வாறு தெரிவித்தார். மகிந்த சமரசிங்க தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில், போர் முடிவுற்ற பின்னர் அரசாங்கம் சுமார் 290,000 இடம்பயர்ந்த மக்களை மீள் குடியேற்றுவதற்கே முன்னுரிமை வழங்கி, நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த மக்களுக்கு வசதியான இருப்பிடங்களைப் பெற்றுக் கொடுத்தல், உணவு, பாதுகாப்பு, வாழ்வாதார உதவிகளைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் பின்நிற்க வில்லை. இடம்பெயர்ந்த 95 வீதமான மக்கள் மீள்குடியமர்த்தப் பட்டுள்ளனர்.

ஐ.நா பொதுச்செயலாளர் தமக்கு ஆலோசனை தெரிவிக்கும் குழுவை நியமிக்க முன்னரே அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளது. இந்த ஆணைக்குழுவின் முன் தங்கள் வேதனைகள் குறித்தும் தமக்கு இழைக்கப் பட்ட அநீதிகள் பற்றியும் சாட்சியமளித்துள்ளனர். இவற்றை நன்கு ஆராய்ந்து, இந்த ஆணைக்குழு அந்த மக்களுக்கு உரிய நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு தவறாது என்பதையும் நான் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன். முப்பதாண்டு காலப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயபூர்வமான தீர்வொன்றை ஏற்படுத்தி தொடர்ந்தும் வன்முறைகள் ஏற்படுவதை தவிர்ப்பதே இந்த ஆணைக்குழுவின் நோக்கமாகும்.

இந்த ஆணைக்குழுவின் சில பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் ஏற்கனவே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

ஐ.நாவின் கீழ் நிறைவேற்றப் பட்டுள்ள மனிதஉரிமைகள் சாசனத்தை இலங்கை முறையாகக் கடைப்பிடிக்கும் கடப்பாட்டைக் கொண்டிருக் கிறது. இந்தச் செயற்பாடுகள் பற்றி நாம் காலத்துக்கு காலம் ஐ.நாவுக்கும் அதன் கிளைகளுக்கும் அறிவிக்கவும் தவறவில்லை.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி களுடனும் அங்கத்துவ நாடுகளுடன் நட்புறவுடன் உண்மையான தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் நாம் என்றுமே தயக்கம் காட்டியதுமில்லை. இத்தகைய செயற்பாடுகளின் மூலம் அரசாங்கம் நாட்டு மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சி செய்து வருகிறது.

இலங்கை மக்களை பயங்கரவாதிகளிடம் இருந்து மீட்டெடுக்க ஆயுதப்படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையைத் தரக் குறைவாக மதிப்பீடு செய்தது உண்மையிலேயே வேதனையளிக்கிறது.

ஐ.நாவின் உயர் அதிகாரிகள் பக்கசார்பற்ற முறையிலும் சுதந்திரமாகவும், ஒளிவுமறை வற்ற முறையிலும் செயற்படு வது மிகவும் அவசியம். இந்த அடிப்படைத் தத்துவங்களை அவர்கள் கடைப்பிடிக்காமல் இருந்தால், ஐக்கிய நாடுகள் அமைப்புக்கே பெரும் கண்டனம் எழுவதற்கான வாய்ப்பும் உருவாகலாம்.

இறுதியாக பரஸ்பர கௌரவம், ஒத்துழைப்பு, ஒருவர் கருத்தை மற்றவர் புரிந்து கொள்ளல் ஆகிய நற்பண்புகளுடன் மனித உரிமை ஆணைக்குழுவின் செயற்பாடுகளுடனும், ஐ.நா அமைப்புடனும் அதன் அனைத்துலக கிளை நிறுவனங்களுடனும் நாம் எதிர்காலத்திலும் ஒற்றுமையாக இருக்க விரும்புகிறோம் என்று கூறியுள்ளார்.

## சர்வதேச விசாரணைக்கான பொறிமுறை தேவை என்கிறார் நவநீதம்பிள்ளை அம்மையார்



அதேவேளை இக் கூட்டத் தொடரில் உரையாற்றிய ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையார் ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டியது அவசியம் என வலியுறுத்தியுள்ளார். இதனை இலங்கை அரசு சார்பில் வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிங்கள மாணவருக்கு தமிழ் மொழி

வடக்கில் தமிழ்பிள்ளைகள் சிங்கள மொழியைக் கற்பதைப் போல தென்பகுதியில் வசிக்கின்ற சிங்களப் பிள்ளைகள் தமிழ் மொழியைக் கற்பார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தெரிவித்துள்ளார்.

வடக்கு பாடசாலைகளில் சிங்கள மொழியைக் கற்றுக் கொண்ட தமிழ் மாணவிகளும் தமிழ் ஆசிரியர்களும் அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிங்களப் பிள்ளைகளுக்கு தமிழ் மொழியையும் தமிழ் பிள்ளைகளுக்கு சிங்கள மொழியையும் கற்பிக்க வேண்டும் என 1970ல் நாம் பாராளுமன்றத்தில் கொண்டு வந்த பிரேரணை அன்று நடைமுறைப்படுத்தப் பட்டிருக்குமானால் இனங்களுக்கடையில் புரிந்துணர்வு மேலும் வளர்வதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

## விண்ணப்ப திகதி நீடிப்பு

இந்திய அரசாங்கத்தினால் மலையக மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் புலமை பரிசிலுக்கான விண்ணப் பத்துக்கான இறுதித் திகதி மேலும் ஒரு மாதத்தால் நீடிக்கப்பட் டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலம் அறிவித்துள்ளது. இந்தப் புலமைப்பரிசில் தொடர்பாக மத்திய மாகாண சபை உறுப்பினர் முரளி ரகுநாதன் கோரிக்கையை விடுத்திருந்தார் இந் நிலையில் குறித்த புலமைப்பரிசில் விண்ணப் பத்திற்கான முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

## ஈராக்கில் இலங்கையர் 30 பேர் படுகொலை

ஈராக்கில் பணிபுரியும் இலங்கையர் 30 பேருக்கும் அதிகமானோர் இஸ்லாமிய மதவாதிகளால் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள் ளதாக ஈராக், ஏர்பில் விமான நிலையத்தில் (Erbil Airport) பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் ஈராக்கில் இலங்கையர் வெளியில் நடமாடுவது அச்சத்திற்குள் ளாகி இருப்பதோடு, எவரும் தமது பணிபுரியும் இடங்களில் இருந்து வெளியேறாது பதற்றத்திற்குள்ளாகியுள் ளனர். ஈராக் அரசு, இலங்கையில் இருந்து எவரும் ஈராக் வருவதை தற்காலிகமாக இடைநிறுத்தி யுள்ளது. இலங்கைக்கான DHL பணமாற்று சேவையும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. பதற்ற நிலை காரணமாக ஏர்பில் விமான நிலையத்தில் பணிபுரியும் இலங்கைத் தமிழர்களை, அவர்களது பணியகம் வேறு பாதுகாப்பான இடங்களுக்கு தங்குமிடங்களை மாற்றுக் கொண்டிருப்பதாக, ஏர்பில் விமான நிலையப் பணியாளர்கள் அறிவிக்கின்றனர். வெளியில் இருப்பதும் ஆபத்தானது என கருதுவதால் இலங்கைக்கே வெளியேற உத்தேசித்திருப்பதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

## விபத்துக்களால் மரண வீதம் அதிகரிப்பு

கடந்த வாரம் நாடு பூராகவும் இடம்பெற்ற வீதிவிபத்துக்களில் 209 பேர் காயமடைந்துள்ளதாக மருத்துவ புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த 22 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்த விபத்துக்கள் இடம்பெற்றதாக சுகாதார அமைச்சின் அறிக்கை யொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு காயமடைந்தவர்களுள் 15 பேர் சிறார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 82 எனவும், முச்சக்கரவண்டி விபத்துக்களில் 35 பேரும் காயமடைந்ததாக தெரிவிக்கப்படு கிறது. இதுதவிர, 47 பேர் வேறு பல விபத்துக்களுக்கு முகம்கொடுத்து காயமடைந்துள்ளனர்.

## சுனாமியில் மாண்டவர் பொலிஸாரிடம் மாட்டினார்

நீதிமன்ற வழக்கு விசாரணையில் தப்பிப்பதற்காக சுனாமி அனர்த்தத் தின் போது இறந்துவிட்டதாக அனைவரையும் நம்பவைத்த ஒருவர் குருநாகல் பொலிஸாரிடம் வசமாக மாட்டியுள்ளார். குருநாகல் கொக்குல்ல பிரதேசத்தைச் சேர்ந்த இந்த நபர் தனது இரண்டாவது மனைவியின் முதல் கணவனுக்கு பிறந்த மகளை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக இவருக்கு எதிராக வழக்கு ஒன்று நிலுவையில் இருந்தது. இவ்வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக சுனாமி அனர்த்தத் தினைத் தொடர்ந்து தலைமறைவா கியதுடன் போலி மரணச் சான்றிதழ் ஒன்றையும் சமர்ப்பித்து வழக்கை முடிவுக்கு கொண்டு வந்ததுடன் மரண நஷ்ட ஈடாக 15,000 ரூபாயும் பெற்றுள்ளார். இந்நிலையில் குறித்த நபரை கைது செய்த குருநாகல் பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

## கணினி பயிற்சி

திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்களின் கணினி அறிவை மேம்படுத்தும் நோக்கில் கணினி பயிற்சிப் பட்டறை ஒன்றை வைத்தியசாலை நிர்வாகம் ஒழுங்கு செய்துள்ளது.

நோயாளர் பதிவுகள், கணினி மயப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கணினி அறிவில் வைத்தியசாலை ஊழியர்கள் குறைவாகக் காணப்படு கின்றனர். இதன் காரணமாகவே குறித்த பயிற்சிப் பட்டறை ஒழுங்கமைக் கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் ஈ.ஜி.ஞானகுணாளன் தெரிவித்துள்ளார்.

## ஓமந்தையில் வெடிபொருட்கள் மீட்பு

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கதிரவெளி புரவசிக்குளம் பிரதேசத்தில் வசிக்கும் நபரொருவருக்குச் சொந்தமான கிணற்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் சில வவுனியாப் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன. ஓமந்தை குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து ஓமந்தை பொலிஸாருடன் இணைந்து அவர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இந்த வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:-1772, கொழும்பு.
த.பெ.இல:-167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 021 222 1811
தொலைநகல்(Fax):- 021 222 1811
ஈ-மெயில்(E-mail):- thinamurasu@live.com

## முரசம்

# அனுகுமுறையில் மாற்றம் அவசியம்

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

தனியார் துறையினருக்கான ஓய்வூதியத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சியில் பதினெட்டு பொலிஸார் உட்பட இரு நூற்றி ஐம்பதற்கும் மேற்பட்ட பொது மக்கள் காயமடைந்த சம்மபவமானது கவலைக்குரியதாகும்.

இதில் ஐநூறுக்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் மற்றும் தொழிற்சாலைக்குள் இருந்த தொழிலாளர்கள் பலாத்காரமாக வெளி யில் இழுத்து தாக்கப்பட்டதாகவும் உடனடிச் செய்திகள் தெரிவித்தன.

இச்சம்பவம் நடைபெற்ற அதே நாளில் குறித்த தனியார் ஓய்வூதியத் திட்டத்தை சகல கட்சிகளுடனும் மற்றும் தொழிற்சங்கங்களுடனும் பேச்சு நடத்தி மிகத் திறன் வாய்ந்த தொரு சட்டமூலமாக முன்வைக்கப்படு மெனவும், அதுவரையில் தற்போது முன்மொழியப்பட்டுள்ள உத்தேச ஓய்வூதிய சட்டமூலத்தை தற்காலிகமாக கை விடுவதென்றும் அரசாங்கம் தெரிவித்தது.

கொண்டுவரப்படுகின்ற சட்டமூலங்கள் தமக்கு நன்மையா? தீமையா? என்பதையிட்டு கருத்துச் சொல்லவும் உணர்வுகளை வெளிப்படுத்தவும் மக்களுக்கு உரிமையுண்டு அதை எவரும் தடுக்கவோ ஒடுக்கவோ உரிமையில்லை.

ஆயுத வன்முறைக்கு முகம் கொடுத்து நமது தேசம் சந்தித்த துன்பங்களை நமது பரம்பரையே மறக்காது. எனவே இந்த நாட்டின் பிரஜைகள் எவரும் மீண்டுமொருமுறை ஆயுதம் ஏந்த துணியப்போவதிலை. இருநதாலும் ஜனநாயக மற்றும் அகிம்சை வழியில் தமது உணர்வுகளை வெளிபடுத்துவதை பலாத்காரத்தைக் கொண்டு ஒடுக்க முயல்வதும் அத்தகைய போராட்டங்களுக்கு வன்முறை வர்ணங்களைப் பூசி அணுக முறபடுவதும் ஏற்புடையதல்ல.

சுதந்திர வர்த்தக வலையத்தில் நடைபெற்ற ஆர்ப்பட்டத்தை அணுகப்பட்டவிதம் ஏற்புடையதல்ல. அந்த ஆர்ப்பாட்டத்துக்குப் பின்னால் சிலவேளை அரசியல் சக்திகள் இருக்கக்கூடும் அது யதார்த்தமுமாகும். ஆனால் நேரடியாக பொதுமக்கள் தொடர்புபடுகின்ற பிரச்சனைகளை கையாழுகின்றபோது மிக மிக அவதானமாகவும், நேர்மையாகவும், பக்குவமாகவும் பாகுபாடற்றவிதத்திலும், அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு இடமளிக்காமலும் அமைதல் வேண்டும்.

இன்று கட்டுநாயக்காவில் நடந்தது நாளை நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நடைபெறாது என்பதற்கு யார் உத்தரவாதம் தரமுடியும் என்ற அச்சம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. இது நல்லதல்ல. எனவே இவ்விடயங்கள் குறித்து உரிய தரப்பினர் சரியான நடவடிக்கை எடுப்பதோடு மக்கள் மத்தியில் எழுந்துள்ள அச்சத்தையும் போக்கவேண்டும்.

கட்டுப்பாட்டுக்குள் நிற்காத விலையுயர்வு மற்றும் பொருளாதார நெருக்கடி என்பவற்றுக்கு முகம் கொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கும் நாட்டு மக்களுக்கு இவ்வாறான கசப்பான நிகழ்வுகள் விருப்பத்துக்குரியதாக நிச்சயம் இருக்காது என்பதை புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# இலங்கைக்கு சர்வதேசம் விரிக்கும் சதிவலை

சிவன்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

**புவியியல்** ரீதியில் இலங்கையின் அதைவிட மானது உலக வல்லாதிக்கப் போட்டிக்கு மிகவும் முக்கியமானதாக அமைகின்றது. இந்தியாவிற்குத் தெற்கே இந்துமா சமுத்திரத்தில் அமைந்துள்ள இலங்கை மீது அன்று தொட்டு இன்று வரை சர்வதேசத்திற்கு ஈர்ப்பு இருக்கின்றது.

குறிப்பாக, இந்தியா மீது ஆதிக்கம் செலுத்த விரும்புகின்ற சக்திகளுக்கு இலங்கையின் அமைவிடம் இன்றியமையாததாகும். அதேபோன்று ஆசிய நாடுகளில் தம்மை நிலைநிறுத்திக்கொள்ள விரும்புகின்றவர்களும் முக்கியமானது. எனவேதான் அன்று தொடக்கம் இன்று வரைக்கும் இலங்கை சர்வதேசத்தின் கவனத்திற்கு உரிய நாடாகத் திகழ்ந்து வருகின்றது.

சர்வதேச ஆதிக்க கனவு -ஆக்கிரமிப்பு உணர்வு 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பங்களில் போர்த்துக் கேயர் கீலைத்தேச நாடுகளை வர்த்தக நோக்கத்திற்காக ஆக்கிரமிக்க ஆரம்பித்ததுடன் (பரந்தளவில்) ஆரம்பமா கின்றது.

இந்தியாவை தமது காலனித்து வத்தின் கீழ் கொண்டு வந்த போர்த்துக்கேயர், இந்தியாவில் தம்மைப் பலப்படுத்து வதற்கு இலங்கையையும் தமது கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டனர். போர்த்துக்கேயரைத் தொடர்ந்து வந்த ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என மேற்கத்தேயர்களின் கைகளுக்கு இலங்கையின் இறைமையும் கைமாறிக் கொண்டே இருந்தது. இந்திய மக்களின் சுதந்திர வேட்கை அதிகமாக அவர்களுக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டிய கட்டாயம் ஆங்கிலேயருக்கு ஏற்பட்டபோது, இலங்கை யும் அவசியம் அற்றதாகத் தோன்றியது. அதன் விளைவு இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது.

முதலாம், இரண்டாம் உலக மகாயுத்தங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட சர்வதேசச் சிந்தனைகள், இராணுவ-பொருளாதாரப் போட்டிகள் காரணமாகச் சர்வதேச நாடுகளிடையே ஓர் சதுரங்க ஆட்டம் ஆரம்பமாகியது. அது இன்றும் வரைக்கும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது. இந்தச் சதுரங்க ஆட்டமானது இராஜதந்திரம் என்கின்ற வார்த்தை மூலம் மெரு கூட்டப்பட்டு இருக்கின்றது என்று சொல்லலாம்.

இராணுவ பொருளாதார ரீதியில் அசுர வளர்ச்சியடைந்த அமெரிக்காவிற்குச் சர்வதேச வல்லாதிக்க கனவு ஏற்பட்டதையடுத்து சர்வதேச அளவில் தனது கைகளை விரித்து ஆதிக்கத்தைச் செலுத்த விரும்பியது. அமெரிக்காவின் இக்கனவைக் கீழைத்தேச நாடுகளில் நிறைவேற விடாது சோவியத் யூனியனும், இந்தியாவும் கரம் கோர்த்து, தடைக் கற்களாக இருந்தனர். இந்தத் தடைக்கற்களை அகற்றுவதற்கு இராஜதந்திர ரீதியில் காயநகர்த்திய அமெரிக்கா தலைமையிலான மேற்குலகிற்கு இந்தியா, சீனா, பாகிஸ்தான் ஆகியவற்றிடையேயான பிரச்சினைகள் மூக்கை நுழைப்பதற்கு இடமளித்தன.

பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளும், இந்தியா மீது இருந்த பகையுணர்வு காரணமாக மேற்குலகின் வலைக்குள் தம்மை புகுத்திக்கொண்டன. சோவியத் யூனியன், இந்தியா ஆகியவற்றுக்கு எதிரான வலைப்பின்னலில் இலங்கையின் அமைவிடம் முக்கியத்துவம் பெற்றதாக உணரப்பட்டது. குறித்த இரு நாடுகளுக்கும் எதிராகப் போர் மூழுமா யின் இராணுவக் கலங்களை நிறுத்துவதற்கும், கடல் போக்குவரத்துக் களைப் பாதுகாப்பாக பேணுவதற்கும், போரை ஒருங்கிணைப்பதற்கும் இலங்கை இன்றியமை யாதது என உணரப்பட்டது. இதனால் அபிவிருத்தி, ஒத்தாசை என்ற போர்வையில் அபிவிருத்தி யடைந்து வரும் நாடான இலங்கையினுள் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகு காலபதித்தது. ஜனாதிபதி ஜெயவர்த்தனா தலைமையிலான அன்றைய ஆட்சியாளர்களும் அமெரிக்காவின் உள்வருகையை ஆர்வமுடன் வரவேற்றனர்.

இது இந்தியாவிற்கு எரிச்சலை ஊட்டியது. எனினும் இறைமையுள்ள ஒரு நாட்டின் தீர்மானங் களில் தலையிட முடியாத நிலையில், சம்பவங்களை மிகவும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்த இந்தியாவிற்கும் 83ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரமும், அதற்கு எதிராகத் தமிழகத்தில் ஏற்பட்ட கொந்தளிப்பும் வாய்ப்பாக அமைய, தமிழகத்தைக் காரணம் காட்டி, இலங்கைத் தமிழர் பிரச்சினை ஊடாக இலங்கை விவகாரங்களில் தலையிட்ட துடன், போராட்ட அமைப்புக்களுக்கு (மறைமுகமாக) ஆதரவையும், ஆயுதப் பயிற்சியையும் அளித்து இலங்கை அரசிற்கு தலைவலியை கொடுக்கத் திட்டமிட்டது.

இந்தியாவின் ஆசீர்வாதத் துடன் வளர்ச்சியடைந்த ஆயுதப் போராட்டம் சுயநினைவிழந்து தங்களுக்குள் முட்டி மோதி, இந்தியாவையும் பகைத்து, தம் இனத்தை அழித்து, இறுதியில் இந்தியாவின் ஆசீர்வாதத் துடனேயே அழிக்கப்பட்டு விட்டது. இது தமிழர் தரப்பின் துரதிர்ஷ்டம்!

அது அவ்வாறிருக்க, சோவியத் யூனியன் சிதறி, சின்னாபின்னமாகிப் போக, இந்தியா, சீனா போன்ற நாடுகள் மேற்குலகிற்கு அச்சமூட்டும் வகையில் ஒன்றுக்கொன்று போட்டியாகப் பொருளாதார- இராணுவ ரீதியில் வளர்ச்சியடைய ஆரம்பித்து விட்டன- வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றன.

அமெரிக்கா தலைமையி லான மேற்குலகு கீழைத் தேசத்தில் ஆதிக்கம் செலுத்த விரும்பி காய்களை நகர்த்திக் கொண்டிருக்கையில், சீனாவிற்கும் இந்தியாவிற் கும் இடையில் ஆசியாவின் ஆதிக்கத்தை தம்வசப் படுத்தும் போட்டி வீரியம் பெறத் தொடங்கிவிட்டது.

இந்த சர்வதேசப் போக்கினுள் இலங்கையின் அரசியல் பிரச்சினைகளையும் ஆயுதப் போராட்டமும் சிக்கிக்கொண்டது. இந்நிலையில் 2005 ஆம் ஆண்டு அதிகாரத்திற்கு வந்த மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு, இந்த சர்வதேச நெருக்குப்பாடுகளை தந்திரமாகக் கையாண்டு கொண்டது. யாருக்கும் பிடிகொடாமல், அதேநேரம் யாரையும் நேரடியாகப் பகைத்துக்கொள்ளாமல் எங்கிருந்தெல்லாம் அறு வடை செய்ய முடியுமோ அனைத்தையும் அறுவடை செய்து தமது பிரதான தலையிடியான புலிகளை அடியோடு அழித்து முடித்துவிட்டது.

கடந்த முப்பது வருடங்க ளாக இலங்கையைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க சர்வதேசம் பயன்படுத்திய உள்நாட்டு போர், புலிகள் என்கின்ற பிடிகள் இல்லாமல் போயுள்ள நிலையில், சர்வதேசம் தற்போது கையில் எடுத்திருப்பது சர்வதேசப் போர்க் குற்றங்கள்!

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு, அதற்கு முன்னைய அரசுகள் போன்று மேற்குலகின் நிகழ்ச்சி நிரலுக்கு முற்றுமுழுதாக இழுபட்டுச் செல்லவில்லை. இது, தற்போதைய அரசு மீது மேற்குலகிற்குச் சற்று அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் மேற்குலக நாடுகளில் இருக்கும் புலி ஆதரவு புலம்பெயர் தமிழர்களின் அழுத்தமும் மேற்குலகின் தேவைக்கு வாய்ப்பாக அமைவதால், தமது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்ற ஐ.நா சபையின் செயலர் பான் கீ மூனுக்கு ஊடாக ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டு இலங்கை அரசு எதிராக அறிக்கையையும் தயாரித்துள்ளது.

நிபுணர் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட அறிக்கைக்கு ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்காவும் தமது ஆதரவை வழங்கியுள்ளன. எனினும், அந்த அறிக்கையை மட்டும் வைத்துக்கொண்டு எவ்வித நடவடிக்கையை யும் ஐ.நாவினால் மேற்கொள்ள முடியாது. அடுத்த கட்டமாக சர்வதேச விசாரணை, அழுத்தங்களை இலங்கைக்கு எதிராக ஐ.நா. பிரயோகிக்க வேண்டுமாயின், சர்வதேச மனித உரிமைகள் பேரவை, பாதுகாப்புச் சபை ஆகியவற்றில் ஏதாவது ஒன்றின் அங்கீகாரம் தேவை. அந்த அங்கீகாரம் கிடைப்பதைத் தடுப்பதற்கு ‘வீட்டோ’ அதிகாரம் உடைய ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் இலங்கைக்குச் சார்பாக இருக்கின்றன. இது இலங்கை அரசிற்கு மிகப்பெரிய பலம் -ஆறுதல்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

> **எந்தத் தரப்பினருடன் பகைத் துக் கொண்டாலும், வெட்டி விட்டாலும் எதிர்காலத்தில் பொருளாதார அபிவிருத்தி ரீதியில் பாரிய பின்னடைவை களைச் சந்திக்க நேரிடும். அதேவேளை ஏனைய தரப்பிடம் முற்றுமுழுதாக தஞ்சமடைந்து அவர்களின் தாளத்திற்கு ஆட வேண்டி ஏற்பட்டு விடும். இதனை இலங்கை அரசு நன்றாக உணர்ந்து கொண்ட நிலையிலேயே காய்களை நகர்த்தி வருகிறது**

# இராணுவப் பாசறைக்குள் தலைமைத்துவப் பயிற்சி!

**அமலன்**

**இலங்கையில்** இன்று பல்வேறு சவால்கள் அரசாங்கத்தின் மீது குவிந்துக்கிடக்கின்றன.

பான் கீ மூனின் நிபுணர் குழுவின் அறிக்கை, அதன் பின்னர் அமெரிக்கா, இந்தியா உட்பட்ட நாடுகளின் அழுத்தம், ஜெனீவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை அமர்வு, பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வேதன உயர்வுப்போராட்டம், தனியார் ஓய்வூதியத் திட்டம் உட்பட்ட பல சவால்கள், இலங்கை அரசாங்கத்துக்கு முன்னிருக்கும் சவால்களான இருக்கின்றன.

இவற்றை அரசாங்கம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஒருங்கே நின்று சமாளித்து வருகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இந்தமுறை இலங்கை தொடர்பில் விடயதானங்கள் எவையும் கொண்டு வரப்படவில்லை என்ற தகவல்கூட அரசாங்கத்தின் இராஜதந்திரத்துக்கு கிடைத்த வெற்றி என்று ஆங்கில செய்தித்தாள் ஒன்று கூறியுள்ளது.

இவ்வாறான சமாளிப்புக்களுக்கு மத்தியில் இலங்கை அரசாங்கம், மற்றும் ஒரு சவாலான விடயத்திலும் தமது கவனத்தை செலுத்தியுள்ளது. அதுதான், பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி என்ற விடயமாகும். இந்தவிடயம் தலைமைத்துவப்பயிற்சி என்ற சாதாரண நிலையில் இருந்து பார்க்கும்போது பெரிதாக தோற்றவில்லை.

இலங்கையில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு அது அவசியமான தொன்றாகவே கருதப்படுகிறது. பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாத்திரமல்ல. பாடசாலை மாணவர்களுக்கும் அத்துடன் பாடசாலை ஆசிரியர்களுக்கும், அதற்கப்பால் அரச திணைக்கள அதிகாரிகளுக்கும் தேவையான ஒன்றே.

ஆனால் இலங்கையில் முதன்முறையாக இந்த தலைமைத்துவப்பயிற்சி இராணுவ முகாம்களில் வைத்து வழங்கப்படுவதே குழப்பத்தை தோற்றுவித்துள்ளது. சர்வதேசம் இலங்கையின் படையினர் குறித்து குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது. அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு அரசாங்கம் இன்னும் உரிய பதிலை வழங்கவில்லை.

மறுபுறத்தில் படையினர் என்போர் போர் மற்றும் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுபவர்கள் என்ற தோரணையிலேயே இலங்கை மக்களால் பார்க்கப்படுகிறார்கள். இதனை தவிர்த்து ஏனைய நாடுகளை போல படையினரும் பொதுமக்களுடன் இணைந்த சேவையை அல்லது பொதுமக்கள் படையினர் தொடர்பில் வித்தியாசமான கண்ணோட்டத்தை செலுத்தாமல் இருந்திருந்தால் அது இந்த தலைமைத்துவ பயிற்சி விடயத்தில் பிரச்சினையை ஏற்படுத்தியிருக்காது.

ஆனால் சுமார் 30 வருட யுத்தம் முடிவடைந்த கையோடு, படையினருக்கு சிங்களவர்கள் மத்தியில் உள்ள செல்வாக்கை பயன்படுத்தி இந்த தலைமைத்துவ பயிற்சிக்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

எனவே இதனை பல்கலைக்கழக மாணவர் சமூகம் வித்தியாசமாகவே பார்க்கிறது.

இதனை தலைமைத்துவ பயிற்சி என்று பார்க்காமல் மாணவர் சமூகம் தம்மை கட்டுப்படுத்துவதற்கான உத்தி என்றே கருதுகிறது.

எனவேதான் படையினருக்கு எதிராக சிங்கள மக்களின் ஒரு பிரிவினர் மத்தியில் இருந்தே தேவையற்ற கருத்துக்களை இந்த தலைமைத்துவ பயிற்சி கொண்டு வந்துள்ளது.

அனைத்துப்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், படையினரின் நடவடிக்கைகளில் திருப்தியற்ற நிலையில் உள்ளதை தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. எனவே படையினரை நம்பி மாணவ மாணவிகளை எவ்வாறு முகாம்களுக்குள் தங்கவைக்கமுடியும் என்ற கேள்வியை அது எழுப்பியுள்ளது.

தலைமைத்துவ பயிற்சிகளை இராணுவ முகாம்களுக்கு வெளியே நடத்தினால் எந்தப்பிரச்சினைகளும் ஏற்படாது என்று தமிழ்த்தரப்பும் தெரிவித்துள்ளது. இதனைவிட அண்மையில் படையினர் மாத்தறையில் நீதவான் ஒருவரை தாக்கிய சம்பவம் உட்பட்ட பல்வேறுப்பட்ட சம்பவங்கள், படையினரை கொண்டு மேற்கொள்ளப்படும் இந்த தலைமைத்துவப்பயிற்சி தொடர்பில் பொதுமக்களை கேள்வி எழுப்பச்செய்துள்ளது எனலாம்.

மறுபுறத்தில் இலங்கையில் உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் படையினர் தொடர்பில் இருக்கும் பயம், சந்தேகம் இன்னும் நீங்கவில்லை. இதற்கு முக்கிய காரணம் இலங்கையின் படைகளில் 99 வீதமானோர் சிங்களவர்களாக இருப்பதாகும்.

இந்தநிலையில் நாட்டில் போர் ஒன்று முடிவடைந்த இரண்டு வருடங்களில் தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவர்கள், படையினரின் முகாம்களுக்கு சென்று தலைமைத்துவ பயிற்சியை பெறுவது சிக்கலான விடயமாகவே பேசப்படுகிறது. படையினர் தொடர்பாக தமிழர்கள் மத்தியில் இன்னும் புரிந்துணர்வு ஏற்படவில்லை. அதேபோல தமிழ் சமூகம் தொடர்பில் இன்னும் படையினருக்கு புரிந்துணர்வு ஏற்படவில்லை இது யதார்த்தமான விடயமுமாகும்.

இந்தநிலையில் தலைமைத்துவ பயிற்சிக்கு செல்லும் புகுமுக தமிழ் மாணவர்கள் தயக்கம் காட்டுவதில் நியாயம் இல்லை என்று கூறிவிடமுடியாது.

எனவே இங்கு படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் புரிந்துணர்வு என்பது மிகவும் அவசியமான ஒன்றாக கருதப்படுகிறது.

போர் முடிவடைந்து அரசாங்கம் கூறுவதுபோல, படையினர் நாட்டின் அபிவிருத்திப்பணிகளில், பொதுமக்கள் சேவைகளில் ஈடுபடும் போது, அவர்கள் ஆயுதங்கள் இன்றி, பொதுமக்கள் மத்தியில் செல்லும்போதே மக்களுக்கு படையினர் மீது உள்ள சந்தேகம், பயம் நீங்கும்.

அவ்வாறான நிலையில் படையினரின் தலைமைத்துவப்பண்புகளை பொதுமக்கள் தாமாகவே ஏற்றுக்கொள்வர்.

அவர்களே முன்வந்து படையினரின் தலைமைத்துவ பயிற்சிகளை பெற்றுக்கொள்ள விருப்பம் தெரிவிப்பார்கள்.

தமது பிள்ளைகளையும் இந்த பயிற்சிகளை பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் அனுமதிப்பார்கள்.

தற்போது தலைமைத்துவ பயிற்சிக்காக சென்ற பல மாணவர்கள், இந்த பயற்சியை பெற்றுக் கொள்ளாவிட்டால் தமது பல்கலைக்கழக அனுமதி ரத்தாகிவிடும் என்ற அச்சத்திலேயே அதில் பங்கேற்றுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

எனவே பயமுறுத்தி ஒரு பயிற்சியை வழங்குவதை விட தாமாகவே முன்வந்து பயிற்சியை பெற்றுக் கொள்வதே சமூகத்துக்கு ஆரோக்கியமான விடயமாக அமையும்.

அதனை அரசாங்கம் உரியமுறையில் செயற்படுத்த முன்வருமானால், படைகளில் மூன்று இனத்தவரையும் இணைத்துக்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்குமானால் இவ்வாறு பாரிய முனைப்புகளும் இந்த பயிற்சி விடயத்தில் அவசியமில்லை.

எனவே இனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு, படையினர் தொடர்பில் மக்கள் மத்தியில் உள்ள புரிந்துணர்வு என்பனவே எதிர்காலத்தில் அரசாங்கத்தின் தலைமைத்துவ பயிற்சியின் வெற்றிக்கு வழிவகுக்கும்.

இல்லையேல் இந்த பயிற்சியை வெற்றிகரமாக கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்படும்.

பல்லின சமூகம் ஒன்றுக்கு மத்தியில் சேவையாற்றும் படையினரின் பண்புகள் உயரும் போது அந்த சமூகங்கள் மத்தியில் படையினர் தொடர்பான அபிப்பிராயங்களிலும் முன்னேற்றத்தை காணக்கூடியதாக இருக்கும்.

அதில் மட்டுமே அரசாங்கத்தின் தலைமைத்துவ பயிற்சி திட்டத்தின் வெற்றி தங்கியுள்ளது.

# பயங்கரவாதமாய் தலைதூக்கும் வீதி விபத்துக்கள்

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**

**நமது** நாட்டில் ஒவ்வொரு நான்கு மணித்தியாலத்திற்கும் ஒருவர் என்ற அடிப்படையில் வாகன விபத்துக்களில் சிக்கி தமது உயிரைப்போக்கிக் கொள்கின்றார்கள் என்ற திடுக்கிடும் தகவல் வீதிகளில் பயணிக்கும் நம்மில் எத்தனை பேருக்குத் தெரிந்திருக்கிறது என்பதில் தெளிவில்லை.

அந்த அடிப்படையில் பார்த்தால் நாளொன்றிற்கு ஆறு பேரும், ஒரு மாதத்தில் சுமார் 180 பேரும், ஒரு வருடத்தில் அண்ணளவாக 2040 பேரும் உயிரிழக்கின்றனர். கடந்த பத்து வருட காலப்பகுதிக்குள் பதினெட்டாயிரத்திற்கு மேற்பட்டோர் வீதி விபத்துக்களினால் காவுகொள்ளப்பட்டிருக்கிறார்கள். வீதி விபத்துக்கள் சாதி சமயம் பார்த்தோ மொழி பிரதேசம் அல்லது பால் வயது வித்தியாசங்களின் அடிப்படையிலோ நிகழ்வதில்லை.

இது பயங்கரவாதத்தை விட கொடியது என்றுதான் கொள்ளப்பட வேண்டும். காரணம் சிலவேளை நாம் பயங்கரவாதத்தின் இலக்குகளிலிருந்து தப்பித்துக் கொள்ள முடிந்தாலும்கூட இத்தகைய முன்னெச்சரிக்கை தராத கொடிய வீதி விபத்துக்களிலிருந்து தப்பிக்கவே முடியாது போய்விடும்.

அதனால்தான் ஜனாதிபதியின் கரிசனையில் இந்த விடயம் அதிக முக்கியத்துவத்திற்குரிய விடயமாக மாறியிருக்கிறது. சமீபத்தில் கொழும்பில் இடம்பெற்ற தேசியப் போக்குவரத்து பாதுகாப்பு ஆணைக்குழுவின் மாநாட்டில் அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் அங்கு சமூகமளித்திருந்த எல்லோர் கவனத்திற்கும் இந்த விடயத்தைக் கொண்டுவந்திருந்தார்.

முறையற்ற கெடுதலான வாகனமோட்டும் நடத்தைகளைப் பற்றி விவரித்த ஜனாதிபதி அவர்கள், அவருக்கேற்பட்ட கோரமான வாகன விபத்தொன்றிலிருந்து தான் தெய்வாதீனமாக உயிர் தப்பிய நிகழ்வையும் நினைவு கூர்ந்தார்.

ஒரு முறை நான் இரத்தினபுரிப் பகுதில் பயணித்துக் கொண்டிருக்கும் போது என்னுடைய வாகனம் கோர விபத்தொன்றிலிருந்து தெய்வாதீனமாக தப்பித்துக் கொண்டது. ஆயினும் அதிவேகமாக வந்த ஒரு பஸ் வண்டி என்னுடைய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பயணித்த வாகனத்தை மோதியதால் அதில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நான்கு பேரும் அதே இடத்தில் கொல்லப்பட்டார்கள்.

இந்த விபத்து நடந்து மூன்று மாதத்தின் பின்னர் அதே பஸ் வண்டி அதே வேகத்துடன் அதே இடத்தைக் கடந்து போய்க்கொண்டிருந்ததை நான் அவதானித்தேன். இதற்கெல்லாம் காரணம் கவனயீனமேயாகும், என்று குறிப்பிட்ட ஜனாதிபதி அவர்கள் பிரதான பாதைகளில் வேகமாகச் செல்வதையும் பொதுமக்களை வாகனங்களால் அடித்துக்கொல்வதையும் நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இவ்வாறான விபத்துக்கள் ஏற்படாது அதற்கான வழிவகைகளையும் சட்ட ரீதியிலான வழிவகைகளையும் நாம் எடுக்க வேண்டியிருக்கிறது. அது எமது கடமையுமாகும் என்று வலியுறுத்தினார்.

ஏற்கெனவே மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் மீது பொலிசார் அதிக கவனம் செலுத்தியிருக்கின்றார்கள். அதுபோல தற்போது அதிவேகமாக, சாரதி அனுமதிப்பத்திரமில்லாமல் வாகனங்களைச் செலுத்துவோர் மீதும் பொலிசார் அதிக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கூறுகின்றேன் என்றும் ஜனாதிபதி பொலிசாரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

விபத்துக்கள் எவ்வாறு ஏற்படுகின்றன என்பதை தெளிவுபடுத்திய ஜனாதிபதி அவர்கள், ஒன்று சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாது வாகனங்களை வேகமாகச் செலுத்துவது, இன்னொன்று வாகனத்தை முந்திச்செல்ல எத்தனிப்பது, அடுத்தது பிழையான வழியில் வாகனங்களைச் செலுத்துவது, திருப்ப வேண்டிய இடங்களில் வேகமாகத் திருப்புவது போன்ற காரணங்களை நாம் குறிப்பிடலாம். சாரதிகளுக்கு இதுதொடர்பாகப் பயிற்சியளிக்க வேண்டும்.


இதற்கிடையில் லொறிகளினாலும் பஸ்வண்டிகளினாலும் இதர மோட்டார் வாகனங்களினாலும் ஏற்படும் விபத்துக்கள்தான் ஏராளம் என அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றும் ஜனாதிபதி சொன்னார்.

விபத்துக்கள் ஏற்படுவதற்கான வேறு பல காரணங்களையும் விளங்கப்படுத்திய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள், இது இவ்வாறிருக்க இன்னொரு பக்கம் நாம் எமது குழந்தைகளையும், இளம் பராயத்தினரையும் பாதைகளில் அவதானமாகப் பயணிப்பதற்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். பொது மக்கள் எவ்வாறு பாதைகளில் பயணிக்க வேண்டும் என்பதை விளக்க வேண்டும்.

அக்கம் பக்கம் பார்க்காமல் கையடக்கத் தொலைபேசியைக் காதில் வைத்துக் கொண்டு எம்மில் ஏராளமானோர் பயணம் செய்கின்றோம்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# சிறுவர்களில் காசநோய்



**சிறுவர்களில் காச நோய் ஏற்படுத்தும் பாதிப்புக்கள்**

சிறுவர்களில் காசநோய் தொற்றலினை அறியப் பல அம்சங்கள் கவனத்தில் எடுக்கப்படுகின்றது. குழந்தைகளில் தொடர்ச்சியாகக் காணப்படும் காய்ச்சல், இருமலின் காலம், போசணை நிலை, குடும்பத்தில் காசநோய் உள்ளமை என்பன கருத்தில் எடுக்கப்படும். மேலும் காசநோய்க்கான தோல் சோதனை, நிணநீர்க் கணுவீக்கம் என்பன கருத்தில் எடுக்கப்படும்.

பிறந்த உடன் போடும் பி.சி.ஜி. தடுப்பு ஊசியினால் மூளைக் காசம் போன்ற நோய்கள் ஏற்படுவது தவிர்க்கப்படும். பி.சி.ஜி. தழும்பு பிள்ளைகளில் ஏற்படாவிடின் 6 மாதம் தொடக்கம் 5 வயது வரையான பிள்ளைகளுக்கு மீளவும் பி.சி.ஜி. தடுப்பு மருந்து ஏற்றல் அவசியம்.

தகுந்த முறையில் சிகிச்சை அளிப்பதன் மூலம் காசநோயைக் குணமாக்கலாம்.

சிறுவர்களுக்கான காசநோய்த் தடுப்பு மருந்துகள்

(RHZ) - றைபம்பிசீன் - 60mg
-ஐசோநியேசைட் -30mg
-பிரசினமைட் -150mg

(RH) -றைபம்பிசீன் 60mg
ஐசோநயசைட் - 30mg


**குழந்தைகளில் காசம் வராது தடுப்பது எப்படி?**

- காசநோயாளியின் அரவணைப்பில் உள்ள குழந்தை மற்றும் போசனை குறைந்த குழந்தைகளில் காசநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்கும். இவர்கள் வைத்திய பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.
- குழந்தை பிறந்து 24 மணித்தியாலத்திற்குள் (BCG) பீ.சீ.ஜீ. காசநோய்த் தடுப்பூசி பெற்றுக் கொள்ளுங்கள். வீட்டில் பிறந்த குழந்தையாயின் உடனடியாக மருத்துவ மாதுவை நாடி ஊசி ஏற்றிக் கொள்ள வேண்டும். குழந்தைகளில் காசம் ஏற்படுவது தவிர்க்கப்படுகின்றது.
- இடதுகையில் 6 மாதங்களின் பின்பும் தழும்பு ஏற்படாத குழந்தைகளுக்கு 5 வயதுவரை மீள ஊசியேற்றலாம். இவ்வாறு மீள ஊசி ஏற்றுவதன் மூலம் உங்கள் மழலைகளைக் காத்துக் கொள்ளமுடியும்.
- காசநோய்த் தடுப்பூசி முற்றிலும் இலவசமாகவே வழங்கப்படும்.

சிறுவர்களில் காசநோய்த் தொற்று நெருங்கிய உறவினர்களில் சளியில் கிருமி உடைய காசநோய் ஏற்படும் போது ஏற்படுகின்றது. எனவே, ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் பெற்றோர், சகோதரர்கள் மற்றும் வீட்டில் உள்ள உறவினர்களில் காசநோய் ஏற்படும்போது, குழந்தைகளிற்கும் காசநோய் ஏற்பட்டு உள்ளதா எனப்பரீட்சித்து அவ்வாறு ஏற்படாதவிடத்து ஐசோநியசிட் மருந்தினை தடுப்பு மருந்தாக 6 மாதங்களில் அளிக்குமாறு உலக சுகாதார நிறுவனம் சிபாரிசு செய்துள்ளது.

Dr. சி. ஜமுனானந்தா

# பெண்களில் காசநோய்



பொதுவாக பருவமடைதலுக்குப் பின், உடலில் ஏற்படும் ஓமோன்களின் மாற்றத்தினாலும், நோய்த் தொற்றுக்கு ஆளாகும் நிலை ஏற்படலாம். இதன்போது பாடசாலை, வேலைத்தளங்களில் இவர்கள் நோய்த்தொற்றுக்கு ஆளாகின்றனர்.

பிள்ளைப்பேறை எதிர்பார்க்கும் தாய்மார் உடற்திணிவுச்சுட்டி 18ஐ விடக் குறைவாகக் காணப்படின் காசநோய்த் தொற்றுக்கு உரிய பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் தாய்மை அடைந்தவர்களும், பாலூட்டும் தாய்மார்களும் காசநோய்த்தொற்று என அடையாளம் காணப்படும் இடத்து, நோய்க்குரிய சிகிச்சையினை பெறல் வேண்டும். இதனால் முற்றாகக் குணமடையலாம். பாலூட்டும் தாய்மார் தொடர்ந்து குழந்தைகளுக்கு பாலூட்டல் வேண்டும். தாயினை சேயிலிருந்து பிரித்தல் கூடாது.

திருமணமான பெண்கள் காசநோய் ஏற்பட்டால் எவ்வித பயமுமின்றி மருந்துகளை எடுப்பதால் பூரணமாக குணமடைந்து விடுவார்கள். எனவே, மற்றையவர்களிற்கு தெரிந்துவிட்டது அல்லது தெரியவரும் என மருந்தினை எடுக்காது விடல் ஆகாது. காசநோய் தொடர்பான சமூக வடு முன்னைய காலத்தில் இருந்தால் அதாவது "இந்நோய் மாற்றமுடியாது. **இந்நோய் பரம்பரை நோய்;; என்று கருத்து கிராம மக்களிடையே இருந்தது. இவை யாவும் தவறானவையாகும்.** மேலும் எம்மில் ஒவ்வொரு 3 பேரில் ஒருவருக்கு காசநோய்த்தொற்று உள்ளது. ஆனால் நோய் ஏற்படுவதில்லை. எமக்கு காசநோய் ஏற்படுவதற்கு எமது ஆயுள் காலத்தில் 3.33 வீதம் நிகழ்தகவு உள்ளது. எனவே, காசநோய் ஏற்படும்போது இளம் பெண்கள் எவ்வித தயக்கமும் இன்றி உடனடியாகச் சிகிச்சைக்கு முன்வருவதே மிகவும் சிறந்தது. இலங்கையில் ஆண்களில் காசநோய் ஏற்படுவதனைவிட பெண்களில் 5 வீதம் குறைவாகவே ஏற்படுகின்றது.

(தொடரும்...)

# கண்ணதாசனின்
## அர்த்தமுள்ள இந்துமதம்

பாகம் - 09

171



**இச்சா** பத்தியம்

யோகப் பயிற்சிகளில் ஒரு வகையான பயிற்சி உண்டு.

உடல் வலிமையுள்ள ஒருவன், தனியான ஒரு இடத்தில் ஒரு பெண்ணின் பக்கத்தில் படுத்திருந்தாலும், அவளைத் தொடாமலேயே இருக்கும் பயிற்சி அது.

'இல்லறத்தில் பிரமச்சரியம்' என்று இதனைக் காந்தியடிகள் விபரித்தார்கள்.

இப்போது அமெரிக்காவில் இந்து ஞானிகளைச் சுற்றிலும் அமெரிக்கர் கூட்டமே அதிகமாக இருக்கிறது என்பதும் நமக்குத் தெரியும்.

அங்கே ஒரு இந்து ஞானி, ஒரு யோகப் பயிற்சியைத் தொடங்கி வைத்திருப்பதாக 'டைம்' பத்திரிகையில் படித்தேன். அதன் புகைப்படத்தையும் அதில். பார்த்தேன்.

ஆறு ஆண்களும் ஆறு பெண்களுமாகப் பன்னிரண்டு பேர் நிர்வாணமாக நிற்கிறார்கள். அவர்கள் ஒரு வட்ட வடிவத்தில் நின்று கொள்கிறார்கள். அதிலும் ஒரு ஏரியில் இடுப்பளவு தண்ணீரில் நிற்கிறார்கள். ஒருவர் தோள் மீது ஒருவர் கை போட்டுக்கொள்கிறார்கள். எல்லாருடைய அங்கங்களும் திறந்திருக்கின்றன. இந்த நிலையில் ஒருவர் மீது மற்றவருக்கு ஆசை ஏற்படாதவாறு பயிற்சி செய்கிறார்கள்.

நான் பல இடங்களில் குறிப்பிட்டது போல, 'இயக்கத்தில் இயலாமை, 'இருந்தும் இல்லாமை,' கிடைத்தும் ஏற்றுக்கொள்ளாமை.' என்பது இதுவே.

இதை யோகாசனம், என்பதைவிட 'மோகாசனம்' என்பது பொருந்தும்.

மனிதனது உணர்ச்சிகளில் சீக்கிரம் தூண்டப்படக் கூடியது. 'பாலுணர்வு' ஒன்றே.

பசியும் ஒரு உணர்ச்சிதான். அதிலுருந்து தற்காத்துக்கொள்ளலாம்.

மனிதனுடைய தன்னடக்கத்தை மீறி எந்த உணர்ச்சியும் எழுந்துவிடுவதில்லை.

ஆனால், காமம் எந்த மேதையையும் முட்டாளாக்கிக் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கும்.

கிடைக்காத பெண்ணுக்கே ஏங்குகின்ற உலகத்தில் கிடைத்துவிட்ட பெண்ணை அனுபவிக்காமல் இருக்கப் பயிற்சி பெறவேண்டும்.

அதன் பெயரே, 'இல்லறத்தில் பிரமச்சரியம்!'

சித்தர்கள் இதனை, 'இச்சா பத்தியம்' என்பார்கள்.

காந்தியடிகள் பிற்காலங்களில் அப்படி வாழ்ந்து காட்டினார்.

அவருக்கு முன்னால் பரமஹம்சர் வாழ்ந்து காட்டினார்.

செயலற்ற நிலையில் பலவீனமான மனிதன், 'நான் என் மனைவியைச் சகோதரியாகப் பாவிக்கிறேன்' என்றால், அது 'திராணி' இல்லாததால் வந்த தத்துவம்.

உடல் கெடாமல் உள்ளத்தில் உணர்ச்சி மேலோங்கிய நிலையில், அந்த அடக்கம் தோன்றி விடுமானால், அதுவே ஆன்மாவைப் புடம்போட்ட ஞானம்.

தேகம் ஆன்மாவை வென்றுவிடும். தறிகெட்டு ஓடும்.

ஆன்மா அதை வெல்ல முடியுமானால் அதுவே அற்புதமான யோகம். விவேகானந்தரைப் போன்ற இளம் துறவிகளை இன்னும் இந்து மதத்தில் காண்கிறோம். கிறிஸ்துவ மதத்திலும் அப்படிப்பட்ட சகோதரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லா மனத்தாலும் உடம்பை அடக்கியவர்கள்.

அடக்க முடியாமல் கெட்டுப்போய் ஞானிகளானவர்கள் எல்லாம். 'உடம்பு' என்னை ஆட்டிப் படைக்கிறதே' என்றுதான் எழுதியிருக்கிறார்கள்.

எனக்குத் தெரிந்தவரை தமிழகத்தில் இருந்த பிரமச்சாரிகளில் மிக முக்கியமானவர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள். பெண் வாடையே இல்லாமல் இல்லாமல் வாழ்ந்தவர் அவர்.

உடம்பின் சுக்கிலத்தை உடம்புக்குள்ளேயே வைத்திருந்து மீண்டும் இரத்தத்திலேயே கலந்து விடுமாறு செய்யும் யோகத்தை அவர் மேற்கொண்டிருந்தார்.

அவரது உடம்பின் பளபளப்புக்குக் காரணம் அது தான் என்று சொல்வார்கள்.

ஆனால் அப்படிப்பட்ட நைஷ்டிக பிரமச்சாரிகள் நீண்ட நாள் வாழ்வதில்லை.

ஒரு குறிப்பிட்ட காலம் வரை இல்லறத்தில் வாழ்ந்த பிறகு, அனுபவித்த மனைவியையே சகோதரியாகப் பாவிக்கும் பாவனையையே நான், "இச்சா பத்தியம்' என்று குறிப்பிடுகிறேன்.

காம உணர்ச்சி ஒருவனுக்கு இல்லாவிட்டாலும் கூட, அவனுடைய உணவு முறையின் மூலம் தூக்கம் பிடிக்காத நிலை ஒன்று ஏற்படும். விபரீத சிந்தனைகள் தோன்றும்.

அதனால்தான் இந்துக்கள், 'தனியாக இருக்கும் ஆடவர்கள் குப்புறப்படுக்கக் கூடாது' என்றும், 'பெண்கள் மல்லாந்து படுக்கக் கூடாது என்றும் கூறுவார்கள்.

இதனை அறிந்துள்ள எந்த இந்துப் பெண்ணுமே மல்லாந்து படுப்பதில்லை. ஒருக்கணித்துத்தான் படுப்பாள்.

இந்து மதத்தின் சாது சந்நியாசிகள் அந்நாளில் தலைக்குத் தலையணை வைக்கக் கூடாது என்ற விதி இருந்தது.

சாதாரணமாகச் செதுக்கப்பட்ட மரக்கட்டையைத்தான் தலைக்கு வைத்துக்கொண்டு படுப்பார்கள்.

ஒருவகை மரத்தில் செய்யப்பட்ட கட்டையைத்தான் செருப்பாகப் பயன்படுத்துவார்கள். மெத்தென்று தோல் செருப்பு அணியமாட்டார்கள்.

ராமகிருஷ்ண பரமஹம்சரும் காந்தியடிகளும் உணவைக் குறைத்ததற்குக் காரணமே, 'இல்லறத்தில் பிரமச்சரிய'த்தை அனுஷ்டிப்பதற்குத்தான்.

இதைக் காந்தியடிகளே ஒருமுறை கூறி இருக்கிறார்.

ஒருமுறை பரமஹம்சரின் சீடர்கள் அவரைப் பார்ப்பதற்காக அவர் தங்கும் இடத்திற்கு வந்தார்கள்.

அப்பொழுது நள்ளிரவு.

பகவான் தேவியாரோடு உள்ளே இருந்தார். 'ஐயோ! இந்த நேரத்தில் வந்துவிட்டோமே, அவரது சந்தோஷத்தைக் கெடுத்துவிட்டோமே என்று அந்த இளம் உள்ளங்கள் பயந்தன.

அவர்களுடைய நினைப்பு, பகவான் தேவியாரோடு சல்லாபித்துக்கொண்டிருப்பதாக,

திடீரென்று வெளியே வந்தார் பரமஹம்சர், அவர்கள் சொல்லாமலே அவர்களது பயத்தை உணர்ந்தார்.

மெல்லச் சிரித்துக்கொண்டே, 'நான் தேவியின் அருகே இருந்தாலும் தெய்வத்தின் அருகில் தான் இருக்கிறேன்' என்றார்.

தொடரும்...



# வெட்டிய குழிக்குள் வீழ்ந்தது கூட்டமைப்பு

**அலசுவது**
**- மதியூகி -**

> புலிகள் இருந்தவரை புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று கூறியவர்கள் இப்போது தாமே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று கூறிக் கொள்கின்றனர். புலிகள் பெற்றுத் தருகின்ற தீர்வு எதுவாக இருந்தாலும் அது உயர்ந்த பட்சமானதாக இருக்கும் என்று கூறிய கூட்டமைப்பினர் புலிகள் தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுத்த முள்ளிவாய்க்கால் தீர்வை ஏற்றுக் கொண்டு மொட்டை போட்டு சந்தனம் பூசிக் கொண்டு தமிழ் மக்களிடம் மன்னிப்புக்கேட்டு அரசியலில் இருந்தே ஒதுங்கியிருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை.

**அரசியலில்** இருப்பதால் அனைவரும் சாணக்கியர்கள் ஆகிவிட முடியாது. நாங்கள் அரசியல் செய்கின்றோம் என்று வெள்ளை உடுப்பும் முகத்தில் நடிப்புமாக நான்கு பேரோடு வலம் வருவதால் மட்டும் ஒரு இனத்தின் தலைவர்களாகி விட முடியாது. இந்த யதார்த்தத்தை நிகழ்காலம் நமக்கு தெளிவுபடுத்திக் கொண்டேயிருக்கின்றது.

மக்கள் ஏனோ காலம் உணர்த்தும் பாடத்தைப் புரிந்து கொள்வதாக இல்லை. மறதியெனும் பெரிய வியாதி எல்லா விடயங்களையும் மறக்கச் செய்துவிடுகின்றது. மக்களின் இந்த வியாதியை அரசியல்வாதிகள் மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

மேற்சொன்னது அரசியலில் இருக்கும் எல்லோருக்கும் பொருந்தும். என்றபோதும் தமிழ் மக்களின் அரசியல் தளத்தைப் பார்க்கின்றபோது தமிழ் கூட்டமைப்பின் போக்குகள் நடுக்கடலில் துடுப்பு உடைந்த நிலையில் தத்தளிக்கும் ஓட்டைப் படகுக்கு ஒப்பானதாகத் தெரிகின்றது. கூட்டமைப்பின் தொடர்ச்சியான நிலைப்பாடு இதுதான் என்றாலும் அடிக்கடி நிலைமை மோசமாகி விடுகின்றது.

அத்தகையதொரு மோசமான நிலையிலேயே கூட்டமைப்பு தற்போதுமுள்ளது. நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலிலும்சரி, உள்ளூராட்சி சபைத்தேர்தல்களிலும் சரி சொன்னது ஒரே விடயம்தான். அதாவது தமிழ் மக்கள் தமக்கே வாக்களிக்கவேண்டும்; தாம் பெருவாரியான வாக்குகளைப் பெற்று தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டால் அரசாங்கம் தம்மை மதிக்கும் பேச்சுவார்த்தைக்கு அழைக்கும் என்றெல்லாம் தமிழ் மக்களுக்கு கதை சொன்னார்கள்.

கூட்டமைப்பு தமிழ் மக்களுக்குச் சொல்லும் கதையையே அரசாங்கமும் துரும்புச் சீட்டாகப் பயன்படுத்தியது. கூட்டமைப்பை பேச்சுவார்த்தைக்கு அழைத்துக் கொண்டிருந்தாலே போதும், அவர்கள் தமிழ் மக்களுக்கு பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்ற கதையையே சொல்லிக் கொண்டிருப்பார்கள். காலத்தை இழுத்தடிக்கும் வேலையை அவர்களே கச்சிதமாகச் செய்து கொள்வார்கள்.

கூட்டமைப்பு அரசியல் ரீதியாக எதையும் செய்வதில்லை. மிஞ்சிப்போனால் அமைச்சர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்கள் அல்லது அரசாங்கம் முன்னெடுக்கின்ற அபிவிருத்திச் செயற்பாடுகளில் குறை சொல்லிக் கொண்டிருக்கலாம். அப்படியும் இல்லாவிட்டால் மரண-வீடுகளில் அல்லது கோயில்களில் தலையைக் காட்டி கொழும்பிலிருந்து ஊர்ப்பக்கமும் வந்து போகின்றோம் என்று காட்டிக் கொள்ளலாம். இதைத் தவிர இதுவரை கூட்டமைப்பு செய்தவை எதுவுமில்லை.

புலிகள் இருந்தவரை புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று கூறியவர்கள் இப்போது தாமே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று கூறிக் கொள்கின்றனர். புலிகள் பெற்றுத் தருகின்ற தீர்வு எதுவாக இருந்தாலும் அது உயர்ந்த பட்சமானதாக இருக்கும் என்று கூறிய கூட்டமைப்பினர் புலிகள் தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுத்த முள்ளிவாய்க்கால் தீர்வை ஏற்றுக் கொண்டு மொட்டை போட்டு சந்தனம் பூசிக் கொண்டு தமிழ் மக்களிடம் மன்னிப்புக்கேட்டு அரசியலில் இருந்தே ஒதுங்கியிருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை.

இப்போது அரசுடன் பேச்சு நடத்திக்கொண்டிருக்கின்றோம் என்று கூறிக் கொள்வதால் தமிழ் மக்களின் தலைமைகள் தாமே என்று காட்டிக் கொள்ள முற்பட்டு மூக்கு உடைபட்டு நிற்கின்றனர். அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லை. அரசாங்கம் ஏமாற்றுகின்றது. என்று ஒரு பிரிவும், அரசுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகள் கல்யாணத்தில் முடியுமா? கருக்கலைப்பில் முடியுமா? என்று கேள்வியெழுப்பும் ஒரு தரப்பும், அரசுடன் பேச்சுக்கள் தொடரும் சகிப்புத்தன்மையை வெளிப்படுத்த கூட்டமைப்பு தயார் என்று ஒரு பிரிவுமாக கூட்டமைப்புக்குள்ளேயே மூன்று குழுக்களாக பிரிந்து நின்று கொண்டு பனிப்போர் நடத்திக் கொண்டு இருக்கின்றார்கள்.

இந்த நிலைமை ஏற்கெனவே எதிர்பார்க்கப்பட்டதுதான். கூட்டமைப்பை அதன் புள்ளியிலிருந்து இழுக்காவிட்டால் அது அரசு மீது குற்றம் சுமத்திக் கொண்டும் தமிழ் மக்களிடம் நல்லபிள்ளையாக நடித்துக் கொண்டும் அரசியல் செய்து கொண்டிருக்கும் அப்படியொரு அரசியல்நடத்துவதில் கூட்டமைப்பினர் நிபுணர்கள். அது தவிரவும் அரசியலில் இயங்கு சக்தியாக இருப்பது கடினமானதும் பல்வேறு விமர்சனங்களுக்கு உட்பட்டதுமாகும். எதிர்ப்பு அரசியல் நடத்துவது இலகுவானதாகும். அதைச் செய்யவே கூட்டமைப்பு விரும்பும். அதற்கு இடம் தராமல் கூட்டமைப்பை நகர்த்த வேண்டுமென வகுக்கப்பட்ட வியூகத்துக்குள் கூட்டமைப்பு இன்று விழுந்துள்ளது. இதனால் கூட்டமைப்பு தன் உள்வீட்டு குளறுபடிகளை மறைக்கமுடியாமல் அம்பலப்பட்டு நிற்கின்றது.

பொறிக்குக்குள் சிக்கியிருக்கும் நிலையிருந்து விடபட கூட்டமைப்பு பேச்சுவார்த்தையிலிருந்து உடனடியாக விடுபட வேண்டும். அதற்கு இடம் தராமல் அரசாங்கமும் பக்குவமாக காய் நகர்த்திக் கொண்டு இருக்கின்றது. மறு பக்கத்தில் இந்தியாவும் கூட்டமைப்பு பேச்சுவார்த்தையை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று அழுத்தங் கொடுப்பதாகவும் சில உள்வீட்டுச் செய்திகள் கூறுகின்றன.

இந்த நிலையில் கூட்டமைப்புக்கு எதுவும் செய்யமுடியாத கையறு நிலைமை தோன்றியுள்ளது. இந்த தத்தளிப்பிலிருந்து தப்பிப்பதற்கு தற்போது கைக்குத் தட்டுப்படும் ஒரே பிடிமானம் ஐ.நா குழுவின் இலங்கை அரசு மீதான குற்றச்சாட்டு அறிக்கைதான். அதை நேரடியாக ஆதரித்து ஒரு துரும்பைக்கூட இலங்கைக்குள் உயர்த்த முடியாது இருந்தாலும் அதைச் சொல்லிக் கொண்டு ஏதாவது ஒரு சுழிப்பைச் செய்ய முடியுமா? என்றுதான் கூட்டமைப்பு அலை மோதிக் கொண்டிருக்கின்றது.

இதன் இறுதி உளறல்தான் சர்வதேசம் தமிழ் மக்களுக்காக நியாயம் கேட்டு நிற்கின்றது. இந்தியா இலங்கை அரசுமீதான பிடியை இறுக்கிக் கொண்டு வருகின்றது. இவ்விரு செயற்பாடுகளும் தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத் தரும். அவர்கள் இலங்கை அரசின் கழுத்தை தமிழ் மக்களுக்காக நெரித்துப் பிடித்து தீர்வை வாங்கித்தருவார்கள் என்று நம்பிக் கொண்டிருக்கும் தமது நம்பிக்கைகளுக்குப் பின்னால் தமிழ் மக்களுக்கும பகைமை உணர்வை உருவேற்றிக் கொண்டு வீணி வடித்தபடி அணி திரள வேண்டுமென கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது.

கூட்டமைப்பை இந்த சுயநினைவு இழந்த நிலையிலிருந்து தண்ணீர் தெளித்து எழுப்புவதற்கு யாராவது வரவேண்டுமென்றால் அத்தகைய ஒருவர் வானத்திலிருந்தா வர முடியும் தமிழ் மக்கள்தான் அதற்குத் தயாராக வேண்டும்.

## அதிரடி அய்யாத்துரை



திருவாண மலையில தறுதலையாய் சுத்திக் கொண்டு திரிஞ்ச மருமகனைப் பிடிச்சுக் கொண்டு வந்து 'சாவா'வில தான் தொடங்கின 'கேட்டுவேயி' எண்ட கிளை நிறுவனத்துக்கு எம்.டி. பொறுப்பை குடுத்தவராம். ஊத்தயனின்ர எம்.டி. மாமா. பதவியும் கிடைச்சு காரும் கிடைச்சதும்: கண்மண் தெரியாமல் திரியிற தறுதலை மருமகன் என்ன செய்யுது தெரியுமோங்கோ?!

தன்ர நிறுவனத்திற்கு படிக்கப் போற ரீச்சர்மாரை வலை வீசி பிடிச்சு நாளுக்கு ஒருத்தர் எண்ட கணக்கில காரில ஏத்திக் கொண்டு புயலாய் பறக்கிதாமுங்கோ! உந்தக் கார் எங்க போகுது? எப்பிடி இன்ரவியூ காணது எண்டதெல்லாம் உந்தத் தறுதலைக்கு அனைத்துச் சௌபாக்கியங்களையும் வாரி வழங்கின அந்தச் சரவணனுக்கே தெரியேல்லை யாமுங்கோ. அதாலை அந்தப் பக்கம் போறதுக்கே பெண் சிரசுகள் பயந்து ஓடுதுகளாமுங்கோ... இந்த சித்துவக்கேட்டில மாமா மருமகனுக்கு கல்யாணம் பேசி வைச்சிருக்கிறாராமுங்கோ. கால்க்கட்டுப் போட்டாலாவது மருமகன் அடக்கி வாசிப்பர் எண்டு மாமா நினைக்கிறார் போல கிடக்குதுங்கோ.

பாத்தியளோ! குடாநாட்டுக் கலாசாரம் சீரழியுது எண்டால் அதுக்குக் காரணமாய் இருக்கிறது எப்படிப் பட்ட தறுதலையள் எண்டு இப்ப விளங்குது தானே.

அதுசரி, டுப்றா நடத்தினவரின்ர மருமகனெல்லே. லேசுபட்டவராயே இருப்பார். எப்பிடியோ. கேட்டுவேய கெற்றவுட்வேயாய் ஆக்காம இருந்தா சரிதானுங்கோ.

**கிழக்கில முன்னை நாள் கூத்தமைப்புக் கூத்தாடிகளில ஒத்தராய் இருந்தவர் சந்திர------ காந்தமானவர். கடைசியாய் நடந்த எலக்ஷனில மகாஜனங்கள் செருப்பால அடிக்காத குறையாய் துரத்தி அடிச்சுப் போட்டினமுங்கோ. ஆனாலும் அண்ணாச்சியின்ர இம்சை தாங்க முடியேல்லையாமுங்கோ. எம்.பி.யாய் இருக்கேக்க கிடைச்ச பிஸ்ரலை இடுப்பில சொருகிக் கொண்டு ஊர்ச்சண்டியன் ஸ்ரைலில ஊருக்குள்ள திரியிறாராமுங்கோ.**

**சுடத் தெரியாத சுண்டக்காய்ப் பயலுகளுக்கெல்லாம் பிஸ்ரலைக் குடுத்ததும் பத்தாமலுக்கு பதவி போனதுக்குப் பிறகும் அவையளிட்ட விட்டு வைச்சிருக்கிறது பற்றி மகாஜனங்கள் அதிகாரத் தரப்பு மேலயும் கொஞ்சம் அதிருப்திப்படுகினமுங்கோ.**

**நாட்டில சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுப் போறதுக்கு இப்படியான சுண்டக்காய்ப் பயலுகளுட்டையெல்லாம் 'சாமான்' கிடைக்கிறது மெயின் றீசன் எண்டுறதை கொஞ்சம் திங் பண்ண வேணுமுங்கோ.**

**டிப்பென்ஸ்... டிப்பென்ஸ் எண்டு சொல்லுறவையள் உந்த டிப்பென்ஸுக்கு கேடான விஷயங்களையெல்லாம் கவனத்தில எடுக்கமாட்டியளோ?!!**

குடாநாட்டுக் கலாச்சாலைக்கு தேர்தலில கூடின வாக்குப் பெற்றுக் கொண்ட அம்மையாரை புது உபவேந்தராய் அதிகாரமானவர் நியமிச்சு இருக்கிறாருங்கோ. உந்தத் தேர்தலில தோத்துப் போன ஒருத்தர், தேர்தலில வெண்டவைக்குத்தான் பதவி எண்ட அடிப்படையைக் கூட விளங்கிக் கொள்ளாம, தனக்குப் பதவி கிடைக்காததுக்கு வீணைக் கட்சி அமைச்சர் அதிகாரமானவரிட்ட போட்டுக் குடுத்ததுதான் "றீசன்" எண்டு வைத்தெரிச்சலை கொட்டியிருக்கிறாருங்கோ...

பட்டங்கள் பல சூடின உந்தப் பண்டிதருக்கு இப்படியொரு சந்தேகம் வந்திருக்குது எண்டால், அதிகாரத்தரப்பிட்ட வீணைக் கட்சி அமைச்சருக்கு அமோகமான மவுசு இருக்குதெண்டு தானேங்கோ அர்த்தப்படுகுது.

அப்பிடியெண்டால், தமிழ் மக்களின்ர ஏகப்பிரதிநிதிகள் தாங்கள் தானெண்டு கொக்கரிச்சுக் கொண்டு திரியுறவையள் எல்லாம் செல்லாக் காசுகள். அதிகாரத் தரப்போடை உரிமையோடை அதிகாரம் பண்ணி காரியம் சாதிக்கக் கூடியவர், வீணைக் கட்சித் தலைவர்தான் என்கிறதை இந்தப் பண்டிதரின்ர ஸ்ரேற்மண்ட் மகாஜனங் களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிப் போட்டு தெண்டு எங்கட ·போடியார் சொல்லுறாருங்கோ...

உதைத் தான் "அவல் எண்டு நினைச்சு உரலை இடிக்கிறது" எண்டு எங்கட பெரிசுகள் சொல்லுறதாக்குமெங்கோ. ம்........

பதவி கிடைக்காட்டிலும் கலாச்சாலை நல்லாய் வரும் எண்ட திருப்தி இருந்தாலே போதுமெல்லோ... அதுகானே படிச்ச மனுசனுக்கு ஒழுங்கு கூல் வாத்தியார் கூல்....

# மட்டக்களப்பில், பல்வேறு பாடங்களுடன் விடைபெற்றது மே மாதம்

**மரணங்கள்** எப்போதும் மலின மானவையாக இருக்கக் கூடாது என்பதற்கு பல்வேறு வரலாற்று அனுபவங்கள் சொல்கின்றன. ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் சாதாரணமாக கொலைகளும் மரணங்களும் கடந்த ஒரு மாதத்துக்குள் நடந்தது மாத்திரமல்லாமல் கொலை முயற்சிகளும் நடைபெற்றுள்ளன.

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகிழூர் பகுதியில் தேவாலய வீதியை சேர்ந்த யோகேஸ்வரி (59வயது) என்ற மூன்று பிள்ளைகளின் தாய் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். கண்ணகியம்மன் கோவில் வீதியில் வைத்து ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கொலையில் முடிந்திருப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதே போன்று களுவாஞ்சிக்குடியில் பெண்ணொருவரை கொலை செய்து விட்டு 15 பவுண் நகையை கொள்ளையிட்டுத் தப்பிச்சென்ற சம்பவம் நடைபெற்றது. குலசேகரம்பிள்ளை இராசநாயகி என்ற 75 வயதுடைய வயோதிபப் பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராகும். இந்தக் கொலைக் கொள்ளையைச் செய்தவர்கள் மஸ்கெலிய கவரவில பிரதேசத்தில் வைத்து ஹட்டன், களுவாஞ்சிக்குடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்குள் முகமூடி அணிந்த நிலையில் நுழைந்த இரண்டு ஆயுததாரிகள் வீட்டில் இருந்த வயோதிபப் பெண்ணொருவரை கொலைசெய்துவிட்டு கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் கூரையைக் கொண்டு வீட்டுக்குள் இறங்கியுள்ள ஆயுதம் தாங்கிய கொள்ளையர்கள் குறித்த வீட்டில் வேலைக்காரியுடன் தூங்கிக்கொண்டிருந்த குறித்த பெண்ணையும் வேலைக்காரியையும் தனித்தனியாக கட்டிவைத்து விட்டு வீட்டுக்குள் இருந்த பொருட்களை கொள்ளையடித்துள்ளனர் என தகவல்கள் தெரிவித்தபோதும் அந்த வீட்டில் வேலை செய்த பெண்ணும் இக்கொலைக்கு உடந்தை என தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை மட்டக்களப்பு, மாங்காட்டு பகுதியில் கடந்த 15ஆம் திகதி கொலை ஒன்று இடம்பெற்றது. இக்கொலைச் சம்பவம் தொடர்பில் ஐந்து பேர் களுவாஞ்சிக்குடி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அக்கரைப்பற்றில் நான்கு சந்தேக நபர்களும் மாங்காட்டு பகுதி பெண்ணொருவரும் இதில் அடங்குவர். கொலையுண்டவர் அடித்துக்கொல்லப்பட்டு தூக்கில் தொங்கவிடப்பட்டிருந்தார்.

இவ்வாறு மட்டக்களப்பில் வீணான கொலைகள் மலிந்த வண்ணமுள்ளன. இது ஒரு ஆரோக்கியமான விடயமாகத் தெரியவில்லை. பொலிஸாரும் ஏனைய பாதுகாப்புத் தரப்பினரும் மிகவும் கவனமாக பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டிருக்கையில் இவ்வாறான மரணங்கள் நடைபெறுவது மக்கள் மத்தியில் மிகுந்த கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

இதற்கிடையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறுத்தானை பகுதியில் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு விவசாயி ஒருவர் இலக்கானார். தெய்வாதீனமாக இவரது இடது காலின் தொடைப்பகுதியில் பெருங்காயம் ஏற்பட்டு அவர் உயிர் தப்பினார்.

பொண்டுகள்சேனை, பூலாக்காட்டைச் சேர்ந்த தியாகராசா குகன் (வயது 26) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தார். இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கு அவருடைய குடும்பப்பிரச்சினையே காரணம், இதற்கு வேறு விதமான காரணங்கள் இல்லை என ஒரு சிலரால் கருத்து வெளிப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனால் அந்த விவசாயி தான் வயலுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் கறுப்பு உடை தரித்த முகத்துக்குக் கறுப்புத் துணிகட்டியவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக தெரிவிக்கிறார்.

இவர், புலிகளில் இருந்து கருணா அம்மான் பிரிந்த பின்னர் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சிறிது காலம் அவர்களுடன் இணைந்திருந்தவர் என்ற ஒரு தகவல் இருக்கிறது. ஆனால் இவருக்கு ஆயுதரீதியான எந்த விதமான தொடர்பும் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

முறுத்தானை என்பது மட்டக்களப்பு மாவட்டத்தில் காணிப்பிரச்சினைகள் நடைபெற்று வருகின்ற ஒரு பிரதேசமாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுபோல் பல பிரதேசங்களில் வயல், வீட்டுக் காணிப்பிரச்சினைகள் தமிழ், முஸ்லிம் மக்களிடையே நடைபெற்று வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில் நடைபெற்றிருக்கும் ஒரு விவசாயி மீதான துப்பாக்கிச்சூடு அந்த வகையில் பார்வைகளைச் செலுத்தும் படி தூண்டுகின்றது.

பொது மக்களின் கருத்துகளின் படி மக்கள் அமைதியாக வாழ வேண்டும். கடந்த முப்பது நாற்பது வருட காலமாக மிகவும் கொடுமையான அனுபவங்களைப் பெற்று அடக்கப்பட்டு அசிங்கப்பட்டு வாழ்ந்துவிட்ட மக்கள் மீண்டும் மீண்டும் வன்முறைகளை விரும்பவில்லை என்பதற்கு அவர்களுடைய தற்போதைய செயற்பாடுகள் நல்லதொரு எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

ஆனால் மட்டக்களப்பைப் பொறுத்தவரையில் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றாக இணைந்து வாழும் பிரதேசங்களாகும். இங்கு அடக்குமுறைகளை கையாள முயல்வதாக ஒருசிலர் கருத்து வெளியிடுகின்றனர்.

புலிகளின் அடக்கு முறைகள், இராணுவத்தினரது செயற்பாடுகளால் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டனர் என்பதற்கு எந்த மறுப்புக் காரணமும் சொல்லமுடியாது. ஆனால் யுத்தம் நிறைவடைந்து அமைதியான சூழல் ஏற்பட்டுள்ள வேளையில் நடைபெறும் கொடும் நடவடிக்கைகள் மேலும் வன்முறைகளைத் தோற்றுவித்துவிடக் கூடாது.

இதேவேளை வெசாக் கொண்டாட்டங்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் மட்டக்களப்பில் நடைபெற்ற இரண்டு கொலைகளைத் தொடர்ந்து மட்டக்களப்பில் தேடுதல்கள் நடத்தப்பட்டன. மக்களை அமைதியாக வைத்திருக்க வேண்டிய பாதுகாப்புத் தரப்பினர் கொலைகள் நடைபெற்றவுடன் தமது இலகுக்காக இவ்வாறு தேடுதல்களை நடத்தினார்கள் என்று கொண்டால், மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் அநேக இடங்களில் தேடுதல்களை நடத்த வேண்டிய தேவை என்ன என்ற கேள்வி மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது.

கடந்த வாரத்தில் அம்பாறை மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களான கல்முனை மற்றும் சாய்ந்தமருது பகுதிகளில் இராணுவத்தினரின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதுடன் பொதுமக்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

அப்பகுதிகளிலுள்ள வீடுகளுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட இராணுவத்தினர், எவரேனும் கப்பம் பெற முயற்சிக்கின்றனரா? அல்லது இப்பகுதி மக்கள் பிறிதொரு நபர்களினால் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனரா என்ற கேள்விகளை எழுப்பினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேசத்தில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதேபோன்று மட்டக்களப்பின் திராய்மடு, வாழைச்சேனை, இருதயபுரம், புதூர், திருச்செந்தூர்-கல்லடி உள்ளிட்ட பிரதேசங்களிலும் சோதனைகள் நடத்தப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை சரிந்தமருது பிரதேசங்களில் நடந்த தேடுதல், காத்தான்குடி பிரதேசங்களில் நடைபெற்ற சோதனைகள் தொடர்பில் கருத்து வெளியிட்ட கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேராவை கூறுகையில் சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தவே அம்பாறையின் கரையோரப் பிரதேசங்களுக்கு இராணுவம் சென்றனர்.

அத்துடன், அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற இரு வேறு கொலைச் சம்பவங்கள் காரணமாகவே, அம்மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்திருந்தார்.

இரண்டுக்கும் காரணம் ஒன்றல்ல என்றாலும் வன்முறைகள் குறித்துக் கவலை கொள்ளத் தேவையில்லை என்றும் கூறியிருந்தார்.

எது எவ்வாறானாலும் கடந்த மாதம் 11ஆம் திகதி மட்டக்களப்பு நகரில் நடைபெற்ற மதியழகனின் கொலை, களுவாஞ்சிக்குடியில் 13ஆம் திகதி நடைபெற்ற மதுபானச் சாலை உரிமையாளரின் கொலை என்பன இம் மாவட்டத்தையே பெரும் குழப்பத்துக்குள் தள்ளியது.

இதனைத் தொடர்ந்து தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் தேசிய அமைப்பாளரும் மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்ரர் என அழைக்கப்படும் எட்வின் கிருஸ்ணானந்தராஸா மற்றும் இன்னும் நான்கு உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதனால் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சிக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான உறவில் சிறு குழப்பம் ஏற்பட்டது. ஆனால் 18ஆம் திகதி அலரி மாளிகையில் நடைபெற்ற ஜனாதிபதியுடனான சந்திப்பில் இதற்கு ஒரு அமைதி கிடைத்தது என்றாலும் கைது செய்யப்பட்டவர்களில் முக்கியமானவர்கள் 30.05.2011 வரை விடுவிக்கப்படவில்லை.

இந்தக் கைது கிழக்கு மாகாண சபை அமர்வினையே குழப்பத்துக்குள் தள்ளி மாகாணத்தின் சபை உறுப்பினர்களின் பாதுகாப்பு குறித்தும் பல்வேறு விவாதங்களைத் தோற்றுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொலைகளை நியாயப்படுத்துவதற்கும் செய்த பிழைகளை நியாயப்படுத்துவதற்கும் வித்தியாசம் இருக்கிறது என்பதை ஒவ்வொருவரும் மறந்துவிடக்கூடாது.

புலிகளுடனான யுத்தம் நிறைவடைந்து உயிர்ப்பயம் நீங்கி மக்கள் அமைதியான வாழ்க்கையை வாழ்ந்து தொழில்களை நிம்மதியாக நடத்துவதற்கான வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் நடைபெற்று வருகின்ற வன்முறைகள், கொலைகள் துப்பாக்கிச்சூடுகள் மட்டக்களப்பு மக்களை மிகுந்த கவலை கொள்ளச் செய்துள்ளது.

கடந்த வாரத்தின் இறுதியில் தமிழ் முஸ்லிம் மக்களது ஒற்றுமையை வலியுறுத்தி கிரானில் ஒரு பேரணி நடத்தப்பட்டிருந்தது. இதில் நாம் எதிர்பார்க்கின்ற மனநிம்மதியை மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் வறிய நிலையில் உள்ள கடுமையாக யுத்தப்பாதிப்புக்களை அனுபவித்த மக்கள் விடுத்த தாழ்மையான இன ஒற்றுமைக் கோரிக்கையைக் காணக்கூடியதாக இருந்தது.

குழப்பங்களுக்குள் யாரும் குளிர்காய முயற்சித்துவிடக் கூடாது என்ற நோக்கிலேயே இந்த கட்டுரை வரையப்படுகிறது. ஆரம்பகாலம் முதல் யுத்தம் நிறைவுற்றதுவரை நடைபெற்ற காட்டிக் கொடுப்புகள் கொலைகள், வன்முறைகள் அனுபவங்கள் இனிமேலும் வேண்டாம் என்றே அனைவரும் விரும்புகின்றனர்.

அதனைக் கருத்தில் கொண்டு மனச்சாட்சிகளைக் கேட்டு அமைதியாக பரஸ்பரம் புரிந்துணர்வுடன் ஒவ்வொருவரும் வாழ வேண்டும் என்பதனை ஞாபகப்படுத்துவதற்கும் இனிமேலும் இவ்வாறான வீண் மரணங்கள் நடைபெறாமலிருப் பதற்கும் மட்டக்களப்பு மாவட்டத்தின் கடந்த மாதம் ஒரு பாடமாக இருக்க வேண்டும் என்று மட்டுமே சொல்லிக் கொள்ள முடியும்.

**-லோகேஸ்வர்-**

**யுத்தம் நிறைவடைந்து உயிர்ப்பயம் நீங்கி மக்கள் அமைதியான வாழ்க்கையை வாழ்ந்து தொழில்களை நிம்மதியாக நடத்துவதற்கான வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் நடைபெற்று வருகின்ற வன்முறைகள், கொலைகள் துப்பாக்கிச்சூடுகள் மட்டக்களப்பு மக்களை மிகுந்த கவலை கொள்ளச் செய்துள்ளது.**

# அவலம் சுமந்த அகதிகள்

அத்திமுகத்தோன்

அவலம் 32

**அவளால்** நம்பவே முடியவில்லை. எல்லோருடைய் முகங்களிலும் மகிழ்ச்சி தென்பட்டது. அவள் குழந்தையோடு எழுந்து அவனை நோக்கிப் போனாள். அதற்கிடையில் அவனும்-அப்புவும் அவளை நெருங்கிவிட்டார்கள்.

அவன் அவளிடமிருந்து குழந்தையை வாங்கிக்கொண்டான். பெரியப்புவுக்கு மனம் நெகிழ்ந்துவிட்டது.

"நேற்றிரவு எங்கயைப்பா போனனீங்கள்?" அவள் அவதியோடும் அழுகையோடும் கேட்டாள். அவள் கேட்டதும் அவன் திரும்பிப் பெரியப்புவைப் பார்த்தான். அவன் அப்படிப் பார்த்ததும் பெரியப்புவின் முகத்தில் அசடு வழிந்தது.


"வா குஞ்சு... ஆறுதலா விளக்கமாச் சொல்லுறன்..." என்றவாறு அவளையும் அழைத்துக்கொண்டு குசினிக்கருகில் வந்தான்.

"எங்கை அத்தான் போனனீங்கள்...? வழியில இயக்கம் புடிச்சதே...? மைத்துனி கேட்டபடி குசினித் திண்ணையில் இருந்த கஞ்சிக் கோப்பையை அப்புறமாக எடுத்து வைத்துவிட்டு, அவர்கள் இருவரும் இருப்பதற்கு வழிவிட்டாள்.

அப்புவும், அவனும் திண்ணையில் அமர்ந்துகொண்டார்கள். அவனுக்குப் பக்கத்தில் அவள் அமர்ந்து கொண்டாள். எல்லாருடைய விழிகளும் அவனையும் அப்புவையும் பார்த்தபடி நின்றன.

அவன் நடந்த சம்பவத்தை





விபரிக்கத் தொடங்கினான். அப்பு அவன் அருகில் இருந்தபடி... அவனையும் அவர்களையும் மாறிமாறிப் பார்த்தவண்ணம் இருந்தார்.

"நானெல்லோ சொன்னனான் உங்களைக் கைவேலிக்குப் போகவேண்டாம் என்று." ஆத்திரத்துடன் அவள் கேட்டாள்.

"கொஞ்சம் பொறு. ஆத்திரப்படாதை. நான் மாத்தளனுக்குப் போகத்தான் வெளிக்கிட்டனான். வழியில பெரியப்புவைச் சந்திச்சாப்போல அவரோட போகவேண்டி வந்திட்டுது. போன இடத்தில ஆமியிட்டை பிடிபட்டுப் போனம்..." என்று கூறிவிட்டு அவன் சற்று நிறுத்தினான்.

அவன் கூறியதை அவர்கள் ஒருவரும் நம்பவில்லை. மைத்துனி சிரித்தாள்.

"அத்தானுக்கு எப்பவும் பகிடிதான்..." மைத்துனி மீண்டும் சிரித்துக்கொண்டாள். சகலனும் அவன் கூறியதை நம்பவில்லை. அவனின் அவளோ திகில்படர்ந்த முகத்தோடு, அவனையும், பெரியப்புவையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டாள். பெரியப்பு, எதுவும் கூறத் தோன்றாது, மௌனமாக அவர்களின் உரையாடலுக்குள் குறுக்கீடு செய்யாமல் இருந்தார். ஆமிவிட்ட அறையின் நிமித்தம் வாய்க்குள் உடைந்த பல்லின் வேதனை அவரைத் தொந்தரவு படுத்திக்கொண்டிருந்தது.

அவன் நடந்த சம்பவத்தை மீண்டும் சொல்லத் தொடங்குகையில், எங்கேயோ கிபிர் விமானத்தின் மிகையொலி கேட்டது.

"எட தம்பி கிபிர் இரையுமாப்போல கிடக்குதடா...." பெரியப்பு குசினித் திண்ணையில் இருந்தபடி தலைகுனிந்து மேலே வானத்தைப் பார்த்தபடி கூறினார்.

"அவங்கள் வெள்ளணத் தொடக்கம் உப்புடித்தான் சுத்துறாங்கள். நீங்கள் சொல்லுங்கோ அத்தான்..." மைத்துனி வற்புறுத்த அவன் நடந்த நிகழ்வுகளைக் கூறத் தொடங்கினான்.

"முதலில் பெரியப்பு வீட்டை போவமெண்டு ஒழுங்கையால திரும்பின இடத்தில ஆமியிட்டை அம்பிட்டுப் போனம். பிறகு அவங்கள் காட்டுக்குள்ள கூட்டிக்கொண்டு போன இடத்தில ஒரு தமிழ் தெரிஞ்சவன் சந்திச்சான். ஆனால், அவன் ஆமியில்லை."

"அப்ப அது ஆரவன்...?" சகலன் சடுதியாகக் கேட்கவும், அவன் அமைதியாக எல்லோரையும் பார்த்துவிட்டுக் கூறினான்.

"அவன் எங்களைப் போல ஒருவன்..."

அவனின் பதில் எல்லோருக்கும் குழப்பத்தை உண்டு பண்ணிவிட்டது.

"என்னண்ணை நீங்கள் பகிடி விடுகிறியள்..." சகலன் சற்று எரிச்சலுடன் கேட்கவும், அவன் சகலனை அனுதாபத்தோடு பார்த்தான்.

புலிகள் இயக்கம் என்றைக்கும் எங்களுக்குக் காவலாக இருக்கும்... என்ற நம்பிக்கையோடும், விசுவாசத்தோடும் விட்டுக்கொடுக்காத மனப்பாங்கோடும் இருப்பவர்களுக்கு, கைவேலி காடுவரை இராணுவம் வந்து நிற்பதை ஏற்றுக் கொள்ளக் கஷ்டமாகத்தான் இருக்கும்... என்பதை அவன் விளங்கிக்கொண்டிருந்தான், தனது சகலனை மீண்டும் அனுதாபத்தோடு பார்த்தான்.

"எங்களோடு கதைச்சவன் சுத்தத் தமிழன். ஆனால் அவனுக்குச் சிங்களம் தெரியும். எங்களைப் பற்றி விசாரிச்சான். சொன்னம். இயக்கத்தைப் பற்றிக் கேட்டான் அதையும் சொன்னம். யார் செய்த புண்ணியமோ தெரியேல்லை நாங்கள் ரண்டு பேரும் அவன்ர பகுதி ஆட்களிட்டை மாட்டுப்பட்டது. வேறை எங்காலும் மாட்டியிருந்தால்...இதை அந்தத் தமிழ் பேசினவனே வெளிப்படையாகச் சொன்னான்."

"அப்ப உங்களுக்கு அடிக்கேல்லையே அவங்கள்..."? அவனுக்குப் பக்கத்தில் இருந்த அவள், அவனது வார்த்தைகளை நம்பியவளாகக் கேட்டாள்.

"அடிக்கேல்லையோ...?"

அவன் அவளைப் பார்த்துக் கேட்டுவிட்டு, திரும்பி பெரியப்புவைப் பார்த்துச் சிரித்தான். பெரியப்புவுக்கும் சிரிப்பு வந்துவிட்டது. அவரும் சிரித்தே விட்டார்.

"நாங்கள் ஆமியிட்டை அம்பிட்டது பொய்யெண்டால் அப்புவின்ர வாயைப் பாருங்கோவன் ஒருக்கா. வாயைத் திறந்துகாட்டுங்கோ. எல்லாரும் பார்க்கட்டும்.

பெரியப்பு சிரித்துக்கொண்டே ஒருவித வெட்கத்துடன் வாயைத் திறந்து காட்டியபோது எல்லோரும் விக்கித்துப்போய் நின்றார்கள்.

"என்ன முரசால ரத்தம் வழியுற மாதிரிக் கிடக்குது..." மைத்துனி திகைப்பு நீங்கா நிலையில் கேட்டாள்.

"ஆமிக்காரனைக் கண்ட சந்தோஷத்தில அப்பு பல்லொண்டைப் 'பிறசென்ட்' குடுத்திட்டு வந்து நிற்கிறார்." கூறிவிட்டு அவன் சிரித்தான்.

அப்புவை மூவரும் அனுதாபத்தோடு பார்த்தார்கள். ஆயினும் சகலனுக்கு நம்புவதற்குக் கஷ்டமாக இருந்தது.

"அப்ப உங்களுக்கு ஒண்டும் செய்யேல்லையே..." ஒருவித பதகளிப்புடன் அவள் கேட்டாள்.

"எனக்கும் துவக்குப் பிடியால அடிச்சவன்..."

"எங்கையப்பா..?"

"நெஞ்சில...."

"ஐயோ... உதுக்குத்தானே நான் போக வேண்டாமெண்டு சொன்னான். பலிகேட்டு ஆடுகிற பிசாசுகள் மாதிரி ரண்டு பகுதியளும் நிற்குதுகள். என்ர சொல்லைக் கேட்காமல் என்னத்துக்கப்பா போனனீங்கள். நெஞ்சில அடிச்ச மாதிரிக்கு அந்த இடத்தில மூச்சடங்கிச் செத்திருந்தால்... ஐயோ! இதெல்லாம் உங்களுக்குத் தேவையோ? அங்கை என்ன கிடக்கு தெண்டு எடுக்கப் போக வெளிக்கிட்டனீங்கள். ஆடுகள், மாடுகள், கோழியளை அங்கை நிண்ட இயக்கம் புடிச்சுத் திண்டதெண்டு அதால வந்த ஆட்கள் சொன்னவையெல்லோ. அதுக்குப் பிறகு என்ன கிடக்குமெண்டு போனனீங்கள்..."

"இயக்கத்தில இருந்து தப்பியோடியவன் அல்லது இயக்கத்தால பாதிக்கப்பட்டவன் அல்லது சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இராணுவத்தோடை சேர்ந்த ஒரு உளவாளியாக இருக்கலாம். ஆனால் அவனும் ஏதோ ஒரு வகையில பாதிக்கப்பட்டிருக்கிறான். பழிக்குப் பழிவாங்குவதற்காக ஆமியோடை சேர்ந்து நிற்கிறானோ தெரியாது.

"நீங்கள் கூறுவது போன்று எங்கே யாவது நடக்கலாம். ஆனால் என்னைச் சந்திச்சவன் அப்படியில்லை. அவன் நினைத்தால் எங்களை ஆமிக்காரரிடம் குடுத்துச் சித்திரவதை செய்திருக்கலாம். ஆனால் செய்யேல்லை. அவன்ர இலக்கு ஆமியளை வைச்சுக்கொண்டு இயக்கத்தை அழிப்பது."

அவள் அழத் தொடங்கினாள். அவள் அழுவதைக் கண்டதும் பெரியப்பு குற்ற உணர்வில் கூனிக் குறுகி நின்றார். அவருக்கும் கண்கள் கலங்கி விட்டன. இளங்குடும்பம். அவள் கூறுவது போன்று அந்த இடத்தில் அவனுக்கு ஏதாவது ஆகியிருந்தால்... அதற்கான பழிமுழுவதையும் நானல்லோ சுமக்க வேண்டிவந்திருக்கும்...கடவுளே..

பெரியப்புவுக்கு மனது அந்தரிக்கத் தொடங்கியது. அழும் அவளை ஆறுதல்படுத்தத் தொடங்கினார்.

"நீ அழாதை பிள்ளை. ஒருவன் சாகிறதும் தப்புறதும் எங்கட கையுள்ள இல்லை. எல்லாம் அவன்ர செயல். நீ அழாதையம்மா..."

அவள் அழுவதைக் கண்டதும், அவனது மடியினில் இருந்த குழந்தையும் அழ ஆரம்பித்தது.

"குஞ்சு! அழாதை பிள்ளை. நீ அழ பிள்ளையும் அழுகிறாள். அழாதை..." அவன் சற்றுக் கண்டிப்போடு கூற, அவனிடமிருந்து அவள் பிள்ளையை வாங்கித் தோள்மீது போட்டுக்கொண்டாள். குழந்தை அழுவதை நிறுத்திவிட்டு விசும்பத் தொடங்கியது.

யாரும் எதுவும் கதைக்கவில்லை. கனத்தமௌனம் அவ்விடத்தில் குடிகொண்டது.

சில நிமிட இடைவெளியின் பின்பு சகலன் கேட்டான்.

"உங்களோடை தமிழில கதைச்ச ஆமிக்காரன் ஆரண்ணை?"

"அவன் ஆமி உடுப்புப் போட்டிருக்கிறானே ஒழிய, அவன் ஆமிக்காரன் மாதிரித் தெரியேல்லை. இயக்கத்தில இருந்து தப்பியோடியவன் அல்லது இயக்கத்தால பாதிக்கப்பட்டவன் அல்லது சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இராணுவத்தோடை சேர்ந்த ஒரு உளவாளியாக இருக்கலாம். ஆனால் அவனும் ஏதோ ஒரு வகையில பாதிக்கப்பட்டிருக்கிறான். பழிக்குப் பழிவாங்குவதற்காக ஆமியோடை சேர்ந்து நிற்கிறானோ தெரியாது. ஏனென்டா, நாங்கள் குடும்பகாரர் எங்களை ஒண்டும் செய்து போடாதேங்கோ.. எண்டு பெரியப்பு சொன்னதுக்கு அவன் என்ன சொன்னவன் தெரியுமோ...?"

"என்னண்ணை சொன்னவன்...?" சகலன் அவசரமாகக் கேட்டான்.

"நாங்களும் புள்ளைகுட்டிகாரர்தான். எங்களுக்கு மனிதம் ஒண்டு இருக்குது எண்டு சொல்லிக் கண்கலங்கினவன். அவன் நினைச்சிருந்தால் எங்கள் ரண்டு பேரையும் சுட்டிருக்கலாம். சுடேல்லை. தமிழன் எண்ட இனப்பற்றோ தெரியாது. அதோடை அவனுக்குப் புதுக்குடியிருப்பின்ர மூலை முடுக்கெல்லாம் தெரியுது. இன்ன இடத்தில் கிரவல் றோட்டும் வேப்ப மரமும் நிக்குது எண்டு சொல்லி, அதால போகும்படியும், வேறவழியால போனால் மற்றைய ஆமிக்காரரிடம் மாட்டுப்பட்டால் நான் பாத்திரவாளியல்ல என்றும் கூறினான்."

"அப்ப ஆரோ ஊரவன் சேர்ந்துதான் காட்டிக்குடுக்கிறான் போலக் கிடக்குது."

மைத்துனி கூறியதை அவன் ஆமோதித்துக்கொண்டான்.

"எளிய நாய்க் கூட்டங்கள்.. காக்கை வன்னியனுக்குப் பொறந்ததுகள்... காசு பணத்துக்காக ஆமியோடை சேர்ந்து உந்த ஊத்தை வேலையளைச் செய்யுதுகள்..."சகலன் வாயிலிருந்து வார்த்தைகள் வசைமாரியாகப் பொழிய ஆரம்பித்தன.

"நீங்கள் கூறுவது போன்று எங்கே யாவது நடக்கலாம். ஆனால் என்னைச் சந்திச்சவன் அப்படியில்லை. அவன் நினைத்தால் எங்களை ஆமிக்காரரிடம் குடுத்துச் சித்திரவதை செய்திருக்கலாம். ஆனால் செய்யேல்லை. அவன்ர இலக்கு ஆமியளை வைச்சுக்கொண்டு இயக்கத்தை அழிப்பது. இயக்கம் சனங்களுக்குள்ள இருக்கிறதால இயக்கத்தோடை சனமும், சனத்தோடை இயக்கப் பொடியளும் சாகுதுகள். மக்கள்வேறு. இயக்கம் வேறு அல்ல.... எண்ட பரப்புரையின் எதிர்விளைவுதான் இது. அதோடை அவன் இன்னொரு விடயத்தையும் சொன்னான்.


என்ன...? எண்டுமாப் போல் எல்லாருடைய விழிகளும் அவன் மீது மொய்த்தன.

"அவன் எங்களை உயிரோடு விட்டது இயக்கத்துக்குப் போய் ஒரு செய்தி சொல்லுறதுக்குத்தான்."

"என்னப்பா அது...? அவள் பயந்த நிலையில் அவனைக் கேட்டாள்.

அவன் கூறியதைக் கேட்டு மூவரும் ஆச்சரியத்தில் ஆழ்ந்துபோய் நின்றார்கள்.

**(அவலம் தொடரும்...)**




# மற்றவர்களுக்கு உதவிடுங்கள்




உணவு தேடுவதற்காக காட்டிற்குள் சென்று கொண்டிருந்தது, முயல். வழியில் முனகல் சத்தம் கேட்கவும், அந்தத் திசை நோக்கிச் சென்றது. அங்கே சோர்வுடன் ஒரு குரங்கு படுத்திருந்தது.

அதன் அருகில் சென்ற முயல், "நண்பா, என்னாச்சு உனக்கு? எப்போதும் மரத்திற்கு மரம் தாவி கொட்டமடிப்பாயே... இப்போது அந்த சுறுசுறுப்பெல்லாம் எங்கே போனது?" என்று பரிவுடன் கேட்டது.

குரங்கு மெல்ல தலையை தூக்கி பார்த்து, "என் அருமை முயலே, இப்படி அக்கறையுடன் யார் விசாரிக்கிறார்கள்? என் இனத்தைச் சேர்ந்த குரங்குகள் கூட கண்டு கொள்ளாமல் எள்ளி நகையாடிவிட்டுச் சென்றுவிட்டன. நான் மிகவும் சோர்வுடன் இருக்கிறேன்" என்றது.

உடனே முயல் அதை தடவிக்கொடுத்து, "நண்பா, முதலில் உனக்கு உணவு சேகரித்து வருகிறேன். பிறகு நாம் விரிவாகப் பேசலாம்" என்று சொல்லி வேகமாக அங்கிருந்து ஓடியது. பழங்கள் நிறைந்த மரங்கள் இருக்கும் இடத்திற்கு வந்தது. கீழே உதிர்ந்து கிடந்த பழங்களை எடுத்துச்சென்று குரங்கிடம் கொடுக்கவும், அது ஆர்வத்துடன் சாப்பிட்டது. இப்போது அதற்கு சற்று தெம்பு வந்தது.

முயலுக்கு நன்றி சொன்ன குரங்கு, "இன்று முதல் நாம் இருவரும் நண்பர்களாகி விட்டோம். இனி ஒற்றுமையாக வாழ்வோம்" என்றது. இருவரும் பேசிக்கொண்டே காட்டிற்குள் சென்றனர்.

'கொழுகொழு' முயல் குட்டி வரு-வதை சற்று தொலைவில் இருந்த நரி பார்த்துவிட்டது. ஆனால், அதனுடன் ஒரு நொண்டி குரங்கு வேறு வருகிறதே.... சோதனையையும் சாதனையாக மாற்றுவதுதானே தந்திரம் என்று நினைத்த நரி, அருகில் இருந்த ஒரு அரசமரத்தின் கீழ் தவம் இருப்பதுபோல் அமர்ந்தது.

அந்த வழியில் தான் முயலும், குரங்கும் சிரித்துப் பேசியபடி வந்தன. நரியைக் கண்டும் காணாதது மாதிரி சென்றபோது, "என்ன குரங்காரே, என்னைக் கண்டு கொள்ளாமல் சென்றால் எப்படி? குட்டி முயலுக்கு என் பெருமை தெரியாமல் இருக்கலாம். ஆனால், விவரம் புரிந்த நீ இப்படிச் செல்லலாமா? உன்னுடைய கால் வேறு ஊன-மாகி இருக்கிறது. என்னிடம் சொன்னால் நான் உன்னுடைய ஊனத்தை என் மந்திர மகிமையால் போக்குவேன்" என்றது.

"நீங்கள் சொல்வது உண்மையா?" என்று சந்தேகத்துடன் கேட்டது, குரங்கு.

"கவலைப்படாதே, எனக்கு முன் அமர்ந்துகொள். நான் கண்களை மூடித் தியானித்து மந்திரம் செய்த அருமருந்தை கொடுப்பேன். அடுத்த சில நிமிடங்களிலேயே ஊனம் சரி ஆகிவிடும்" என்றது நரி.

கண்களை மூடிய நரி, ஏதேதோ மந்திரங்களை ஜெபித்தது. பின் கண்களைத் திறந்து ஒரு பிடி மண்ணை எடுத்தது. அது நல்ல ஈரம் மிக்க செம்மண்.

"குரங்கே, இதுதான் நான் ஜெபித்துக் கொடுக்கும் அரு மருந்து. இப்போது உன் கண்களை அகலமாகத் திற. நான் இதை தூவியதும் ஊனம் சரியாகிவிடும்" என்றது.

குரங்கு யோசித்தது. இதில் ஏதோ சூது இருக்க வேண்டும். கால் ஊனம் போக கண்களில் ஏன் மண்ணைத் தூவ வேண்டும் என்று நினைத்தது.

உடனே, "மாமுனியே! என் கால் ஊனம் போக நான் எதையும் செய்யத்தயாராக இருக்கிறேன். அதற்கு முன் தங்களை வலம் வந்து வணங்க ஆசைப்படுகிறேன். அனுமதி தரவேண்டும்" என்றது.


நரி அனுமதி கொடுக்கவும், குரங்கு காலை விந்தியபடி நரியை வலம் வந்த போது மரத்தைச் சுற்றிலும் எலும்பு துண்டுகள் சிதறிக்கிடப்பதை கண்டது. அப்படியானால், நம் கண்களில் மண்ணைத்தூவி முயல் நண்பனைக் கொன்று தின்பதுதான் இதனுடைய எண்ணம். இப்படி நடக்க விடக்கூடாது என்று தீர்மானித்த குரங்கு, மூன்று முறை மிகவும் பக்தி சிரத்தையுடன் நரியை வலம் வந்து வணங்கியது.

பின்னர், தன் கையில் இருந்த மண்ணை குரங்கின் கைகளில் கொடுத்தது, நரி. அதை வாங்கிக் கொண்ட குரங்கு, சமயம் பார்த்து நரியின் கண்களில் வேகமாகத் தூவியது. எரிச்சல் தாங்காமல் அலறிய நரி, அங்கும், இங்கும் ஓடி காட்டில் இருந்த ஒரு பெரும்குழியில் விழுந்தது. தனக்கு உணவளித்த நண்பன் முயலின் உயிரைக் காத்த திருப்தியில் அவ்விடத்தை விட்டுச் சென்றது குரங்கு.

**தவறு நேர்ந்து விடுமோ என்று அஞ்சி அஞ்சி எந்த செயலையும் செய்யாமல் பின் வாங்குவது இழிவானது.**

— ஹென்றி போர்டு

## வாரம் ஒரு திருக்குறள்



கூடா ஒழுக்கம்

"வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தான்அறி குற்றப் படின்"

தன் மனம் தான் அறிந்த குற்றத்தில் தங்குமானால் வானத்தைப் போல் உயர்ந்துள்ள தவக்கோலம், ஒருவனுக்கு என்ன பயன் செய்யும்?


குறள்:272

## சாய்வு நாற்காலி




ஈசி சேயரில் (சாய்வு நாற்காலி) நீண்ட நேரம் ஜாலியாக அமர்ந்திருப்போம். ஆனால் சாதாரண நாற்காலியில் கொஞ்ச நேரம் இருந்தாலே உடல் சோர்வடைந்து விடுகிறது. இது ஏன் தெரியுமா? தரையிலிருந்து உடலின் ஈர்ப்பு மையம் வேறுபடுவதுதான் காரணம். சாதாரண நாற்காலியில் நிமிர்ந்து உட்காரும்போது நம் உடலின் ஈர்ப்பு மைய உயரம் அதிகமாக இருக்கும். இதனால் உடலின் எடை, இடைப்பகுதியில் அழுத்துகிறது. ஆனால் சாய்வு நாற்காலியில் உடலின் எடை சீராக சாய்மானத்தை அழுத்துகிறது. இதனால் உடல் சோர்வை உணர்வதில்லை. சந்தோஷமாக இருக்கிறோம்.

## கலங்கரை விளக்கு



கலங்கரை விளக்கு ஒளி நீண்ட தொலைவு தெரிவதால்தான் கப்பல்கள் பாதுகாப்பாக கரைக்குத் திரும்புகிறது. கலங்கரை விளக்கம் உயரமாக இருப்பதால் மட்டும் அதன் ஒளி நீண்ட தூரம் தெரிவதில்லை. அதற்கு வேறு அறிவியல் காரணம் இருக்கிறது. கலங்கரை விளக்கில் ஒளிதரக்கூடிய விளக்கு ஒன்று குழி ஆடியின் மையத்தில் வைக்கப்பட்டிருக்கும். இந்தக் குழி ஆடி ஒளிக்கதிரை இணைக்கற்றையாக எதிரொளிக்கிறது. இப்படிப்பட்ட இணைக்கற்றை ஒளிதான் நீண்டதூரம் சென்றாலும் திண்மை குறையாமல் செல்லும். அப்படி இருந்தால்தான் தூரத்தில் வரும் கப்பல்கள் வெளிச்சத்தை உணர முடியும். கலங்கரைவிளக்க ஒளி சுமார் 5 கி.மீ. தொலைவுக்குத் தெரியும்.

சிறந்த • வர்ணத்திற்கு • பரிசு தரும் • எண்ணம்.



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 14.06.2011

வர்ணம் தீட்டும் போட்டி இல.892

தினமுரசு வாரமலர்


த.பெ.இல:1772, கொழும்பு. த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 890

**பரிசுக்குரியவர்:** A.டிலோத்தமன், அராலி மத்தி, வட்டுக்கோட்டை

பாராட்டுக்குரியவர்கள்

01. ச.அக்சயா, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
02. சு.அறிவழகன், ஜெயந்திநகர், கிளிநொச்சி
03. எஸ்.பிரியா, 16, 42 ஆவது ஒழுங்கை ,கொழும்பு -6
04. சி. யதீஷன், குறுந்துவத்தை, சிலாபம்.
05. எம்.நூர்ஜஹான், இல.14, பிரதான வீதி, சாய்ந்தமருது.
06. கே.கலுஸ்ற்ரா, 438, சேர்ஜ் வீதி, மாத்தளை
07. ம.பவன்,43, பார் றோட், மட்டக்களப்பு
08. எம்.துவாரகன், ரயில் நிலைய வீதி, வவுனியா.




## கண்டுபிடியுங்கள்

நிழல் உருவத்துக்குப் பொருத்தமான நிஜ உருவத்தைக் கண்டுபிடியுங்கள்.



## கங்காரு என்பதன் பொருள்

தன்னுடைய மடியில் இருக்கும் பையில் குட்டியை வைத்துக்கொண்டு செல்லும் கங்காருவை பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். ஆஸ்திரேலியாவில் உள்ள 47 வகையான மார்சூப்பியல்களில் இதுவும் அடங்கும்.

மார்சூப்பியல் என்றால் குட்டிகளுக்காக வயிற்றில் பை கொண்ட இனம் என்று அர்த்தம். மற்றப் பாலூட்டிகளைப் போல இல்லாமல், குறைவிருத்தி நிலையிலேயே குட்டி வெளியேறி, தாயின் வயிற்றுப் பகுதியில் உள்ள பையில் தங்கி, மீதி விருத்தியை மேற்கொள்ளும். கங்காருவால் நடக்கவோ, பின்நோக்கி அசையவோ முடியாது. ஆனால், பலமான பின்னங்கால்களையும், அடர்த்தியான வாலையும் பயன்படுத்தி மிக வேகமாக ஓட முடியும். அதுவும் மணிக்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் ஓடும் திறன் கொண்டது.

இந்த அதிசயத்தைப் பார்த்த ஆஸ்திரேலியாவில் பழங்குடிகளான அபாரிஜின்களிடம் இதை எப்படிக் கூப்பிடுவது கேட்டார்களாம். அவர்களின் மொழி புரியாத பழங்குடிகள், கங்காரு என்று கூறினார்களாம். அபாரிஜின் மொழியில் கங்காரு என்றால் 'என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை' என்று அர்த்தமாம். இது தெரி யாத குடியேற்ற வாசிகள், கங்காரு என அந்த விலங்கை அழைக்க, அப்படியே அந்தப் பெயர் கங்காரு ஆயிற்று.

# புற்றுநோய்க்கு என்ன காரணம்?

‘யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். எப்போது வேண்டுமானாலும் வரலாம்’ என்று பலரையும் பயமுறுத்திக் கொண்டிருக்கும் நோய் இது. ஆனால் உண்மையில் இது பயப்பட வேண்டிய நோய் அல்ல. விழிப்புணர்வுடன் இருக்கவேண்டிய நோய். தொடக்கத்திலே கண்டுபிடித்தால் 95 சதவீதம் குணப்படுத்தி நிம்மதியாக வாழ முடியும். ஆனால் அறிகுறிகளை அலட்சியப்படுத்திவிட்டு கண்டுகொள்ளாமலே இருந்தால் மட்டும்தான் இது ஒரு ஆபத்தான நோயாக ஆகிவிடுகிறது.

புற்றுநோய் ஏற்படுவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. பாரம்பரியத்தாலும் வரும். பழக்கவழக்கங்களாலும் வரும். உணவாலும் வரும். அதிகமாக உடலில்படும் சூரிய ஒளியாலும் வரும். ஆண்களுக்கென்று சில புற்றுநோய்களும், பெண்களுக்கென்று சில புற்றுநோய்களும், இருபாலாருக்கும் என்று பொதுவான புற்றுநோய்களும் உண்டு. ஜீரண குடல் புற்றும், விரைப் பகுதி புற்றும் ஆண்களுக்கு அதிகம் வருகின்றன. மார்பு புற்றும், தைரோய்ட் புற்றும் பெண்களுக்கு அதிகம் வருகிறது.



(இந்த நோய்க்கான அறிகுறிகள் என்னென்ன?)

உடலில் எந்த பகுதியிலும் இந்த நோய் வரலாம். எந்த இடத்தில் வருகிறதோ அது அதற்கென்று தனித்தனி அறிகுறிகள் இருக்கின்றன. நுரைமீரலில் ஒரு அறிகுறி. ஈரலில் இன்னொரு அறிகுறி. இப்படி இடத்திற்கு தக்கபடி அறிகுறிகள் மாறும். ஆயினும் பொதுவாக 10 அறிகுறிகள் உள்ளன. அவை: குணமாகாத புண். இரத்த வாந்தி அல்லது புறவழி இரத்தப்போக்கு. சளியில் இரத்தம் வெளிப்படுதல். கட்டி பெரிதாகிக் கொண்டே இருப்பது. மச்சத்தில் அரிப்பு அல்லது இரத்தக் கசிவு ஏற்படுதல். கழுத்துப் பகுதியில் ஏற்படும் வலியற்ற வீக்கம். திடீரென ஏற்படும் எடை குறைவு, காய்ச்சல். (குறிப்பாக 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு) மார்பில் வலியற்ற கட்டி தோன்றுதல். உணவை விழுங்குவதில் ஏற்படும் சிரமம். திடீரென்று தோன்றும் அதிக மலச்சிக்கல்.



(எந்தெந்த பகுதியில் ஏற்படும் புற்றுநோய்க்கு என்னென்ன காரணங்கள்?)

வாய் புற்று: புகைப் பிடித்தல், புகையிலை மெல்லுதல், பான் – ஜர்தா போன்றவை மெல்லுதல், முறையான பல் பராமரிப்பு இல்லாமை.



நுரையீரல் புற்று: புகைப்பிடித்தல், ஆஸ்பெட்டாஸ் – சிலிக்கன் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் ஊழியர்களுக்கு.

வயிற்றுப் புற்று: மது அருந்துதல், புகைப்பிடித்தல், வறுத்த – பொரித்த – உணவுகளை அதிக அளவு சாப்பிடும் முறையற்ற உணவுப் பழக்கம்.

ஈரல் புற்று: மது அருந்துதல் மற்றும் வைரஸ் தொற்று.

மார்புப் புற்று: குழந்தையில்லாமை, ஒரு குழந்தை மட்டும் பெற்றெடுத்தல், தாய்ப்பால் புகட்டாமை, குண்டான உடல்வாகு.

கருப்பை புற்று: அதிகமாக குழந்தை பெற்றெடுத்தல், எச்.பி.வி.வைரஸ் தொற்று. (எச்.பி.வி. வைரஸ் தொற்று ஏற்பட்டு இந்த புற்றுநோய் உருவாகாமல் இருக்க தடுப்பு ஊசி மருந்து கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது. வெளிநாடுகளில் இப்போது பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது)

**சரும புற்று:** சருமத்தில் அதிக அளவு வெயில் படுதல், சொரியாசிஸ் போன்ற சில வகை தோல் நோய்கள், நாட்பட்ட ஆறாத புண்.

(இந்தெந்த புற்றுநோய்க்கு இவைகள் காரணங்கள் என்று சொல்லப்பட்டாலும், பிரச்சினைக்குரிய பழக்கமே இல்லாத ஒருவருக்குகூட இந்த நோய் ஏற்படலாம். ‘மது அருந்தமாட்டார். புகைப்பிடிக்கும் மாட்டார். அவருக்கு வயிற்று புற்றுநோய் வந்துவிட்டதே’ என்று வருந்திப்பயனில்லை. முற்றிலும் மாறுபட்ட இதர காரணங்களால் அவருக்கு நோய் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம்.)

**புற்றுநோய்களை தடுக்க முடியுமா?**

தடுக்க முயற்சிக்கலாம். மேற்கண்ட பழக்க வழக்கங்கள் இல்லாமல் இருந்தால் முடிந்த அளவு தடுக்கலாம் தானே! குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றால் புகையிலை, மது, புகைப்பிடித்தல், பான்பரக் பயன்படுத்துதல் போன்றவைகளை தவிர்த்திடுங்கள். முடிந்த அளவு தவிர்த்திட முடியும்.

ஹியூமன் பபிலோமா வைரஸ், (Human Papilloma Virus – H.P.V) மூலம் கருப்பை புற்றுநோய், ஆண்குறி புற்றுநோய் ஏற்படுகிறது. இவைகளை தடுப்பதற்கு தேவையான தடுப்பூசி மருந்துகள் உள்ளன. அவைகளை பயன்படுத்திக்கொள்ளலாம்.

நோய் தாக்கியிருப்பதை எத்தகைய சோதனை மூலம் கண்டறிய முடியும்?

முதலில் நாம் குறிப்பிட்டிருக்கும் 10 அறிகுறிகளில் ஏதாவது ஒன்று தென்பட்டால் உடனே டாக்டரிடம் சென்றுவிடவேண்டும். இரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே, அல்ட்ரா சவுண்ட், சி.டி – எம்.ஆர்.ஐ. ஸ்கான்கள், என்டோஸ்கோபி அல்லது ஐசோடோபிக் ஸ்கான்கள் போன்றவைகளில் உங்களுக்கு எந்த மாதிரியான பரிசோதனை தேவை என்பதை டாக்டர் சொல்வார். அதைவைத்து நோயை கண்டறிவார். ஆனால் பயாப்ஸி மூலமே நூறு சதவீதம் கண்டறிய முடியும்.

(சரி கண்டுபிடித்துவிட்டால், குணப்படுத்திவிட முடியுமா?)

ஆரம்ப கட்டத்தில் கண்டறிந்துவிட்டால் 95 சதவீதம் குணப்படுத்தி விடலாம். இதற்காக தொடக்க காலத்திலே அறிகுறிகளை கண்டறிய வேண்டும். முற்றிய நிலை என்றால் குணப்படுத்துவது கடினம். இதில் மகிழ்ச்சிக்குரிய விஷயம் என்னவென்றால் சில வகை புற்றுநோய்கள் எந்த வயதில் வந்தாலும், குணப்படுத்த அதிக வாய்ப்பிருக்கிறது. இதற்கு ‘பெட்டன்சியலி க்யூரபுள் கேன்சர்’ என்று பெயர். சில வகை இரத்த புற்று, நெறி கட்டுவதில் ஏற்படும் புற்று, ஆண் உறுப்பில் பிராஸ்டேட் சுரப்பி அருகில் தோன்றும் புற்று போன்றவை இந்த வகையை சார்ந்ததாகும்.

( நன்றி இணையம்)




**எல்லோருக்கும் – அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்று தான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் – ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் பிரசுரிக்கப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் பிரசுரிக்கப்படுகிறது.**

**இப்போது** அவன் குரலில் கோபம் குறைந்திருந்தது. என்னை அறைந்துவிட்டதற்காக வருத்தப்படுகிறான் என்று அவன் குரல் காட்டிக்கொடுத்தது. அதனால்தான் தனது செயலுக்காக அவசரக்குரலில் ஒரே மூச்சில் விளக்கம் சொன்னான்.

நான் ஒன்றும் பேசாமல் போய் பாயைச் சுருட்டி மூலையில் வைத்தேன். துப்பாக்கியை என் கையில் எடுத்துக்கொண்டேன்.

“நானும் இப்படித்தான். இங்கே சேர்ந்த புதிதில் அடிபட்டிருக்கிறேன். எந்த நேரமும் எமக்கு ஆபத்து வரலாம். பொலிஸாரால் மட்டும்தான் ஆபத்து வரும் என்று நினைக்காதே! நமக்குப் போட்டியான கோஷ்டிகளாலும் ஆபத்து சூழலாம். எப்போதும் நாம் சண்டையிடத் தயாராக இருக்க வேண்டும்! அதனால் துப்பாக்கி நம் கூடவே இருக்க வேண்டும்! நம்மைக் காக்கும் கடவுள் அதுதான்.

“ஆபத்து நம்மைச் சூழ்ந்து பின்னர் துப்பாக்கியை நாம் தேடிக்கொண்டிருக்க முடியாது.” சொல்லிவிட்டுத் தொண்டையைச் செருமினான்.

மல்லா பேசுவதைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம் போலிருந்தது. அவன் சொல்வது எல்லாமே நியாயமாகவே இருக்கிறது என்று நினைத்தேன். எனது கவனக்குறைவுக்காக இப்போது நான் வெட்கப்பட்டேன்.

மல்லா வெளியே போய்விட்டான். அடுத்து கிராமத்துக்குச் செல்வதற்காக எல்லோரும் தயாராகிக்கொண்டிருந்தார்கள்.

அதற்குள் எனக்குப் புதிய உடை தைக்க அளவெடுப்பதற்காக ஒருத்தனை அழைத்து வந்துவிட் டான் பரத் சிங். அவனை என்னிடம் விட்டு விட்டுப் போய்விட்டான் பரத் சிங்

அந்த ஆள் நடுத்தர வயதுக்காரனாகத் தெரிந்தான். அவன் பார்வையே சரியாக இல்லை. என்னைப் பார்த்து தன் காவிப் பற்கள் தெரியச் சிரித்தான். கையில் ஒரு அழுக்கடைந்த சிறிய பை வைத்திருந்தான். அதற்குள் இருந்து ஒரு நீளமான நாடாவை எடுத்தான்.

என்னருகே வந்து அந்த நாடாவால் என் இடுப்பைச் சுற்றி அளவெடுத்தான். பின்னர் என் தோள்மூட்டில் இருந்து மார்புக்கு மேலாக நாடாவை வைத்து அளவெடுத்தான். எனக்கு கூச்சமாக இருந்தது.

அளவெடுப்பது போல நாடாவை பிடித்துக்கொண்டிருந்தவன், விரல்களால் என் மார்பில் தொட்டான். வேண்டுமென்றே அப்படிச் செய்கிறானா என்று உடனே என்னால் தீர்மானிக்க முடியவில்லை.

இப்போது அவன் என் முகத்தைப் பார்த்து இளித்தான். எனக்குப் புரிந்துவிட்டது. இவன் வேண்டுமென்றே வம்பு செய்கிறான்.



இப்போது பழைய பூலான் அல்ல. புதிய பூலான். என்னிடம் முதல் அடிவாங்கப் போகிறவன் இவன்தான்.

“ஏய் குட்டி புதிதாகச் சேர்ந்திருக்கிறாயா.” என்று கேட்டுக்கொண்டே அளவெடுக்கும் சாக்கில் அவன் விரல்கள் மேலும் அத்துமீறிக் கொண்டிருந்தன.

“சட்டை சரியான இறுக்கமாக இருக்கிறது. இந்த இடத்தில்தான் இறுக்கம்!” சொல்லிக்கொண்டே தொட்டுக் காட்டினான்.

என் விளையாட்டை இவனிடம் தான் ஆரம்பிக்க வேண்டும் என்று முடிவு செய்தேன்.

“உனக்குத் திருமணமாகி விட்டதா?” என்று கேட்டேன். கேட்கும்போதே சிரிப்பாக வந்தது.

“ஏன் நீ என்னைக் கட்டிக்கொள்கிறாயா?” என்று கேட்டேன்.

“காற்சட்டைக்கு அளவு வேண்டாமா?” என்றேன். மடங்கி குனிந்து காற்சட்டைக்கு அளவெடுத்தான்.

“தூண்மாதிரி இருக்கிறது” என்றான்.

“உனக்குக் கல்யாணமாகிவிட்டதா?” என்றேன் மீண்டும்.

அவன் நிமிர்ந்து என்னைப் பார்த்துக் கொண்டே; “என்ன நீ, அதையே திருப்பித் திருப்பிக் கேட்கிறாய்? ஆகிவிட்டதா. அவள் ஒரு நோஞ்சான். உன்னை மாதிரி ஒருத்தி கிடைத்தால்...”

“கிடைத்தால்?”

“அவளை தாய் வீட்டுக்குத் துரத்தி விடுவேன்.”

“அளவெடுத்துவிட்டாயா?”

“உனக்கு எல்லாமே சரியான அளவுதான். நீ எப்படி இவர்களுடன் சேர்தாய்?”

“ஏன் சேர்ந்தாய் என்று கேள்?”

“ஏன் சேர்ந்தாய்?” அவன் கேட்டு முடிப்பதற்கிடையில் சட்டென்று என் கைகளை வீசி அவன் கன்னத்தில் அறைந்தேன்.

“இதுக்குத்தானடா சேர்ந்தேன்!” சொல்லிக் கொண்டே என் காலை மடக்கி உயர்த்தி முழங்காலால் அவன் வயிற்றில் இடித்தேன்.

நான் அப்படிச் செய்வேன் என்று அவன் எதிர்பார்க்க வில்லை. அந்த அதிர்ச்சியால் அவன் தன்னைத் தற்காத்துக் கொள்ள முடியவில்லை.

அவன் தயாராகி திருப்பி அடிக்க நினைக்க முன்னர் நான் குரலை அடக்கி அவனை எச்சரித்தேன்.

“ஒரு குரல் கொடுத்தேன் என்றால் விக்கிரம் மல்லா ஓடிவந்துவிடுவான். உன்னைக் கொன்று போட்டுவிடுவான். கூப்பிடவா?”

சட்டென்று அவன் கண்களில் பயம் சூழ்ந்து, முகம் வெளிறியது. தன் கைகளைச் சேர்த்து கூப்பினான்.

“வேண்டாம். நான் பிள்ளை குட்டிக்காரன். என்னைவிட்டு விடு, என் உயிரைக் காப்பாற்று தாயே!”

அவன் மன்றாடுவதைப் பார்க்கச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது. கண்ட இடமெல்லாம் தொட்டுவிட்டுத் தாயே என்கிறானே என்று நினைத்ததும் வெறுப்பாகவும் வந்தது.

“நாயே! யாரடா தாய்? என்றேன். எனக்குத் தைரியம் இப்போது அதிகமாகிவிட்டது. நான் என்ன செய்தாலும் இவன் பதிலுக்கு எதுவும் செய்யமாட்டான் என்று தெரிந்துவிட்டது.

இவனைப் போன்ற நாய்கள் தானே நான் தனியாக மாட்டிய போது கடித்துக்குதறின. ஒரு பெண் என்று இரக்கம் பார்த்தார்களா? கருணை காட்டினார்களா? இல்லையே! பாவிகள். பரதேசி நாய்கள்.

நினைக்க நினைக்கச் சுள்ளென்று கோபம் தலைக்கேறியது. என் முன்னால் நின்றவன் அந்த நாய்களின் ஒருவனாகவே தெரிந்தான்.

அவன் கைகூப்பி மன்றாடுவதை மனதாரப் பார்க்கவேண்டும் போல வெறி ஏற்பட்டது.

அவன் சட்டையில் எட்டிப் பிடித்தேன். “சத்தம் போடாதே!” என்று இரகசியக் குரலில் சொல்லிக்கொண்டே மீண்டும் என் முழங்காலை மடக்கி அவன் வயிற்றில் இடித்தேன்.

“அ...அய்யோ அம்மா!” என்று வாய்க்குள் முனகினான்.

எனக்கு ஆனந்தமாக இருந்தது. நானும் இப்படித்தானே முனகியிருக்கிறேன்.

“நாயே! நான் யார் தெரியுமாடா?” என் வலது கையை காற்றில் வீசி அவன் கன்னத்தில் அறைந்தேன்.

“தெ... அடிக்காதே... தா...யே! தெரியாது. சத்தியமாகத் தெரியாது... தெரிந்திருந்தால் நான் பிள்ளை குட்டிக்காரன் தாயே... நீ யார் என்று தெரிந்திருந்தால் உன்னை அப்படி... அப்படி அய்...யோ...”

நான் இறுதியாக முழங்காலால் இடித்தது அவன் அடி வயிற்றுக்குக் கீழே அப்படியே கைகளால் பொத்திக்கொண்டு முறிந்த மரம்போல் குனிந்து துடித்தான்.

**(திருப்பங்கள் தொடரும்...)**

# காதலாகிக் கசிந்துருகும் நட்பு!

நடிகைகளுக்கும் இயக்குனர்களுக்கும் இடையே காதல் ஏற்படுவது இயற்கை தான். அது கல்யாணம் வரைக்கும் போவது கூட சகஜம் தான். இதற்கு உதாரணமாக ஏராளமான ஜோடிகளை குறிப்பிடலாம். ஆனால் அவர்கள் கடைசி வரை ஒற்றுமையாக வாழ்ந்தார்களா என்பது வேறுவிடயம். இப்போதும் அப்படி ஒரு காதல் ஜோடி ஊர் சுற்ற ஆரம்பித்திருக்கிறது. இது பற்றி தான் கோடம்பாக்கத்தில் ஒரே பேச்சு. மதராசப்பட்டினம் படத்திற்கு முன்பு விஜய் இயக்கிய படம் பொய் சொல்லப் போறோம். இதில் கதாநாயகியாக நடித்தார் பியா.
அந்த நட்பு காதலாகி வளர்ந்து நிற்கிறதாம் இப்போது. சமீபத்தில் பியா நடித்த தெலுங்கு படம் ஒன்றின் ஒடியோ வெளியீடு ஐதராபாத்தில் நடந்தது. பியாவுக்காக மொத்த கூட்டமும் காத்திருக்க, ஜம்மென்று காரில் வந்திறங்கினார் அவர். கூடவே வந்தார் விஜய்யும். விழாவில் பலர் கண்கள் இவர்களை நோட்டமிட அவற்றை கருத்தில் எடுக்காது இருவரும் காதலில் திளைத்து கசிந்துருகிக் கொண்டனராம்



# வருடிப் பார்
# மன்னிப்புக் கே

நடிகை அனுஷ்கா, சமீபத்தில் வெளிப் புற படப்பிடிப்பு ஒன்றில் பங்கேற்க சென்றார். தங்கச் சிலை போல தகதகத்த அனுஷ்கா விடம் 'ஆட்டோகிராப்' வாங்க ஏராளமான ரசிகர்கள் அங்கு கூடி விட்டனர். 'ஆட்டோகிராப்' கேட்டு அவரை நெருங்கிய ரசிகர்கள் சிலர் அனுஷ்காவின் கதகதப்பை வருடிப்பார்த்திருக்கிறார்கள்.
இதனால் ஆத்திரமடைந்த அனுஷ்கா, வாய்க்கு வந்தபடி ரசிகர்களை திட்டித்

தீர்த்து வி
ரசிகர்கள்
சேர்ந்து
எதிராக
நெரிசலில்
ரசிகரை இ
மன்னிப்பு
அவர்கள்
கேட்காவி
நடத்த மு
போட ஆ
விபரீதமா
அனுஷ்கா
ரசிகர்களி
இதையடு
அங்கிருந்
சென்றனர்.

# மனதை திறக்கிறார் அனுஷ்கா!

சிங்கம், வேட்டைக்காரன் போன்ற தமிழ் படங்களில் நாயகியாக நடித்த அனுஷ்கா, அளித்த பேட்டியொன்றில் கூறியதாவது: தெலுங்கில் ஹிட்டான வேதம் படம் தமிழில் வானம் பெயரில் ரீமேக் ஆகி திரைக்கு வந்துள்ளது. தமிழில் நானே நடித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. நிறைய பேர் விலைமாது கதாபாத்திரத்தில் நடிக்கிறாயே என்றெல்லாம் விமர்சித்தனர். கதை பிடித்ததால் நடித்தேன். யோகா என் வாழ்க்கையோடு ஒரு அங்கமாகி விட்டது. 12 வயதில் இருந்து செய்கிறேன். தினமும் குறைந்தது ஒரு மணி நேரமாவது யோகா செய்து விடுவேன். சூரிய நமஸ்கார ஆசனம் மட்டும் 108 தடவை செய்வேன்.

அதேவேளை தமிழ், தெலுங்கு படங்களில் வித்தியாசத்தை பார்க்கிறேன். தெலுங்கு படங்கள் ஆர்ப்பாட்டமாக இருக்கும். ஆனால் தமிழ் படங்கள் யதார்த்தமானவை. அப்படிப்பட்ட படங்களைத் தான் தமிழ் ரசிகர்கள் விரும்புகின்றனர்.
விக்ரமுடன் இணைந்து நடிக்க ஆர்வம் இருந்தது. தெய்வத்திருமகள் படத்தில் அது நிறைவேறி உள்ளது. சிங்கம் படத்தை இந்தியில் ரீமேக் செய்து அதில் நடிக்க அழைத்தனர். நான் மறுத்து விட்டேன். தென்னிந்திய மொழி படங்களில் நடிக்கவே விரும்புகிறேன். சினிமா எனக்கு முழு ஆத்ம திருப்தியை அளித்து உள்ளது.

# பக்குவமான மனசு

அங்காடி தெரு, மதராசப்பட்டினம் படங்களுக்கு தேசிய விருது கிடைக்காமல் ஆடுகளம் படத்திற்கு கிடைத்திருப்பது பலருக்கும் வியப்பை ஏற்படுத்தியிருக்கிறது. ஆடுகளம் மாதிரி வர்த்தக ரீதியிலான படங்களுக்கு தேசிய விருது கிடைப்பதால், நியாயமான சிறந்த படங்களுக்கு கிடைக்காமல் போய்விடுகிறதே. இது சரிதானா என்ற கேள்வியை வெற்றி மாறனிடமே எழுப்புகிற அளவுக்கு பத்திரிகையாளர் களுக்கும் அதிர்ச்சிதான். அங்காடி தெரு இயக்குனர் வசந்த பாலனிடம் கேட்டால், நான் மக்களுக்காக படம் எடுக்கிறேன். விருது கிடைத்தால் சந்தோஷம். கிடைக்கலேன்னா வருத்தமில்லை என்று கூறியிருக்கிறார். இதே பதில் தான் மதராசப்பட்டினம் விஜயிடமிருந்தும். இளம் இயக்குநர்களின் பக்குவமான மனசுக்கு இதைவிட ஆதாரம் தேவையா?

# கால்ஷீட்டுக்கு கால் கடுக்க நிற்கும்

திரிஷாவுக்காகவே கதையை உருவாக்கிக் கொண்டு அவரின் வீட்டு வாசலில் கதை சொல்லக் காத்து கிடக்கிறது ஒரு கூட்டம். இயக்குனர் ஆகவேண்டும் என்ற கனவுடன் கோடம்பாக்கத்திற்கு படையெடுப்பவர்களில் பலர் திரிஷாவை வைத்து ஒரு படமாவது பண்ண வேண்டும் என்று நினைக்கிறார்கள். அதற்காக அவரிடம் கால்ஷீட் கேட்டு கால் கடுக்க காத்திருக்கிறார்கள் அந்த இளம் இயக்குனர்கள். ஆனால் அம்மணியோ, அனுபவம் இல்லாத இளம் இயக்குனர்களை தவிர்த்து வருகிறார். இதுபற்றி

த்ரி'ா அளித்து
நான் எத்தனை
நடித்திருக்கிறே
யும் நானும், வ
வருவாயா, ம
போன்ற படங்
அடையாளமாக
என நினைக்கி
அதேபோன்று,
அடையாளப்ப
படங்களில் தா
போகிறேன். நி
இயக்குனர்கள்
காத்திருக்கிறா
தான் தவிர்த்து
என்று கூறியுள்

# கமல் – செல்வா லட
# சந்திக்கு வராத சங்க

கமல் நடிப்பில் ஒரு படத்தை இயக்க ஆசைப்பட்டார்
பொருத்தமாக ஒரு தயாரிப்பாளரும் கிடைத்தார் இவர்
இதையடுத்து கமலும் செல்வாவும் சந்தித்தார்கள். எல்
நல்லபடியாகவே போனது. திடீரென்று இப்படத்தை இய
கமல் என்று செய்திகள் வர, அப்ப செல்வராகவன் க
கேள்வியோடு புலனாய்வு ஆரம்பித்தது. என்னதான் ந
இருவருக்குள்? விசாரிக்கலாம் என்று மூக்கை நுழைத்
தகவல்கள்.

அதாவது, இருவரும் சந்தித்த போது ஒரு வரி கதை
சொன்னாராம் செல்வா. இது நல்லாயிருக்கு. ஒரு வ
டெவலப் பண்ண டைம் எடுத்துக்கங்க. நாம அடுத்த
சந்திக்கும் போது நிறைய பேசலாம் என்று அனுப்
வைத்தாராம் கமல். ஒரு வாரம் கழித்து சந்தித்தார்
இருவரும். அதற்குள் தனது லைப்பரரியில் தேடிய
நெட்டில் மேய்ந்தும் ஏராளமான தகவல்களை திரட்
தார் கமல். செல்வாவே பிரமிக்கிற அளவுக்கு ஒன்
மணி நேரம் பேசினாராம் இப்படம் குறித்து. பின்ன
சொல்லுங்க என்று கமல் சொன்னதும், செல்வா
ஆரம்பித்தார். ஆனால் அது மூன்று நிமிடம் கூட நீ
யாம். அவ்வளவுதான் இந்த கதைக்காக உழைத்தி
அவர். அதைவிட, செல்வா சொன்ன காரணம்தான்
கொதிப்பை ஏற்படுத்தியதாம். கொஞ்சம் வேலையா இ
என்றாராம் அவர். அதன்பிறகுதான் செல்வாவை சந்திக்க
விலகிப் போனாராம் கமல். அதற்குள் தயாரிப்பா
கமலுக்கும் நேரடியாகவே நெருக்கம் ஏற்பட்டுவிட்
கமல் கைக்கும் போய்விட்டது என்றார்கள்.

அதே நேரத்தில், கமலுக்கு கதை சொல்லப் போ
நேரத்தில் கௌதமி மூக்கை நுழைத்த கொண்டு
தாங்காமல்தான் செல்வா படத்திலிருந்து வெளியே
என்கிறது மறுதரப்பு. எல்லாம் அவர்களுக்கே வெ







# தமிழ் சினிமாவி
# இன்னொரு டும்

'களவாணி' படத்தின் மூலம் இயக்குனராக அவதரித்
விரைவில் திருமணம் நடைபெற இருக்கிறது.
'களவாணி' படத்தின் வெற்றியை தொடர்ந்து அடுத்து,
வா' என்ற படத்தை இயக்கி வருகிறார் சற்குணம். இந்
சற்குணத்திற்கு விரைவில் திருமணம் நடைபெற இருக்
அருகேயுள்ள செண்டக்காட்டை சேர்ந்த சரண்யா என்ப
திருமணம் செய்ய இருக்கிறார். இதற்கான ஏற்பாடுகளை
பெற்றோர் செய்து வருகின்றனர்.
இது குறித்து சற்குணம் கூறியதாவது: எனக்கு திருண
பெற இருப்பது உண்மை தான். இது முழுக்க, முழுக்க
பெற்றோர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட திருமணம். என
பெண்ணாக சரண்யாவை தேர்ந்தெடுத்துள்ளனர் எனது
ஆகையால் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்து
'வாகை சூட வா' படத்தின் படப்பிடிப்பில் இருந்ததால்
என்னால் கலந்து கொள்ள முடியவில்லை. ஆனால் என
சரண்யாவிடம் தொலைபேசியில் எடுத்துரைத்தேன் என்

## ர்த்தார் ரசிகர்!
## கட்டார் அனுஷ்கா!!

விட்டாராம். இதையடுத்து அங்கிருந்த
ள் எல்லோரும் ஒட்டு மொத்தமாக
கொண்டு அனுஷ்காவுக்கு
கோஷமிட்டுள்ளனர். கூட்ட
யில் தெரியாமல் இடித்த
இப்படி திட்டியதற்கு
ப்பு கேட்க வேண்டும், என்று
ள் கூறியதுடன், மன்னிப்பு
விட்டால் இங்கு படப்பிடிப்பு
முடியாது என்று கூச்சல்
ஆரம்பித்தனர். நிலைமை
மாவதை உணர்ந்த
கா சம்பந்தப்பட்ட
ளிடம் மன்னிப்பு கேட்டார்.
படுத்து ரசிகர்கள்
நந்து கலைந்து
னர்.

## ம் இயக்குனர்கள்

ந்துள்ள பேட்டியில்,
னயோ படங்களில்
றேன். ஆனால் அபி
, விண்ணைத்தாண்டி
மன்மதன் அம்பு
டங்கள் தான் என்
மாக இருக்கும்
க்கிறேன்.
று, இனி என்னை
படுத்தும்
தான் நடிக்கப்
நிறைய அறிமுக
கள் கதை சொல்ல
றார்கள். நான்
த்து வருகிறேன்
புள்ளார்.

## டாய்!
## கதிகள்!!

ர் செல்வா.
வர்களுக்கு.
எல்லாம்
இயக்கப் போகிறார்
கதி? என்ற
நடந்தது
ழத்தால் ஏகப்பட்ட

தையைத்தான்
வாரம்
த்த முறை
ப்பி
தார்கள்
டியும்,
திரட்டியிருந்
ஒன்றரை
ன்னர், நீங்க
பேச
நீடிக்கவில்லை
த்திருந்தார்
ான் கமலுக்கு
இருந்துட்டேன்
க்கவே விடாமல்
ாளருக்கும்
விட்டது. படம்

போன
செய்த லடாய்
யேறினார்
வெளிச்சம்!

## பில்
## டும்...

ரித்த சற்குணத்திற்கு

து, 'வாகை சூட
இந்நிலையில்
ருக்கிறது. தஞ்சாவூர்
ன்பவரை சற்குணம்
களை சற்குணத்தின்

ணம் நடை
க்க எனது
எனக்கு ஏற்ற
து பெற்றோர்,
த்து கொள்கிறேன்.
ல் திருமண நிச்சயத்தில்
எனது நிலைமை குறித்து
ன்றார்.

# கொட்டிக் கொடுக்கப்பட்டது கோடி

கே.வி.ஆனந்த் இயக்கும் மாற்றான் படத்தில் சூர்யாதான் ஹீரோ. இதில் ஐந்து வேடங்களில் நடிக்கிறாராம் சூர்யா. இவருக்கு யாரை ஜோடியாக்குவது என்பதில் பெரும் குழப்பம் நீடித்தது. யார் பெயரை சொன்னாலும் சூர்யாவுக்கு அதில் திருப்தி இல்லாமல் இருந்ததாம். இறுதியில் காஜல் அகர்வால் நோக்கி கையைக் காட்டினாராம் சூர்யா. இதனை ஏற்கெனவே அறிந்து கொண்ட காஜல், கூசாமல் ஒரு கோடி கேட்டாராம். முதலில் அதிர்ச்சியான கே.வி.ஆனந்த், சூர்யாவுக்காக சம்மதித்தாராம். கோ படத்தில் நாயகியை மாற்றுமாறு சிம்பு சொன்னபோது, சிம்புவையே மாற்றி தனது ஆளுமையை நிலை நிறுத்தியவர் கே.வி.ஆனந்த். அதே ஆனந்த், சூர்யா சொன்னார் என்பதற்காக கோடியைக் கொட்டிக் கொடுத்துள்ளார்!



# தேன் கிண்ணம்

## எண்ணமும் அன்பும்

உணர்வுமிக்க மனவெழுச்சியையும் கிளர்ச்சியையும் எப்போதும் உள்ளடக்கமாகக் கொண்ட எண்ணம், அன்பு இல்லை. எண்ணம், தொடர்ந்து அன்பைத் தடுக்கிறது. எண்ணம் நினைவென்கிற ஞாபகசக்தியால் தோற்றுவிக்கப் படுகிறது. ஆனால், அன்பானது நினைவோ ஞாபகமோ இல்லை. நீங்கள் நேசிக்கிற ஒருவரைப் பற்றி நீங்கள் எண்ணும்போது, அந்த எண்ணம் அன்பு இல்லை. உங்கள் நண்பரின் பழக்கங்களையோ, பண்புகளையோ, அவருக்கே உரித்தான சுபாவங்களையோ நினைவில் அசை போட்டு - அவருக்கும் உங்களுக்குமிடையேயான உறவில் நிறைந்த இனிமையான சம்பவங்களையோ, நிகழ்ந்த கசப்பான அனுபவங்களையோ நீங்கள் நினைத்துப் பார்க்கிற பொழுது, அந்த எண்ணமானது மனத்திலே எழுப்புகிற காட்சிகளும் படங்களும் அன்பு இல்லை. எண்ணமானது, அதன் அடிப்படை இயல்பிலேயே, பிளவுபட்ட, தொடர்ச்சியற்ற தன்மையுடையது. நேரம், இடம் என்கிற அறிவும், பிரிவு, துயரம் என்கிற புலனும் எல்லாம் எண்ணத்தின் இயக்கத்தால் பிறக்கின்றன. எப்போது எண்ணத்தின் இயக்கம் நிற்கிறதோ, அப்போது தான் அங்கே அன்பு இருக்கும்.

எண்ணத்தின் இயக்கம் எப்போதும் அன்பைத் தடுக்கிறது, எண்ணத்திற்கே உணர்ச்சிமிக்க சிக்கல்கள் உள்ளன, அன்பிற்கு இல்லை. எண்ணமே அன்பை அடைவதற்கான மாபெரும் தடையாகும். எண்ணத்தின் செயற்பாடே அன்பு கொள்ள வழி செய்கிறது. அன்பென்பது எண்ணம் இருக்கிற, இயங்குகிற நிலையில் இல்லாத நிலையாகும். ஆனால், அன்பை வரையறுக்கிற செயலே, எண்ணத்தின் இயக்கம்தான் எனவே அது அன்பில்லை.

நாம் எண்ணத்தைப் புரிந்து கொள்ளவேண்டும் எண்ணத்தின் மூலம் அன்பினை அடைய முயற்சிக்கக் கூடாது. எண்ணத்தை மறுதலிப்பது அன்பினைக் கொணர்வதில்லை. எண்ணத்தின் ஆழமான முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளும்போதே எண்ணத்திலிருந்து விடுதலை பிறக்கிறது. அதற்கு - ஆழ்ந்த தன்னறிவும், சுய ஞானமும் அத்தியாவசியமானவை. வீணான உறுதிப்பாடும், மேலோட்டமான வலியுறுத்தலும் அல்ல. தியானம் - ஆனால் செக்குமாடு போல செய்ததையே திருப்பிச் செய்வது அல்ல, விழிப்புணர்வு - ஆனால் வரையறைகள் அல்ல, ஆகியவை மனத்தின் வழிகளை வெளிக்கொணர்கின்றன. விழிப்புடன் இல்லாமலும், எண்ணத்தின் இயக்கத்தையும் வழிகளையும் அனுபவித்து உணராமலும், அன்பு என்கிற நிலை இருக்க இயலாது.

## ஏக்கங்களுக்கு என்ன பதில்?

அநாதரவாகிப் போன
எங்கள் ஊர் அழுகிறது
அகதியாகிப் போன
எங்கள் மனம் அழுகிறது
பசுமையை இழந்த
விளைநிலம் அழுகிறது
சிரிப்பொலி கேட்கவில்லை என
கடைத்தெரு அழுகிறது
காதலர் சந்திக்கும்
அந்த ஆலமரம் அழுகிறது
சிறுவர்களைக் காணாத
மைதானம் அழுகிறது
மாணவர்களைக் காணாது
பள்ளிக் கூடம் அழுகிறது
இந்த அழுகைகள் எல்லாம்
ஆறுதல்படுத்தப்பட
பக்கத்து வீட்டுப் பார்கவி அக்காவின்
உள்ளம் அழுகிறது
காணாமல் போன கணவன்
உயிரோடு இல்லையா என்று?

இ.நவதர்சினி-வயாவிளான்



## சில நேரங்களில்... சில மனிதர்கள்...

ஆலய மண்டபத்தில்
ஆயிரம் அடியார்க்கு
அன்னதானம்
அகதிக் குழந்தையொன்று
அவன் வீட்டு வாயிலில்
ஒட்டிய வயிற்றுடன்.
பக்கத்து வீட்டில்
எல்லை விஸ்தரிப்பு
போராட்டம்
பட்டிமன்றங்களில்
பக்கம் சாரா சமத்துவ
சமர்க்களங்கள்.

தினமும்...
ஏழையின் வீட்டில்
கண்ணீரில் குளிப்பு
பணக்காரன் காட்டில்
பன்னீரில் களிப்பு.

தாயே
அநாதை இல்லத்தில்
தனித்திருக்கின்றாள்
தனயனோ...
அந்நிய நாட்டில்
தகித்திருக்கிறான்.

க.நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.

## திருட்டுக்கள்

என் இதயம் திருடியவள்
காணாமல் போயிருக்க
விசும்பல் கொண்டு
எழுதினேன் பல கவிகள்
இப்போதோ
என் கவிதைகள்
திருடப்படுகின்றன
என் அனுமதியின்றியே
இன்னொருவரின்
காதலிற்காய்?

பா.பொன்நிலவன்,
மீசாலை.

## உதாரணத் தம்பதிகள்

இருவரும் வாழ்கிறோம்
ஒரு வீட்டில்
நீ இட்ட தாலி
இவள் கழுத்தில்.
ஊரார் பார்வையில் நாம்
உதாரண தம்பதிகள்.
உனக்கும்...
எனக்குமே தெரியும்
எண்ணெய்யாக நீ
தண்ணீராக நான்.

யோ.புரட்சி.


## மௌனக்குரல்

ஏன் இந்த மௌனம்
அவளிடமிருந்து
பதிலாக வந்தது.

விலக முடியாத நெருக்கம்
அவளுடன் எனக்கும்
என்னுடன் அவளுக்கும்
கடக்க முடியாத தூரம்
அவள் எனக்குத்தான்
முடக்க முடியாத துயரம்
என் நெஞ்சில் தலைமையாய்.

கண்மூடித் திறக்கு முன்னாவது
நீ ஒரு வார்த்தையை
சொல்வதிற்கில்லை- ஆனாலும்
என் மனம்
சொல்லும் மொழி
உன் உதடு மட்டும்தான்.

பா.அஞ்சலி- திருநெல்வேலி



## சொர்க்கம்

நான்
சொர்க்கத்தை
தினமும் அனுபவிக்கிறேன்
அன்னை மடியில்
சாய்வதால்...

இ.ரமேஷ்-அளம்பில்.



## அன்னையே...



அன்னையர் தினம்
கடந்தாலென்ன
அனுதினமும்
அவளுக்குத்தான்...

உருவோடு உயிர்
கொடுத்த அன்னையே
தாய் மடியில் தவழ
ஏங்குகிறேன் நித்தமும்...

உன்னை அபலையாய்
கைவிட்ட கயவனை
தந்தை என நினைக்க
உள்ளம் வெறுக்கிறது.

பெற்றவள் நீ
இருக்கையில்
அநாதையாக
நான் ஏன் இங்கு?...

எனை
அநாதை இல்லத்திலிருந்து
விடுதலை செய்வதால்
உனை...
முதியோர் இல்லத்தில்
சிறையிடமாட்டேன்...

மூச்சு உள்ளவரை
முதுகினில் சுமப்பேன்
முகஞ்சுளிக்காது...

உன் முகம் காணத் துடிக்கும்
பச்சிளங் குழந்தையாய்
பரிதவிக்கிறேன்...

என்னில்
பரிதாப்படுவாய்
எப்போது
என் அன்னையே?...

ஆஷிகா, கொழும்பு-12



**இலங்கையில்** பெண்களுள் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள மலையகப் பெருந்தோட்ட பெண்கள் சார்ந்த நிலைப்பாடு எவ்வாறு உள்ளது என்பதை நாம் சிந்தித்து பார்க்க வேண்டிய கட்டாய நிர்ப்பந்தம் உண்டு. அதற்காக அவர்களது சமூக அரசியல் பொருளாதாரம் சார்ந்த வாழ்க்கை முறையினை நாம் சற்று நோக்கி பார்ப்பது அவசியமானதாகும்.

இலங்கையின் பொருளாதாரத்தில் முதுகெலும்பு என வர்ணிக்கப்படும் பெருந்தோட்டத் துறை உற்பத்தியான தேயிலையினை பெற்றுத் தரும் தொழிலாளர்களுள் 65 சதவீதமானவர்கள் மலையகப் பெண்களே. 1960ன் பிறகு 1990 வரை இலங்கையின் வருமானத்தில் 63 சதவீதமான வருமானத்தை ஈட்டித் தந்தவர்கள் இந்தப் மலையகப் பெண்கள் எனக் கூறலாம்.

# மலையகப் பெண்களின் எதிர்காலம்?

அந்த வகையில் மாறிவரும் உலகில் இந்த வருமானத்துறை வீழ்ச்சியடைந்தாலும் பெருந்தோட்டத் துறைப் பொருளாதாரம் இன்று வரை நிலைத்திருப்பதன் காரண கர்த்தாக்களாக மலையகப் பெண்கள் உள்ளனர் என்றால் அது மிகையில்லை. ஆனால் இவர்களது வாழ்க்கையோ முட்கள் நிறைந்த காடுகளாய் காணப்படுகின்றது.

ஆரம்ப காலங்களைவிட சமகால சூழ்நிலை ஓரளவு மாற்றமடைந்து இவர்களது வாழ்க்கையில் முன்னேற்றமான ஒரு போக்கு காணப்பட்டாலும், ஏனைய சமூக பெண்ணின் அடிப்படையான வளர்ச்சி வேகத்துடன் ஒப்பிடும் போது இவர்களது இந்த முன்னேற்றப் பாதை திருப்திகரமானதாக இல்லை. என்பதை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும்.

தனக்கென மரபு ரீதியான மூட நம்பிக்கையூடான ஒரு சமுதாய கட்டுப்பாட்டினை கொண்டு வாழ்கின்ற இப்பெண்களில் நூற்றுக்கு 20 சதவீதமானவர்களே தனது உரிமை தொடர்பான அக்கறை கொள்பவர்களாக இருக்கின்றனர். இதற்கான காரணம் வறுமை. விழிப்புணர்வான கல்வி, அறிவு, வலிமை என்பவற்றை ஆண் சமூகத்திடம் அடகு வைத்தவர்களாகவே இப்பெண்கள் காணப்பட்டாலும் அண்மைக் காலமாக இந்த பெண்களின் வாழ்வாதாரம், வாழ்க்கை முறை சற்று மாற்றமடைந்து வருகின்றது. இருந்தாலும் அவர்கள் அடக்கப்பட்டே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மலையகப் பெண்கள் பெருந்தோட்டத்துறை பெண்கள் தேயிலை பறிக்கும் வேலையை விட்டு கல்வியில் ஆர்வம் காட்ட வேண்டும், சுய தொழில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும், சுயசிந்தனையோடு தனக்கான எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். சிறுவயதிலேயே வேலைக்குச் செல்வதை நிறுத்த வேண்டும். இதை ஆண், பெண் இருபாலாரும் முடிவு செய்ய வேண்டிய கட்டாயம் தேவை உண்டு.

மலையக பெண்களின் மகிமையை உழைப்பால் மட்டுமல்லாது பண்பாடு, கல்வி, கலாசாரத்திலும் இன்னும் சிறப்பாக முன்னேறவேண்டும். அதுவே மலையகப் பெண்களுக்குப் பெருமை.



# குழந்தைகளை பயம் காட்டி வளர்க்காதீர்கள்!

சாப்பிட மறுக்கும் குழந்தைகளை பேய் வருகிறது, நாய் கடிக்கும், எனச் சொல்லி பயம்காட்டி சாப்பிட வைக்கும் தாய்மார்கள், தங்கள் குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியை முடக்கிவிடும் முட்புதர்களாவார்கள். இவை ஒருவரது ஆளுமையையே முடக்கி விடுகிறது என்பது உளவி யல் உண்மையாகும்.

குழந்தைகள் சாப்பிட அடம் பிடித்தாலோ அல்லது அழுகையை நிறுத்துவதற்கோ, பயமுறுத்தி அவர்களின் அழுகையை நிறுத்த முயலாதீர்கள். குழந்தைகளுக்கு அழுகை என்பது ஓர் உணர்ச்சி வெளிப்பாடு என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

பிறந்தவுடன் குழந்தை அழுகிறது. இதனால் அதற்கு உயிருள்ளது என்று அறிந்துகொள்கிறோம். அதன்பிறகு வரும் அழுகையினால் பசி, வலி போன்ற உணர்வுகளை தாய் புரிந்து கொள்கிறார்.

குழந்தைகளை இன்னும் சிலர் மேலே தூக்கிப்போட்டு விளையாடுதல், ஆலவட்டம் சுற்றி விளையாடுதல் போன்றவை கூடாது.

குழந்தைகளை இயல்பாக வளரவிட வேண்டும். அதிகமான பயம் காட்டி வளர்த்தால் தன்னம்பிக்கை இழப்பு, வெறுப்புணர்வு, பிளவுபட்ட ஆளுமைக் கூறுகள், மற்றவர்களுடன் குறைவாக பழகும் பாங்கு என பல்வேறு அவலங்களுக்கு ஆளாகின்றனர்.

அன்புடன், பாசத்துடன், அரவணைப்புடன், தன்னம்பிக்கை வளரும் விதமாக குழந்தைகளை உருவாக்குங்கள்.

அச்சம்தவிர் என்ற சொல்லுக்கேற்ப, தைரியமாக வளர குழந்தைகளுக்கு பெற்றோர் ஆதரவளிக்க வேண்டும். குழந்தைகளுக்கு நல்ல நடத்தைப் பண்புகளை பக்குவமாக கற்றுக் கொடுத்து, நல்ல சந்ததியை உருவாக்குங்கள்.

Welcome

## லேடீஸ் ஸ்பெஷல்

பெண்கள் பக்கம்...



லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷ

# தலைமுடி பளபளப்பாக...

**பாசிப்பயிறு** அரைத்து தலைமுடியில் தேய்த்துக் குளிப்பது தலைமுடிக்கு நல்ல ஊட்டச்சத்து.

வாரத்திற்கு ஒரு முறை அல்லது 15 நாட்களுக்கு ஒரு முறை முட்டையின் வெள்ளைக்கரு, தயிர், பாசிப்பயிறு மூன்றையும் சேர்த்துத் தடவி வந்தால் தலைமுடிக்குத் தேவையான சத்துக்கள் கிடைப்பதுடன், தலைமுடி நன்கு பளபளப்பாக இருக்கும்.

வேப்பிலை, துளசி, புதினா மூன்றையும் நன்கு அரைத்து தலையில் பேக் போட்டு அரை மணி நேரம் ஊற வைத்துக் குளித்தால் பேன் தொல்லையில் இருந்து விடுபடலாம்.

வால்மிளகை பாலில் ஊற வைத்து நன்கு அரைத்து அதை தலையில் தடவி 15 நிமிடங்கள் ஊற வைத்து அலசினால் பொடுகுத் தொல்லை போய்விடும்.

மருதாணி, எலுமிச்சைச் சாறு இரண்டையும் தலையில் தடவி அரைமணி நேரம் ஊற வைத்துக் குளித்தால், உடல் சூடு தணிவதுடன் முடிக்கும் நல்ல வலு கிடைக்கும்.

வெயில் காலங்களில் முடி வறண்டு காணப்படும். அதைத் தவிர்க்க செம்பருத்தி இலை, வெந்தயம், கறுப்பு உளுந்து, தயிர், எலுமிச்சைசாறு எல்லாவற்றையும் தேவையானளவில் அரைத்து தலையில் தேய்த்து 15 நிமிடங்கள் ஊற வைத்த பின்னர் குளிக்க வேண்டும்.

இதனால் முடி உலர்ந்து போகாமல் இருப்பதோடு பொடுகுத் தொல்லை, நுனி முடியில் வெடிப்பு ஏற்படுதல் என எல்லா முடி பிரச்சினைகளையும் தவிர்க்கலாம்.

கோடை காலங்களில் தலை சருமம் வறண்டு காணப்படுபவர்கள் வால்மிளகு, வெந்தயம் (4:2) என்ற விகிதத்தில் இரண்டையும் பசும்பாலில் ஊற வைத்து இதனுடன் கசகசாவையும் கலந்து அரைத்து தலையில் ஊற வைத்து அரைமணி நேரம் கழித்து குளிக்க, கூந்தல் மென்மையாகவும் பளபளப்பாகவும் மாறும்.



## குறிப்பு

கடந்த வாரம் வெளியாகிய 912 ஆவது தினமுரசில் 'லேடீஸ் ஸ்பெஷல்' பகுதியில் பிரசுரமாகிய வாசகர்களுக்கான போட்டிக் கேள்வியானது

**ஆண்களின் மூளை பெண்களின் மூளையை விட எத்தனை கிராம் அதிகமானது?**

என்பதே சரியானதாகும்.

ஆர்

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :- 271**

கேள்வி : மலையகப் பெண்கள் எவற்றில் சிறப்பாக முன்னேற வேண்டும்?

**பரிசு 1000/- ரூபா.**

விடையைப் பக்கத்திலுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி, பரிசுப் போட்டி இல : 271**

**தினமுரசு வாரமலர், த.பெ.இல : 1772, கொழும்பு, த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- **14.06.2011**

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்.

**பரிசுப் போட்டி இல:- 269 இற்கான விடை:-** கால்களை 11 போல, நேராக வைத்து நடக்க வேண்டும்.

**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:-** ப.முருகேசபிள்ளை, அல்லைப்பபுலம் வீதி, அராலி மத்தி, வட்டுக்கோட்டை

**271**

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

..............................

தே.அ. அட்டை இல : ..............................

விடை : ..............................

கையொப்பம் : ..............................




அந்த ஜன்னல் கதவு திறக்கப்பட்டது.

அப்போதும் அந்த உருவத்தின் பின்புறத்திலிருந்து வருகிறது. அந்த உருவம் ஏரிப்பரப்பை வேடிக்கை பார்த்தபடி நிற்கிறது. அவர் கை-யில் ஏதாவது தட்டுப்பட்டுபடுகிறதா என்று ராபின்சன் கவனித்தான். அவரிடமும் தன்னிடம் இருப்பது போல் பைனாக்குலர் ஏதாவது இருந்தால் தன்னை அவர் கண்டுபிடித்து விடலாம்.

இல்லை... அந்த உருவத்தின் கைகள் இரண்டும் ஜன்னலின் சட்டத்தைப் பிடித்துக்கொண்டு நிற்கின்றன.

உடனே அந்த அறைக்குள் எப்படி நுழைவது என்று ராபின்சன் யோசிக்கத் தொடங்கினான்.

அந்த ஜன்னலில் கம்பிகள் எதுவும் இல்லை.

முந்தைய நாள் சென்ற படி வழியாக மேலே ஏறினால், அதில் வெளிப்புற ஜன்னல் இருந்தால்... அதற்குள் நுழைவது சுலபம்.

"ரோஸி..." அவன் அழைத்தான்.

அவள் படகின் உட்புறம் தரையில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள். அந்தப் பகுதி இருள் நிறைந்ததாக இருந்ததால், வெளியிலிருந்து எவரும் அவளை பைனாகுலர் மூலமாகக் கூடப் பார்க்க முடியாது.

"என்ன.... ராபின்சன்!" அவள் பதில் குரல் கொடுத்தாள்.

"யாரோ இந்தப் பக்கமாகப் பார்க்கிறார்கள்!" அவள் கூறி-னாள்.

"அதே காவல்காரர்தானா?" அவள் விசாரித்தாள்.

"அப்படித்தான் இருக்க வேண்டும்!" என்ற ராபின்சன் பைனாகுலரைத் தாழ்த்தினான்.

"ஆஹா... ஆபத்து!" ராபின்சன் மெதுவான குரலில் கூறினான்.

"என்ன ஆயிற்று?"

அந்தக் காவல்காரனும் நம்மைக் கவனிக்கிறான். அவனிடமும் பைனாகுலர் இருக்கிறது.!" என்ற ராபின்சன் பைனாகுலரின் வியூவை நெருக்கத்தில் கொண்டு சென்றான்.

ஒருவேளை அவர் ஏரியில் உலாவும் படகுகளை வேடிக்கை பார்க்கலாம்." ரோஸி கூறினாள்.

அப்போது அவளும் நீச்சல் உடைதான் அணிந்திருந்தாள். இருவரும் ஒரே நிறத்தில் உடையைத் தேர்ந்தெடுத்திருந்தனர். தலையில் காதை மூடியபடி இறங்கிய இறப்பர் தொப்பி இருந்தது. ஏரியின் ஆழப்பகுதிக்குச் செல்ல நேர்ந்தாலும் காது வலிக்காமல் இருப்பதற்காகப் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட டிஸைன் அது.

"சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கிறதா? நான் தண்ணீரில் இறங்கப் போகிறேன்." ராபின்சன் மெதுவாக படகு நிற்பதற்கு எதிர்த்திசையில் நீரில் இறங்கினான். இப்போது ராபின்சனின் இடத்தில் ரோஸி நின்றுகொண்டிருந்தாள்.

ராபின்சன் நீருக்குள் உள் நீச்சலடித்துச் சென்றான். அவனது இலட்சியம் பங்களா இருந்த கரைப்பகுதியாக இருந்தது.

அதே நேரம் பங்களாவின் மேற்குப்புறம் நின்றிருந்த காவல்காரன் படகையே கவனித்துக்கொண்டிருந் தாலும், ராபின்சன் நீரில் குதிப்பதை அவன் கவனிக்கவில்லை. அவ்வளவு குறுகிய இடைவெளிக்ள் ராபின்சனின் இடத்தில் ரோஸி வந்து நின்றுகொண்டாள்.

இருப்பினும் ஏதோ ஒரு சந்தேகம் ஏற்பட்டதாலோ என்னவோ அந்தக் காவல்காரர் பைனாகுலர் மூலம் ஊன்றிப் பார்த்தார். ராபின்சன் நின்ற இடத்தில் அதே உருவம் மறுபடியும் தென்படுகிறது.

"எதை எவ்வளவு நுட்பமாகக் கவனிக்கிறாய்?" தென்மேற்குப் பகுதியில் இருந்த மற்றொரு காவல் கேட்டார்.

"நீண்ட நேரமாக ஒருவன் படகில் நின்றபடி இந்த இடத்தைப் பார்க்கிறான். அதைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்."

உடனே அவர், அங்கிருப்பவரை நெருங்கி பைனாகுலரை வாங்கி அந்தப் பக்கமாகப் பார்த்தார்.

அப்போது ரோஸி படகில் நின்று கொண்டு மீன் பிடிக்கத் தூண்டில் போடும் காட்சி தென்பட்டது.

அதைத்தான் ராபின்சன் ஞாபகப் படுத்திவிட்டுப் போனான். அவள் கிழக்குத் திசையில் நகர்ந்தாள். நடுநடுவே நீரின் மேற்பரப்பில் தென்பட்ட ராபின்சனின் தலைப் பகுதி

யை அவள் கவனிக்கவே செய்தாள்.

"அந்தத் தூண்டில்காரனுக்கு மீன் ஏதாவது கிடைக்கிறதா என்று கவனியுங்கள்!" வந்து சேர்ந்த காவல்காரர் கூறினார்.

"தூண்டில் போட்டால் மீன் கிடைக்கும். அவன் இந்தப் பக்கமாக வந்தால் தேவைப்பட்டால் நாம் வாங்கிக்கொள்ளலாம்." பழைய காவல்காரர் கூறினார். அவர் சரியான மீன் விரும்பி.

ராபின்சன் எச்சரிக்கையுடன் அவ்வப்போது தலையை உயர்த்திப் பார்த்தான். ஒருமுறை கரையைப் பார்த்தான். கரைக்குச் சுமார் அறுபது மீற்றர் தூரம் இருந்தது. இனி, எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும்.

அப்போதும் தென்மேற்கு மூலைதான் ராபின்சனின் இலட்சியமாக இருந்தது. அந்த வழியாக மட்டுமே அதிக சிரமமில்லாமல் செல்ல முடியும் என்பது அவனது நம்பிக்கை.

எனவே, அவன் அந்த இடத்தை நோக்கி நீருக்குள்ளேயே ஒரு மீன் போல் நீந்தினான்.

சற்று நேரத்துக்குப் பிறகு மெதுவாகத் தலையை உயர்த்திப் பார்த்தான்.

அவன்பார்த்த பகுதியில் அப்போதும் எவரும் தட்டுப்பட வில்லை. அவனது நம்பிக்கை வலுவடைந்தது.

நிதானமாகக் கரையை அடைந்தவன் பங்களாவை நோக்கி இருளில் நடந்தான். அப்போதும் காவல்காரர் கள் ஏரியின் நீர்ப்பரப்பையே ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

சிறு சிறுத்தையின் வேகத்துடன் அவன் பங்களாவின் வடக்குப் பகுதியை நெருங்கினான்.

எல்லோரின் கவனமும் திசை மாறியிருந்ததால் அவன் சுலபமாகப் பழைய சுருள் படிக்கட்டை நெருங்கினான். அதன் பிறகு காரியங்கள் மிகவும் விரைவாக நடந்தன.

(தொடரும்...)

# முதுமையிலும் ஆசை வரும்!

**வயாக்ரா** மாத்திரையை தயாரித்து விற்பனை செய்து வரும் பிஸ்ஸர் நிறுவனம் நடுத்தர மற்றும் முதியோரி டையே உள்ள தாம்பத்திய ஈடுபாடு குறித்து உலகளாவிய ஆய்வு ஒன்றை நடத்தியது. 40 முதல் 80 வயதுக்கு உட்பட்ட ஆண்- பெண் இருபாலர்களிடமும் நடத்தப்பட்ட ஆய்வில் முதுமையிலும் தாம்பத்தியத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள் கொரிய மக்கள் என்பது தெரிய வந்தது.

90 வீதமானாவர்கள், தாம்பத்தியம் என்பது இப்போதும் தங்கள் வாழ்வின் முக்கிய அங்கம் எனத் தெரிவித்தனர். ஆனால் கொங்கொங்கில் எடுக்கப்பட்ட ஆய்வில் 38 வீதமான முதியோர் மட்டுமே தாங்கள் இன்னும் மன்மதலீலையில் ஈடுபடுவதாகத் தெரிவித்துள்ளனர். இத்தகைய ஆய்வுகள் மொத்தம் 28 நாடுகளில் எடுக்கப்பட்டுள்ளது. சத்தான ஆகாரமும், பயிற்சியும் எந்த அளவுக்கு ஒவ்வொருவருக்கும் முக்கியமோ அதுபோல மன்மத விளையாட்டும் தேவை. அதன் மூலமும் ஆரோக்கியம் பெறமுடியும் என்பது பெரும்பாலானவர்களின் கருத்தாக இருக்கின்றது. இந்த மன்மத விளையாட்டுப் பற்றி வெளிப்படையான விவாதம் தேவை என வலியுறுத்தும் டாக்டர்கள் முன் முயற்சிகளையும் எடுத்து வருகிறார்கள். இவ்வுணர்வில் ஆர்வம் குறைவது, உயிருக்கே அச்சுறுத்தல். என்றும் நீரிழிவு, இதய நோய்கள் அதிக பட்ச கொழுப்பு போன்றன அதற்கு காரணமாக இருக்கக் கூடும் எனவும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இக்குறைபாட்டினால் கணவன் - மனைவிக்கிடையே பரஸ்பர அன்பும் நெருக்கமும் குறையும். எனவே இதனை நீடிக்க விடக்கூடாது என்றும் ஆய்வின் முடிவில் கூறப்பட்டுள்ளது.

இவ் ஆய்வில், ஆங்கில வழியில் அளிக்கப்படும் மருந்துகள் தொடர்ந்து உரிய பலனளிக்குமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. பின் விளைவாக உடல் எடை கூடுதல், இதய நோய்கள், புற்றுநோய் போன்றவை ஏற்படக்கூடும். ஆனால் உடலுறவு திறனில் மாற்றம் இருக்கும்.

இதனால் முதுமையிலும் இளமை யாக காதல் விளையாட்டில் தூள் கிளப்ப விரும்புபவர்கள், மூலிகை மருந்துகளை அடிப்படையாகக் கொண்ட சித்த மருத்துவ முறை களையும் பின்பற்றுவது நிறைந்த பலனை வாரி வழங்கும் என சில ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.




# விறுவிறுப்பான கன்னி ஆட்டம்!

**கிரிக்கெட்டில்,** புதிதாக அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டவரின் அறிமுக ஆட்டத்தை கன்னி போட்டி என்போம். அதேபோல தாம்பத்ய உறவிலும் முதலிரவு என்பது, கிரிக்கெட்டில் கன்னி ஆட்டம் போன்றதே!

முதல் ஆட்டத்தில் களம் இறங்கும் போதே சறுக்கல் எதுவும் விழுந்து விடக்கூடாது என்பதில் மிகக் கவனம் தேவை. மனத்தடுமாற்றம், ஏமாற்றம், அச்சம் ஆகிய உணர்ச்சிகளை சுமந்து கொண்டு ஆடுகளத்தினுள் நுழைந்தால் வேதனை தான் மிஞ்சும். எத்தனையோ பேர் வாழ்க்கையில் விதி விளையாடி, வேதனைத் தீயில் தள்ளியுள்ளது. இது உடல் சங்கமத்தின் போது எதிர்பார்க்க கூடியதே.

எனக்கு எதிர்பார்த்து போன்று, அழகான மனைவி கிடைக்கவில்லை. மனைவியினுடைய அணுகு முறையே சரியில்லை. அந்த விஷயத்தில் ஒன்றுமே தெரியவில்லை என்ற ஆதங்கமான குற்றச்சாட்டுக்களை ஆண்கள் சுமத்துவதுண்டு. தங்களது மனதில் எழுந்த ஆசைகளை மாயக்கண்ணாடியில் தெரிந்து கொண்டு நடக்க வேண்டும் என்பது ஆண், பெண் இருபாலாரின் ஒருமித்தமான கருத்து. ஆனால், சில 'ஆசைகளை வார்த்தைகளில் வெளிப்படுத்துவதை விட செயலில் காட்ட முனைவது மனித இயல்பு. அதை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தில் ஆணோ, பெண்ணோ இருக்க வேண்டும். இது நடைமுறை சாத்தியமா? என்றால் இல்லை. இதையெல்லாம் சொல்லி கொடுக்கணுமா? அந்தந்த வயதில் தெரிந்து கொள்ளட்டும் என்று முந்தைய கால பெரிசுகள் சொல்வதுண்டு.

உடல் உணர்ச்சிகளை பண்பாட்டுக்கு உட்பட்டு பகிர்ந்து கொள்வதில் சில நெறிமுறைகளை, அனுபவம் மூலம் தெரிந்து கொண்டவற்றை அவர்கள் தங்களது சந்ததியினருக்கு சொல்லி கொடுத்தால் பல பிரச்சினைகள் எழாது. பெரியவர்கள் அனுபவ பாடத்தை சொல்லாமல் விட்டுவிட்டால், காதில் விழுகின்ற தவறான ஆலோசனையை கேட்டுவிட்டு ஆட்டத்தில் இறங்கி தேவையில்லாத வம்பில் மாட்டிக் கொள்ள வேண்டியேற்படும்.

பொதுவாக திருமண நாளில் அதிகாலையில் இருந்தே மணமக்களை ஓய்வே இல்லாமல் பாடாய் படுத்தியிருப்பார்கள். ஒரே நேரத்தில் உறவினர்கள், நண்பர்களின் வாழ்த்து மழையில் நனைந்து ஒருவித பதற்றத்தோடு இருப்பார்கள். அன்றைய தினம் இருவருக்குமே ஓய்வு தேவை. மன ஒற்றுமைக்காக சில விஷயங்களைப் பேசிவிட்டு இருவரும் ஆட்டத்தை தள்ளி வைத்துவிட்டு உடலுக்கு ஓய்வு கொடுப்பது மிகவும் நல்லது. மனைவிக்கு ஆசைகள் அதிகமாக சுடர் விட்டெரிய, கணவன் ஒதுங்கிக் கொண்டாலோ, கணவனின் அவஸ்தையைப் புரிந்து கொள்ளாமல், மனைவி ஒதுங்கினாலோ ஒரு வித வேதனை பாதிக்கப்பட்டவருக்கு ஏற்படும். அதாவது எதிர்பார்ப்பு ஏற்பட்டவருக்கு ஏமாற்றம்.

பரீட்சை எழுதும் முன்பு எப்படி பாடங்களை படித்துக் கொண்டு தயாராகிறோமோ, அப்படித்தான் முதல் ஆட்டத்திற்காய் ஆடுகளத்தில் நுழையும் போதும் மனத் தெளிவு, ஒரு விழிப்புணர்ச்சியுடன் இருக்க வெண்டும். இது என்ன பெரிய விஷயமா? புகுந்து விளையாடலாம் என்ற மனநிலையில் அலட்சியமாக இருந்து விட்டு, புகுந்த வேகத்தில் ஆசைகளை நிறைவேற்ற முனைந்தால் உங்களது எதிர்பார்ப்புகள் தோற்றுப்போகும். இது எத்தனையோ பேரின் வாழ்க்கையில் நடந்துள்ளது. முதல்நாள் ஆட்ட நினைவுகளை பலர் தங்களது வாழ்க்கையில் நினைத்துப் பார்ப்பதுண்டு. பலருக்கு இனிமையான நினைவுகளாக இருக்கும். பலருக்கு வேதனையாகவே இருக்கும். அன்றைய தினம் மனதில் ஏற்பட்ட காயம் ஆறாமல் உறுத்திக் கொண்டே இருக்கும். எனவே, கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு திட்டமிட்டாலே போதும் கால ஓட்டத்தில் ஆட்டத்தில் தூள் கிளப்பலாம்.

# மலேரியா அற்ற இலங்கை!

(கிருபா-ஜனோ)

எந்த வயதினருக்கும், இனத்தவருக்கும் என்ற பாகுபாடின்றி ஒவ்வொருவருக்கும் ஏற்படக்கூடிய நோய் ஆகும். இந்நோய் ஏற்படுவது 'ப்ளஸ்மோடியம்' இன கிருமியை உறிஞ்சும் எனோபி-லிஸ் எனும் நுளம்பின் மூலம் மனித உடலுக்குள் நுழைவதாலாகும்.

இந்நோய் பரவுவது மலேரியா நோய்க்கு உட்பட்ட ஒருவரின் இரத்தத்தை குடித்த நுளம்பு சுகதேகி ஒருவரை கடித்தல் மூலமாகும்.

நுளம்பு கடியை தவிர்ப்பதன் மூலம் இந்நோயிலிருந்து பாதுகாப்பாக இருக்க முடியும்.

ஒருவருக்கு மலேரியாவின் தாக்கம் ஏற்பட்டால் கடுமையான காய்ச்சல், தலைவலி, வாந்தி, உடல்வலி, சோம்பல் தன்மை போன்ற அறிகுறிகள் தோன்றும்.

இவ்வாறான அறிகுறிகள் காணப்படுமிடத்து உடனடி சிகிச்சையைப் பெறவேண்டும். உடனடி சிகிச்சை பெறாவிடின் மூளைக்கு மலேரியா ஏற்பட்டு மரணம் சம்பவிக்கும் நிலை கூட வரலாம். குறிப்பாக கர்ப்ப காலத்தின்போது தாய்க்கு மலேரியாவின் தாக்கம் ஏற்படுமிடத்து தாய்க்கு ஏற்படும் பாதிப்பினைப் போன்று வயிற்றிலுள்ள சிசுவிற்கும் பாதிப்பை உண்டாக்கலாம். இதனால் இரத்தம் குறைவடைதல், கர்ப்பிணித் தாய் மரணமடைதல், குறைப் பிரசவம், நிறை குறைந்த குழந்தை பிறப்பு, சிசு இறந்து பிறத்தல் போன்ற நிலைமைகள் ஏற்படலாம். அதுமட்டுமின்றி சிறுநீரகத்தைப் பாதிப்பதோடு நீரிழிவு நோய் ஏற்படுவதற்கும் வழிவகுக்கிறது.

உலகளாவிய ரீதியில் குறிப்பாக ஐந்து வயதுக்குட்பட்ட சிறு குழந்தைகளுக்கு இந் நோய் ஏற்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மலேரியா தொற்று ஒருவருக்கு ஏற்படுமிடத்து அதனை இனங்காண இரத்தப் பரிசோதனை செய்வதன் மூலம் நிச்சயமாக இனங்கான முடியும். ஆரம்ப நோய் அறிகுறிகளின் போது தரப்படுகின்ற மருந்து மாத்திரைகளை தொடர்ந்து பதின்னான்கு நாட்களுக்குப் பாவிப்பதன் மூலம் மலேரியாவிலிருந்து பூரண சுகமடையலாம்.

மருந்து ஊட்டப்பட்ட நுளம்பு வலைகளை பாவிப்பதன் மூலமும் கைவிடப்பட்ட மாணிக்கக் கல் அகழ்வு சுரங்கங்கள், கற்குழிகள், நீர் தேங்கி நிற்கும் மண்குழிகள் என்பவற்றை நுளம்பு பரவாதவாறு மூடிவிடுதல் அல்லது நீர் வழிந்தோடக் கூடியவாறு அமைத்தல் அல்லது அதனுள் குடம்பிகளை உண்ணும் மீன்களை வளர்ப்பதனாலும் மலேரியாவை உண்டாக்கும் நுளம்புகளை அழித்து மலேரியாவை இலங்கையிலிருந்து முற்றாக ஒழிப்பதற்கு எங்களான உதவிகளை செய்ய வேண்டும்.

'மலேரியா அற்ற இலங்கை' என்ற தொனிப்பொருளில் கூட்டமும் பேரணியும் கடந்த மே மாதம் 26ஆம் திகதி மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது. பிராந்திய சுகாதார திணைக்கள ஏற்பாட்டில் சர்வோதயாவின் அனுசரணையுடன் இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந் நிகழ்வினைத் தலைமை தாங்கி கருத்து தெரிவித்த பிராந்திய மலேரியா அதிகாரி டொக்டர் பரீட் அவர்கள் உலகளாவிய ரீதியில் மலேரியா கொடிய நோயாக அடையாளங் காணப்பட்டு அதன் தாக்கத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் இவ்வாறான விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

எமது இலங்கையும் மலேரியாவுக்குப் பேர் போன நாடுகளில் ஒன்று. அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டமும் மலேரியாவின் தாக்கத்தால் மிக மோசமான பாதிப்புக்குள்ளாகியிருந்தது. கடந்த காலங்களில் ஆயிரக்கணக்கான மலேரியா நோயாளர்களை இனங்கண்டு அவர்களுக்கு உரிய முறையில் சிகிச்சை அளித்து கடந்த இரண்டு வருட காலங்களில் மலேரியாவை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம்.

1967 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மலேரியாவின் தாக்கம் மிக குறைவாகவே இருந்தது. இதனால் மக்களும் சுகாதார திணைக்களமும் அமைச்சும் பாராமுகமாக இருந்ததினால் அடுத்தடுத்த வருடங்களில் மிக மோசமான முறையில் நாடு பாதிக்கப்பட்டு பல இலட்சம் மலேரியா நோயாளிகள் உருவாகி பல்லாயிரக்கணக்கானோர் மலேரியாவினால் இறந்தும் போனார்கள்.

இதனைக் கருத்திற் கொண்டு இவ்வாறான நிலை மீண்டும் ஏற்படாமல் இருக்கவும் 2015 ஆம் ஆண்டு மலேரியா இலங்கை நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்ற நோக்கிலும் தேசிய ரீதியில் கொள்கை உருவாக்கப்பட்டு நாடு பூராகவும் மலேரியா தடுப்பு முயற்சிகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஆரம்ப காலங்களுடன் ஒப்பிடும் போது குறிப்பாக 1995, 1996 காலப்பகுதியோடு இன்றைய காலத்தை ஒப்பிடும்போது பின்னர் மலேரியாவினால் பீடிக்கப்பட்டவர்கள் மிக மிக அரிதாகவே உள்ளனர்.

பிராந்திய சுகாதார பணிமனை, உள்ளூராட்சி நிறுவனங்கள்,அரச சார்பற்ற நிறுவனங்கள் இவற்றின் பங்களிப்புகளின் மூலம்தான் மலேரியாவின் தாக்கத்தை குறைக்க முடிந்துள்ளது. எமது மாவட்டத்தில் மலேரியா ஒழிப்புக்காக சிறப்பு வேலைத்திட்டங்களை உருவாக்கி அதன்மூலம் வெற்றிகாணப்பட்டுள்ளது. எமது நாட்டைப் பொறுத்த வரையில் மட்டக்களப்பு மாவட்டம் மலேரியாவை ஒழிப்பதில் முன்னணியில் இருப்பது நாம் பெருமைப்படத்தக்க விடயம்.

இதற்காக முழுமூச்சுடன் செயலாற்றிய சுகாதார திணைக்கள ஊழியர்கள் ஏனைய அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிகள் பாராட்டத்தக்கவை. இவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு செயலாற்றியதன் மூலம் நாம் அனைவரும் பெரும் வெற்றியைக் கண்டுள்ளோம். மட்டக்களப்பு மாவட்டம் மாத்திரமல்ல. இலங்கை பூராக இருந்து மலேரியாவை ஒழித்து மலேரியா அற்ற இலங்கையை உருவாக்க நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும் என்ற கருத்தினை வெளியிட்டார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சுந்தரம் அருமைநாயகம் அவர்கள்.


மலேரியாவின் தாக்கம் குறைக்கப்பட்டு விட்டது. இனிமேல் நாங்கள் பயப்படத் தேவையில்லை என்று கரிசனை இல்லாது நம் பாட்டுக்கு இருப்போமானால் மீண்டும் நாம் மலேரியாவின் அச்சுறுத்தலுக்கு ஆளாவோம். தொடர்ந்தும் இவ்வாறான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மக்களுக்கு வழங்கப்படுமாயின் 2015 ஆம் ஆண்டு இலங்கை நாட்டிலிருந்து மலேரியாவினை முற்றாக ஒழித்து விட முடியும் என்ற நம்பிக்கை எல்லார் மனதிலும் உள்ளது.

தொடர்ந்தும் சூழலை சுத்தமாகப் பாதுகாப்பது தலையாய கடமையாகும் இனம், மதம், மொழி பார்த்து மலேரியா நம்மை பீடிப்பதில்லை என்பதை நாம் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்.


மலையாள மாந்திரீகம்







45 வருட காலம் தொட்டுச் செய்யும் எமது தெய்வீக சேவை

மழைக்கு முளைக்கும் காளான் பயிரைப் போல் அல்லாது தொன்று தொட்டு பரம்பரை பரம்பரையாக, வாழையடி வாழையாக வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை ஆணிவேராகக் கொண்டு வளர்ந்து வரும் எமது மகத்தான மாந்திரீக சேவையின் நிமித்தமே நாம் வாரா வாரம் செய்து வரும் விளம்பரம்.

வாடிக்கையாளர் ஒருவர் தன் பிரச்சினையை என்னிடம் ஒப்படைத்த அடுத்த விநாடியே ஒருவர் புது வீடு கட்டத் திட்டமிட்டு அஸ்திவாரம் போட்டு அவ்வீடுவரை உறுதியாக, உண்மையாக உழைக்கின்றாரே, அதேபோல் வாடிக்ஙகயாளரின் பிரச்சினைகளை உள்வாங்கி முழுமனதோடு அவரின் பிரச்சினை தீரும் மட்டும் இருந்து இரவு பகலாக தியான பூஜைகள் நடைபெறுவது என்பது உறுதி.

தொடர்ந்து வாராவாரம் விளம்பரம் செய்வது என்றாலே அது எமது மாந்திரீக உச்சாடன பீடம் மட்டுமே. கருணை, அன்பு, நேர்மை, உண்மை, உழைப்பு இவை அனைத்தையும் கொண்டு வாடிக்கையாளர்களுக்குச் சேவைபுரிந்து அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து அவர்களின் சிரிப்பிலே இறைவனைக் காண ஆதி பராசக்தி எனக்கு இந்த அற்புத அருள்ஞான சக்தியை அருளியுள்ளார்.

"நேரம் காலம் பாராது காலா காலம் பழைமை வாய்ந்த ஜோதிட மாந்திரீக சேவை என்றால் அது எனது சேவையே!" என நான் சொல்வதில் பெருமிதம் அடைகிறேன். நல்லது நடக்க நல்வாழ்வு பெற என்னை ஒரு முறை சந்திக்கலாமே!

ஒரே கூரையின் கீழ் சகல சாந்தி பரிகாரங்களும் செய்வதற்கு விசேட பிரிவுரைகள் உண்டு. உண்மையையும், நேர்மையையும் அடித்தளமாகக் கொண்டு, பரிசுத்தமாகச் செய்யும் என் பரிகாரத்தால், எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்குப் பிரச்சினைகள் தீரும், நல்லது நடக்கும் எனத் திட்டவட்டமாக உறுதியாக உறுதிமொழி வழங்குவது மட்டுமல்லாது உறுதிக்கடிதம் வழங்குவது மாந்திரீக சேவை யில் நான் மட்டுமே.!

வெளிநாட்டவர்கள் அவரவர் குறைநிறைகளுக்கு ஜாமபிரம்ப முகூர்த்தத்தில் தியான பூஜைகள் கடல் கடந்து செயல் புரியும் வண்ணம் உத்வேகத்துடன் நடைபெறுகின்றது. மேலும் வெளிநாட்டவர்கள் என்னிடம் தொடர்புகொள்ள 24 மணிநேர தொலைபேசி சேவையும் எம்மால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திட்டவட்ட ஜாதகக் குறிப்பு என்றால், என் கணிப்புத் திட்டவட்டமாக இருக்கும். செல்வாக்கு, செல்வாக்கு அருளியது எனது குருநாதர், சிவகாமியின் செல்வ குமரகுருபரனே!

நல்லது செய்ய நினையுங்கள், நல்லது நடக்கும்,
நல்வாழ்வு பெற என்னிடம் வாருங்கள்.
எல்லாம் நன்மைக்கே!

(என்னைச் சந்திக்க முன் அனுமதி பெற்று வருவது மிக முக்கியம்.)

*வெளிநாட்டவர்கள் ஐயாவிடம் நேரடியாக கதைக்க விரும்பினால் முன் அறிவித்தலுடன் (ஸ்கைப்) (Skype:drpksamy) மூலம் கதைக்கலாம்.

DESABANTHU Prof.P.K.SAMY (J.D.G.A.N.) JP. ஐயா

SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM.
NO.23,MAYFIELD ROAD, KOTAHENA, COLOMBO-13.
011-2470615, 011-2342463, 011-2342464. FAx.094-112344831
நுவரெலியா கிளை இல.33, Daily Fair Complex052-2222508




கம்சன் ஹாட்வெயர்

(மொத்த விற்பனையாளர்கள்)

நேரடி இறக்குமதியாளர்கள்

எம்மிடம்



☆ கான்றில்லர்
☆ சுத்தியல்
☆ பொடிவெட்டி
☆ ஸ்பெனர்
☆ நீர்மட்டம்
☆ கை அரிவாள்
☆ குறடு
☆ ஸ்கூட்றைவர்
☆ உழி
☆ சீவுளி

போன்ற விவசாய, மின்சார, தச்சு வேலைக்கான வெல்டிங் வேலைக்கான அனைத்து வகையான Hand tools இனை மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம்

Tel: 011 2435413
011 2332834
Fax :- 011 233 7353

கம்சன் ஹாட்வெயர்,
235,பழைய சோனகத்தெரு,
(Old Moor Street)
கொழும்பு – 12.

C/708



மகா சக்தி வாய்ந்த ரொடிகுலத்தின் அதி ரகசியமான மாந்திரீகம்

புண்ணியத்திற்காகவே

ஆண் / பெண் வசிய மாந்திரீகம்



உங்களது சகல மாந்திரீக காரியங்களுக்கும் பணம் அறவிடப்படமாட்டாது

3 வேளைகளுக்குள் பலன்

கிலி இல்லை

- மாந்திரீகங்கள்
- சொத்து பாதுகாப்பு
- உங்கள் பழிவாங்கல்கள்
- எதிரிகளை மட்டுப்படுத்தல்
- விற்கப்படாத காணிகளை விற்றுக்கொள்ள
- குழந்தைப்பேறு, வழக்குகள் தீர
- சூதினை 7 நாட்களுக்குள் இல்லாதொழிப்பேன்

அனைத்தும் இரகசியமாகப் பேணப்படும்

இரகசியமாக என்னை வந்து சந்திக்கவும்.

அப்பாவிப் பிள்ளைகளே புத்திசாலித்தனமாக இதை வாசித்துப் பாருங்கள்.
உங்கள் காதலன் / காதலி உங்களை விட்டுச் சென்றுவிட்டார்களா?
3 நாட்களுக்குள் உங்கள் காலடிக்கே கொண்டுவந்து சேர்ப்பேன்.

வெளிநாட்டிலுள்ள பிள்ளைகளுக்காக

மஹா ஹ"லவாலி குரு தேவேந்திரன் சாமி

மேலதிக தகவல்களுக்காக இணையுங்கள் www.kandyanlanka.com உடன்


C/639

நம்பிக்கையுடன் உங்கள் காரியங்களை செய்து கொள்ள பதிவுத்தபால் மூலமாக கடிதம் எழுதுங்கள்.
R. ப்ரேமரத்ன, இல. 1A, கூரகன்தெனிய, மெனிக்கின்ன.

TP.0776906555
0094 776906555

# IPL சாதனையா? சோதனையா?

**மேற்கு** இந்தியத் தீவுகள் அணியின் பொற்காலத்தில் வேகப்பந்து வீச்சாளராகத் தூள் கிளப்பியர் மைக்கல் ஹோல்டிஸ். தற்போதைய மே.இந்திய அணியின் நிலை, தீவு நாடுகளுக்குள் காணப்படும் அபிப்பிராய பேதங்கள், கிரிக்கெட் சங்கத்தின் போக்கு என்று பல்வேறு விடயங்கள் பற்றி பேசியுள்ளார் இவர். இதற்கு மேலாக IPL பற்றியும் கூறுகிறார். IPL இல் மிகச் சிறந்த வீரர்கள் விளையாடிக் கொண்டிருக்கையில் (மேற்கிந்தியத் தீவுகள் அணியில் இவர்கள் இல்லாமல்), பாகிஸ்தான் மே. இந்தியத் தீவுகளிலேயே சிறப்பாக ஆடிக் கொண்டிருந்தது இவருக்கு ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி இருக்க



வேண்டும்.

குறிப்பாக கிறிஸ்கெய்ல் இந்தியாவில் தூள் கிளப்பிக் கொண்டிருக்கையில் தேசிய அணியில் அவர் இல்லை என்பது எவ்வாறு நியாயமகதும் உலககிண்ண பொட்டிகளின் பின் அணியிலிருந்து நீக்கப்பட்ட இவர் பாகிஸ்தான் தொடரின் முதல் இரண்டு ஆட்டங் களுக்கு அணியில் உள்வாங்கப்படவில்லை. மேலும் மே. இந்தியக் கிரிக்கெட் சங்க ஒப்பந்தத்திலும் இவர் கைச்சாத்திட்டவரல்ல. எனவே தொழில்சார் வீரர் இவர். தன் உழைப்பை நாடி IPL இல் விளையாட இந்தியா வந்துவிட்டால் இதில் என்ன பிழை இருக்கிறது என்று கேட்கிறது என்று கேட்கிறார். தேசிய அணியில் இவர் இல்லாமற் போனமைக்கான காரணத்தை மே.இ தீவுகள் அணிப் பயிற்றுனரும், கிரிக்கெட் சபையும் தான் விளக்க வேண்டும் என்றும் காட்டமாகக் கூறியுள்ளார்.

இன்னொரு வேடிக்கையான விடயத்தையும் ஹோல்டிங் குறிப்பிடுகின்றார். டுவைன் பிராவோ ஒருநாள் போட்டிகளில் மட்டும் விளையாடிவிட்டு டெஸ்ட் போட்டிகளில் பங்குகொள்ளாமல் IPL போட்டிகளில் கலந்து கொள்ள மே.இ. கிரிக்கெட் சபை அனுமதியளித்துள்ளது. இன்னொரு புறம் கீரன் பொ-லாட் விளையாட அனுபவம் பெறுவதற்காக IPL இல் முழுமை-மயாக விளையாட கிரிக்கெட் சபை அனுமதி அளித்ததாம். மைக்கல் ஹோல்டிசிற்கு மட்டுமல்ல சாதாரண கிறிக்கெட் ரசிகர்களுக்கும் இந்த அபத்தம் புரியவில்லை தான். அல்லது இந்த விடயங்களில் அதிருப்தியடைந்துள்ள ஹோல்டிஸ் IPL பற்றியும் பேசுகிறார். IPL கிரிக்கெட் உலகத்தில் ஒரு அதிர்வை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறும் இவர் இதன் அவசியம், கவர்ச்சி, பொருளாதார நலன், போன்ற பலவற்றை சிலாகித்துப் பேசினாலும், கிரிக்கெட் என்ற அளவில் இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கே IPL கூடுதல் நியாயம் செய்யும் என்று கருதுகிறார்.

IPL அட்டவணை தயாரிக்கும் போது, இந்திய சர்வதேச அட்டவணைகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளும். ஆனால் ஏனைய நாடுகள் பற்றிக் கவலை கொள்ளாது என்று கூறியுள்ளார். அது முற்றிலும் உண்மையும் கூட. இதற்கு உதராணம் தற்போது ஏற்பட்ட இலங்கை அணி வீரர்கள் இங்கிலாந்து சுற்றுப் போட்டியில் பங்குகொள்ளும் சர்ச்சைகள், மே. இந்திய, பாகிஸ்தான் தொடரின் போதே IPL நடைபெற்றமை.

இது தொடர்பில் பேசும் இவர் ICC ஆல் BCCI இன் தன் இஷ்டப் போக்கை மாற்ற முடியுமா என்று கேள்வி எழுப்புவர், அவர்களுக்கு அந்த ஆற்றல் இல்லையென்றும் கூறுபவர், உலக உதைபந்தாட்ட சங்கம் (FIFA) கொண்டுள்ள அதிகாரத்தை, அந்தஸ்த்தை ICC கொண்டிருக்கவில்லை என்றும், அப்படியானால் ICC என்றொரு அமைப்பு எதற்கென்றும் வினா எழுப்புகின்றார். உண்மையில் ICC தான் சகல அதிகாரங்களும் கொண்ட அமைப்பாக இருக்க வேண்டும். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக BCCI மனம் நோகப் பண்ணாமல் நடந்து கொள்ளவே ICC விரும்புகிறது என்று கூறுகின்றார்.

மைக்கல் ஹோல்டிங்கின் கருத்துக்கள் மறுக்கப்பட முடியாதவை. போகிற போக்கைப் பார்த்தால் எதிர்காலத்தில் தேசிய அணிகளுக்கான வீரர்களை IPL நிர்வாகத்திடம் இருந்து தான் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை உருவாகினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஏனெனில் எல்லோரும் IPL வளர வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதில் வீரர்கள் பெறும் பொருளாதார நலன் சிறந்ததே. எனவே எதிர்காலத்தில் தேசியப் பற்றுக் குறையவில்லை. ஆனாலும் IPL இல் விளையாடுவது எங்கள் எதிர்காலச் சந்ததியின் வாழ்விற்கான அத்திவாரத்தைப் பலப்படுத்தும் என்று வீரர்கள் கூறினால் இதனையும் புறந்தள்ளிவிட முடியாது.

எனவே IPL உம் வளரும், தேசிய அணிகள் சிக்கலுக்குள்ளாகும். குறிப்பிட்ட அளவு வீரர்கள் நியாயபூர்வமான பொருளாதார நலன்களையும் பெறுவார்கள். நிச்சயமாக ஆதங்கங்கள் மட்டும் மாற்றமின்றித் தொடரும்.

## விளையாட்டு

ஜோசப் கிருஸ்ணா

# கெயில் எனும் புயல்

நான்காவது IPL போட்டிகளுக்கான வீரர்கள் ஏலம் நடைபெற்ற போது கிறிஸ்கெய்ல் யாராலும் ஏலத்தில் எடுக்கப்படவில்லை. காரணம் முடிவடைந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் அவர் எடுத்த மொத்த ஓட்டங்கள் 170 மட்டுமே. அதிலும் பாகிஸ்தானுக்கு எதிரான கால் இறுதிப் போட்டியில் எட்டு ஓட்டங்கள் மட்டுமே பெற்றார். மே.இ. தீவுகள் அணியும் சுற்றுப் போட்டியில் இருந்து ஓரங்கட்டப்பட்டது. ஆனால் திடீரென நடைபெற்ற சில சம்பவங்கள் கிறிஸ் கெய்ல் என்னும் வீரன் பற்றியே சகல கிரிக்கெட் ரசிகர்களும் பேசும் நிலைக்கு வைத்துவிட்டன. றோயல் செலஞ்சர்ஸ் பங்களூர் (RCB) அணியின் வீரர் டெர்க் நனஸ் காயப்பட்டு அவுஸ்ரேலியா திரும்புகிறார். இது IPL இன் நடுப்பகுதி. RCB எந்தவகையில் தீர்மானித்ததோ தெரியவில்லை கிறிஸ் கெய்ல்லை ஒப்பந்தம் செய்ய முனைகிறது. மே.இந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையும் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் இவர் வேண்டாம் என்று எண்ணிய காலம். RCB அணி வெட்டோரி ABD வில்லியர்ஸ் விராட் ஹொலி, முதலான ஒரு சில நட்சத்திரங்களும், நிறைய உள்ளூர் வீரர்களையும் கொண்ட அணி. ஆரம்பத்தில் தள்ளாடிய அணி.

இந்த வேளையில் கிறிஸ்கெய்ல் நுழைகிறார். அவர் விளையாடிய 9 ஆட்டங்களில் எட்டில் வெற்றி. இதுவரையில் 6 ஆட்ட நாயகன் விருதுகள். அவரது ஓட்ட எண்ணிக்கையில் 102 ஆட்டம் இழக்காமல், 49, 107, 44, 70, 38, 00, 75 ஆட்டம் இழக்காமல் 88 மொத்தத்தில் 12 ஆட்டங்கள் 608 ஓட்டங்கள், IPL நான்கில் அதிகூடிய ஓட்டம் பெற்றவர் மொத்தத்தில் வெட்டோரியின் தலைமையிலான சுஊடீ இன் நங்கூரமாக மாறுகிறார் அதுவும் இவரை அண்மித்து நிற்கும் வீரர்களுடன் ஒப்பிடுகையில் குறைந்தளவு ஆட்டங்களில் குவித்த அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை என்பது அடிக்கோடிடப்பட வேண்டியது. சென்னையின் பயிற்றுநர் ஸ்ரீபன் பிளேமிஸ், RCB இன் உயர் நிலைப் பொறுப்பாளர் கும்ளே, தோனி, வெட்டோரி என்று சகல பிரபலங்களும் கிறிஸ்கெய்லைப் பார்த்து அதிர்ந்து போய் இருக்கிறார்கள். மனம் நிறைந்தே பாராட்டுகிறார்கள்.

கிறிஸ்கெய்ல் மனம் விட்டுப் பேசுகிறார். நீண்ட நாட்களின் பின் துடுப்பாட்டத்தில் தொடர் தகைமையைக் காட்ட இயலுமாக இருப்பதையிட்டுச் சந்தோஷமாக இருக்கின்றேன். RCB அணி சார்ந்த அனைவரும், மற்றும் கர்நாடக மாநில ரசிகர்கள் எனக்குத் தரும் வரவேற்பு அமோகமாக இருக்கிறது. எல்லோரும் நட்புறவுடன் இருக்கிறார்கள்.

முக்கியமாக எண்பாணியில் விளையாட அனுமதிக்கிறார்கள்



சேர்ந்துதான் என்னைப் பற்றி எல்லோரும் பேசும்படி செய்துள்ளது போலத் தெரிகின்றது என்று மதிப்புடன் கூறுகின்றார்.

உண்மையில் கிறிஸ்கெய்ல் புரிந்த கொள்ள இயலாத ஒருவர் என்ற அபிப்பிராயமும், அவருடன் இணைந்து போவது இயலாதது என்றவாறான அபிப்பிராயம் கிரிக்கெட் ரசிகன் மற்றும் வல்லுனர்கள் மட்டத்தில் இருந்தது என்னமோ உண்மைதான். ஆனால் றோயல் செலஞ்சர்ஸ் பங்களூரின் அணுகுமுறை அதெல்லாம் பிழை என்று நிரூபித்துள்ளது. ராஜஸ்தான் றோயல்சுக்கு ஷேன்வோர்ன் எப்படி ஒரு பொக்கிஷமோ அ-தமாதிரி RCB க்கு கிறிஸ்கெய்ல் மாறிவிட்டார்.

ஒவ்வொரு வெற்றியும் கிறிஸ்கெயினால் இடப்பட்ட அத்திவாரம்தான். அது அவரது திறமை. மற்றது அவரது கலகலப்பு. அந்த மைதான நடத்தை அவரை கர்நாடகாவில் தத்தமது வீட்டுபிள்ளையாக அவரை மாற்றியுள்ளது. சிறிஸ் கெய்யில் கிறிக்கெட் வாழ்க்கையில் புதிய அத்தியாயம் ஒன்று பிறக்கிறது போலத் தெரிகின்றது. அப்படிப் பார்த்தால் RCB அணி அதிர்ஷ்ட சாலிதான். அதோடு கிறிஸ்கெய்ல் யார் என்பதை வெளிப்படுத்திய திறமைசாலியும் கூட.

# அசத்தலும் அதிரடியும்

நான்காவது IPL இறுதியாட்டத்தில், கடந்த வருடம் வென்ற கிண்ணத்தைத் தக்க வைக்க வேண்டிய நிலை சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிர்பார்க்கைகள் இன்றி ஆரம்பித்த றோய்ல்ஸ் செலஞ்சர்ஸ் பங்களூருக்கு, இடையில் தொடங்கிய திறமையும் அதிர்ஷ்டமும் கிண்ணத்தைப் பெற வழி வகுக்குமா என்ற ஏக்கம். ஆனால் ஒவ்வொரு



அணித்தலைவரும் ஒரு எதிர்பார்க்கையில் இருந்திருப்பார்கள். முதலாவது பூவா தலையா வெல்ல வேண்டும். இரண்டாவது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் அசத்தலாக ஜோடி சேர்ந்து ஆட வேண்டும். இது இரண்டும் சுப்பர் கிங்ஸ் அணித்தலைவர் தோனிக்கு வாய்த்தது. ஆனால் றோயல் செலஞ்சர்ஸ் தலைவர் டானியல் வெட்டோரிக்கு வாய்க்க வில்லை. தோனி வென்றார். வெட்டோரி தோற்றார். இதனைவிட ஒரு தனிமனிதன் பற்றிய சிந்தனை தோனியை வாட்டியது. அதுதான் கிறிஸ் கெய்ல். அவரை மடக்க முடியுமா. பதினொரு ஆட்டங் களில் 608 ஓட்டங்கள் குவித்தவர். றோயல் செலஞ்சர்ஸின் தொடர் வெற்றிகளின் அத்திவாரம். அதுவும் கூட தோனிக்கு வாய்த்தது. கெய்ல் முதல் ஓவரிலேயே அவுட்டானார். இரண்டாம் முறை சென்னை சுப்பர் கிங்ஸ் தங்கள் சொந்த மைதானத்தில் 58 ஓட்டங்கள் எனும் பாரிய இடைவெளியில் கிண்ணத்தை அணைத்துக் கொண்டார்கள்.

முரளி விஜய் மற்றும் மைக்ஹஸி இருவரும் துடுப்பெடுத்தாட வந்த போது இப்படி ஒரு பிரளயம் ஏற்படும் என்று யாரும் நினைத்திருக்க மாட்டார்கள். இவர்கள் இருவரும் மட்டுமே தமது இனிங்ஸின் முக்கால் பங்கு ஓவர்களை தம் வசப்படுத்தி றோயல் செஞ்சர்லஸ் வீரர்களையும் கூடப் பார்வையாளர் ஆக்கிவிட்டார்கள்.

14.5 ஆவது ஓவரில் மைக்ஹஸி அவுட்டாகிறார். அப்பொழுது ஓட்ட எண்ணிக்கை 159 (சராசரி ஓவருக்கு 10க்கு மேல் ரண் குவிப்பு) ஹஸி பெற்றது 63. சந்தித்த பந்துக்கள் 45(3x4, 3x6). ஆனால் விஜய் தொடர்ந்தும் புயல் கிளப்பினார். அவர் பெற்ற ஓட்டங்கள் 95. சந்தித்தது 52 பந்துகள்.(4x4, 6x6). உண்மையில் முதலவாது விக்கெட் விழுந்த சந்தர்ப்பத்திலேயே வெற்றிக் கிண்ணமும் சுப்பர் கிங்ஸ் அணியிடம் விழுந்துவிட்டது என்றே கூறவேண்டும். ஒருசில விக்கெட்டுகள் வீழ்ந்தது என்னவோ உண்மைதான். ஆனால் ஓட்ட வேகம் எகிறிக் கொண்டே இருந்தது. மொத்தத்தில் முடிவை ஊகிக்கக் கூடியவான ஓட்ட எண்ணிக்கையான 205 ஐ சென்னை எட்டியது.

ஆனால் விஜய் இரண்டுமுறை ஹஸி ஒருமுறை ஆட்டமிழக்கச் சந்தர்ப்பங்கள் இருந்த போதும் றோயல் செலஞ்சர்ஸ் தவறவிட்டமை துரதிர்ஷ்டம் தான். ஆனால் அதற்காக விஜய், ஹஸி ஜோடியின் அதிரடி அட்டகாசத்தை கொஞ்சம் கூட குறைத்து மதிப்பிட முடியாது.

அடுத்த கட்டத்திலும் ஒரு நம்பிக்கை கிறிஸ் கெய்ல் என்னும் புயல். அதோடு டீவில்லியம்ஸ் மற்றும் விராட் ஹோலி, இவர்களும் சாதிக்கப் பிறந்தவர்கள்தான். இலகுவில் விட்டுக்கொடுக்கமாட்டார்கள். ஆனால் தொடக்கத்தையே தொலைக்க அஸ்வின் தீர்மானித்து விட்டதை யார்தான் தடுக்க முடியும். கிறிஸ்கெய்லின் பிடியை அற்புதமாக தோனி எடுத்ததும் படமே மாறிவிட்டது. குறிப்பாக மிஸ்டர் கூல் என அழைக்கப்படும் தோனி கெய்லின் பிடியை எடுத்ததும், அவர் வானளாவப் பாய்ந்து உயர்ந்து கொண்டாடியதும் ரெய்னா பாய்ந்து சென்று அஸ்வினை நிலத்தில் புரட்டி (உதைபந்தாட்டக் கொண்டாட்டப் பாணி) ஆனந்தப் பட்டறையும் பார்த்த போது, கெய்ல் மீது சுப்பர் கிங்ஸ் எந்தளவு அச்சம் கொண்டிருந்தது என்று புரிந்தது. ஆம். சிங்கம் குகையின் வாசலிலேயே வீழ்த்தப்பட்டுவிட்டது.

அதன்பின் எல்லாம் ஒரு சாதாரண சடங்கு முறைகள் போலத்தான் அமைந்தன. விராட் கோலி என்ற இளஇரத்தம் தன்னால் முடிந்தளவில் போராடியது. உண்மைதான். ஆனாலும் சுழற்பந்து வீச்சாள்கள் அஸ்வின் மற்றும் ஜகாட்டி றோயல் செலஞ்சர்ஸ் அணியை இயல்பாகவே தோல்விக்குக் கொண்டு சென்றுவிட்டார்கள்.

உண்மையின் இந்தளவு மகத்தான வெற்றியை சென்னை சுப்பர் கிங்ஸ் பெறுவதற்கு அவர்களின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் தான் காரணம். விஜய் மட்டுமல்ல, ஹஸியும் ஆட்டநாயகன்தான். ஹஸியின் வழிகாட்டல் விஜய்க்கு எவ்வளவு உதவியது என்பது விஜய்க்கும் அதேபோல விஜய்யின் கருத்துக்கள் எப்படி உதவின என்று ஹஸிக்கும் தான் தெரியும்.

மேலும் பதின்னான்கு, பதினைந்து ஆட்டங்களுக்கும் பின்வரும் இறுதி ஆட்டத்தை கை நழுவிப் போகாமல் செய்ய என்ன செய்ய வேண்டும் என்று இந்த இருவரிடமும் தான் கற்றுக் கொள்ள வேண்டும்.

மறுபுறம் கெய்ல் எனும் புயலை முதல் ஓவரிலேயே வேரோடு சாய்த்திராவிட்டால் என்ன நடை பெற்றிருக்கும்? ஊகிப்பது கஷ்டம்தான். அதனை இப்போது கிண்ணம் வென்ற பின் சுப்பர் கிங்ஸ் அணியைக் கேட்டாலும் சிறிது சங்கடமாகத்தான் பதில் சொல்வார்கள்.

எதுஎவ்வாறாயினும் பணம் கொழிக்கும் IPL இல் இறுதியாட்டமும் முடிவுக்கு வந்துவிட்டது. கிண்ணமும் தம்மிடமே என்று சுப்பர் கிங்ஸும் மகிழ்கிறது. அடுத்த IPL எப்போது வரும் என்று ரசிகர்கள் ஆவல் மிகுதியில் காணப்படு கிறார்கள். இறுதியாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எல்லாமே நன்றாக நடந்தது. றோயல் செலேஞ்சர்ஸ் பங்ளூருக்கு அப்படி அமைந்துவிடவில்லை. கிரிக்கெட் என்பதே நிச்சயமின்மைக்கு உதராணம் காட்டும் ஒரு விளையாட்டல்லவா?



# மனதுக்கு நிம்மதி




**தோல்வி** என்னும் சொல்லே தேவையில்லை. தோல்வி என்பது வெற்றிக்கு வழிவகுக்கும் ஒரு நண்பனே! ஆனால் அதை விரோதி என்று தவறாக அடையாளம் காணுகிறீர்கள்.

முதலில் தோல்வி என்பது என்ன என்று சிந்தியுங்கள். இலக்கை நோக்கி நீங்கள் செய்யும் முயற்சியில் தடையோ, தாமதமோ ஏற்பட்டால் அதைத் தோல்வி என்கிறீர்கள்.

தோல்வி வந்தவுடன் இனி முடியாது என்று எதிர்மறையாகச் சிந்திப்பவர்களே முயற்சியை நிறுத்தி விடுகிறார்கள். அது தோல்வியாக மாறிவிடுகிறது. தடையோ, தாமதமோ ஏற்படும் போதும் முயல்வேன் என்று முடிவு செய்து உழைப்பவர்களே ஆக்கபூர்வமாகச் சிந்திக்கிறார்கள். வெற்றி பெறுகிறார்கள்.

தோல்வி என்பது வெற்றிக்கான பயிற்சியே என்று நீங்கள் உணர வேண்டும். பெரிய இலக்குகளுக்கு மட்டுமல்ல சாதாரண செயல்களுக்கும் கூட பயிற்சிதான் முழுமையை அல்லது வெற்றியை தந்திருக்கிறது.

நீங்கள் பிறந்த பிறகு ஒரே நாளில் ஓடிப் பழகிவிடவில்லை. எழ முயன்ற போது விழுகிறீர்கள். எழுந்து நின்ற போதும் பல முறை விழுந்தீர்கள். பலமுறை விழுந்தும், எழுந்தும் பயிற்சி செய்தமையால்தான் இன்று செம்மையாக நடக்கிறீர்கள்.

நீங்கள் உணவு உண்ணத் தொடங்கியதை மீண்டும் நினைவுகூர்ந்து பாருங்கள். உணவை விரல்களால் அள்ளிய போது சிதறியது. வாயில் போடுவதற்குள் சிந்தியது. மீண்டும் மீண்டும் சிந்திச் சிதறி முயன்றதனால் இன்று உணவு உண்பதில் தேர்ந்தவராகிவிட்டீர்கள்.

ஆகவே நடத்தல், உண்ணல், எழுதுதல் போன்ற செயல்களுக்கும் தடையும், தாமதமும் வரவே செய்தன. ஆனால் தடையைக் கண்டு அஞ்சாமல் மீண்டும் மீண்டும் முயன்றதனால்தான் இன்று உங்களால் நடக்கவும், உண்ணவும், எழுதவும் முடிந்திருக்கிறது.

தோல்வி என்பது வெற்றியின் படிக்கட்டு என்று சொல்லக் கேட்டிருப்பீர்கள். என்ன பொருளில் அப்படிச் சொல்லப்படுகிறது?

ரொபர்ட் புரூஸ் கதையில் வரும் சிலந்திப்பூச்சி பன்னிரண்டாவது முயற்சியில் வெற்றி பெற்றது. பத்தாவது அல்லது பதினோராவது முயற்சியோடு அது பின் வாங்கியிருந்தால் வெற்றி பெற்றிருக்காது.

இந்தியாவின் மீது படையெடுத்த கஜினி முஹம்மது பதினெட்டாவது தடவையே வெற்றி பெற்றான். பதினாறாவது அல்லது பதினேழாவது தடவைக்குப் பின் தன் முயற்சியை நிறுத்தியிருந்தால் அவனுக்கு வெற்றி கிடைத்திருக்காது.

மின்குமிழை உருவாக்கும் முயற்சியில் லேடக்ஸ் என்னும் பொருளைக் கண்டுபிடிக்க எடிசன் பதினாறாயிரம் தாவரங்களைப் பரிசீலித்து வெற்றி கண்ட செய்தி உங்களுக்குத் தெரியுமா? பதினைந்தாயிரத்து தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதாவது முயற்சிக்குப் பிறகு சோர்ந்திருப்பாரானால் அவரால் மகத்தான வெற்றி பெற்றிருக்க முடியுமா?

ஆகவே, தோல்விக்கும், வெற்றிக்கும் உள்ள இடைதூரம் மேலும் ஒரு முயற்சி மட்டுமே.

நீங்கள் உயர்ந்த நிலைக்கு ஆசைப்படுகிறீர்கள். கனவு காண்கிறீர்கள். உற்சாகத்துடன் உழைக்கத் தொடங்கியவர்கள் தடையையும், தோல்வியையும் கண்டு சோர்ந்து போகிறீர்கள். முயற்சியை நிறுத்தி விடுகிறீர்கள்.

ஒரு முயற்சி நிறுத்தப்படும் போது தோல்வியாகிறது. தொடரப்படும் போது வெற்றியாகிறது. முடிந்தவரை முயற்சிப்பது வெற்றி தராது. முடிவு வரை முயற்சிப்பதே வெற்றியைத் தரும்.

தடை என்பது தோல்வியின் அறிகுறியல்ல. மேலும் முயல வேண்டும் என்பதன் அறிகுறியே. தடை வரும் போதெல்லாம் மேலும் முயல்பவரிடம் தோல்வி மண்டியிடுகிறது.

ஆகவே, இத்தனை முறை முயன்று பார்த்துவிட்டு கைவிடலாம் என்று நினைத்தால் தோல்வியே கிடைக்கும். வெற்றி பெறும்வரை முயன்று கொண்டே இருந்தால் மகத்தான வெற்றி கிடைக்கும்.

நீங்கள் வெற்றிபெற வேண்டும் என்றால் அடுத்த முயற்சி, அடுத்த முயற்சி என்று துடிக்க வேண்டும். எத்தனை தடவைதான் முயற்சிப்பது என்று எண்ணினால் வாழ்க்கையே தோல்வியில் முடியும்.

உங்களுக்குத் தெரிந்த வெற்றியாளர்களைக் கூர்ந்து கவனித்தால் அவர்களுடைய விடாமுயற்சிதான் அவர்களுக்கு வெற்றி தந்தது என்பதை நீங்கள் அறிய முடியும்.

நீங்கள் விடா முயற்சியையும் தொடர் முயற்சியையும் கைக்கொள்ள வேண்டும் என்றால் இயற்கைச் சட்டம் பற்றி அறிந்திருக்க வேண்டும். மனிதனாகப் பிறந்த எவருமே உயர வேண்டும் முன்னேற வேண்டும் வளர வேண்டும் என்பது இயற்கைச் சட்டம். இயற்கைச் சட்டத்தின்படி ஊக்கத்துடன் உழைக்கும் மனிதனின் கரம், இயற்கையின் கரத்துடன் இணைந்து விடுகிறது. இணையும் போது இயற்கையின் கரத்தில் இருக்கும் வெற்றி உங்கள் கைக்கு வந்துவிடுகிறது.

இயற்கையாகவே உங்கள் வெற்றித் தேர் முன்னோக்கி நகர்ந்து கொண்டுள்ளது. இயலாது, முடியாது, கிடைக்காது, நடக்காது போன்ற எதிர்மறைத் தடைக்கட்டைகளை இட்டு நீங்கள்தான் அதன் ஓட்டத்தைத் தடை செய்துவிட்டீர்கள்.

முடியும், இயலும், நடக்கும், கிடைக்கும் என்று எப்போதும் எண்ண தொடங்கிவிட்டால் அடுத்த முயற்சி, அடுத்த தொழில் என்று தொடங்குவீர்கள். விடாமுயற்சியும், தொடர்முயற்சியும் உங்கள் இயல்பாக மாறிவிடும்.

தோல்வி நிரந்திரமானதல்ல, அதைத் துரத்தி விட முடியும் என்னும் ஞானம் உங்களுக்கு வந்துவிடும். தோல்வி உங்களைத் துரத்தும் நிலை மாறி, நீங்கள் தோல்வியைத் துரத்தி அடித்துவிடுவீர்கள். அதன்பின் உங்களுக்கு வெற்றிமேல் வெற்றி வந்து சேரும்.

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 421

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 6 |
| 7 | 8 | ■ | 10 | 11 | 12 |
| ■ | 14 | ■ | 16 | ■ | 18 |
| 19 | ■ | 21 | ■ | ■ | ■ |
| 25 | ■ | 27 | 28 | ■ | ■ |
| 31 | 32 | 33 | 34 | 35 | ■ |

**இடமிருந்து வலம்**

01. சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளில் ஒன்று.

07. முத்தி வேண்டி இத்தலத்திற்கு செல்வார்கள்.

10. புதுமை என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)

27. ஒரு பெண்ணின் திருமணத்தின் அடையாளங்களில் முக்கியமானது.

31. சங்கமருவிய காலத்தில் தோன்றிய காவியங்களில் ஒன்று.

**மேலிருந்து கீழ்**

01. இந்த மாதத்தில் பனி கூடுதலாகப் பெய்யும் என்பார்கள்.

02. முதன்முதலாக விண்வெளிக்கு சென்ற நாய். (குழம்பியுள்ளது)

04. இதற்கேற்ற செலவு செய்ய வேண்டும். (குழம்பியுள்ளது)

06. காது இல்லாத ஊர்வன.

19. இஸ்லாமியர்களின் வழிபாட்டுத் தலத்தை இவ்வாறு கூறுவர். (திரும்பியுள்ளது)

21. அறிவுடையவரை இவ்வாறும் கூறுவர். (திரும்பியுள்ளது)

28. போர் என்றும் கூறுவர். (திரும்பியுள்ளது)

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 14.06.2011 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-421
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல.: - 1772, கொழும்பு. - த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.419க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.


**கிறிஸ்தோப்பர் சியாமளா, 164, வயல் வீதி, சின்னக்கடை, மன்னார்.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. N.பர்ஹானா, 2ஆம் வட்டாரம், எருக்கலம்பிட்டி.
02. V.தனபாலசிங்கம், நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
03. கே.இராஜகோபால், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை
04. சி.ஷர்மிகா, மாப்பனாவத்துற வீதி, புத்தளம்.
05. எவ்.எம்.ஷபா, தர்ஹாநகர்.
06. கு.செல்வராணி, 134, கோவில் வீதி, கண்டி.
07. த.விதுஷன், குருநகர், யாழ்ப்பாணம்.
08. எம்.சைந்தவி, வாழைச்சேனை, மட்டக்களப்பு
09. ஜெ.யூடியற்லொசியா, பிரதான வீதி, நுவரெலியா.
10. க.வரதன், செட்டிக்குளம், வவுனியா.

## குறுக்கெழுத்துப் போட்டி 419- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | 2 மெ | 3 ரி | 4 க் | 5 கா | ■ |
| 7 ங் | ■ | 9 சா | ■ | 11 க் | 12 கே |
| 13 கு | 14 ண் | 15 ட | 16 சா | 17 லை | ■ |
| 19 லி | ■ | 21 து | ■ | 23 க | 24 டி |
| ■ | 26 ம் | 27 இ | 28 ப | 29 ட | ■ |
| ■ | ■ | ■ | 34 னை | 35 ன் | 36 தெ |



# இரவில் பனி...

காலையில் மரங்களும் செடி கொடிகளும் பனியில் நனைந்து ஈரமாகக் காணப்படும். இரவில் பொழிந்ததால் மரங்கள் இவ்வாறு நனைந்திருக்கும். பனி பெய்வது எதனால் என்பது பலருக்குத் தெரியாது.

பூமியின் பரப்பில் நிகழும் உறைவித்தலால் பனி உருவாகிறது. சில சமயங்களில் இரவில் காற்றை விட பூமி அதிகமாகக் குளிர்ந்து விடுகிறது. காற்றில் உள்ள ஆவி, குளிர்ந்த தரைப் பரப்பில் உள்ள இலைகள், தழைகள், பொருட்கள் ஆகியவற்றின் மீது விடியற்காலையில் படியும் போது, அது உறைந்து பனித் திவலையாக மாறுகிறது. பூமி மிகவும் குளிர்ந்து இருந்தால் ஈரஆவி இறுகி உறைபனியாக மாறி விடுகிறது.

தரையில் இருந்து எழும் ஈரஆவி, அதைவிட குளிர்ந்த இலையில் படுமானால், அது இறுகி வேறு வகை பனிப் படிவாக இருக்கும்.




**“உங்க கிட்ட** எல்லாம் சொன்னாளா? இவ அப்பன்கிட்ட நான் பட்ட பாட்டை.”

“இல்லையம்மா...நான் கேக்கேல்லை.... எனக்கு அதில ஈடுபாடும் இல்லை. முதல்ல இந்த அருமையான பெண்ணைக் காப்பாத்தணும்..”

“தொடைல, மார்ல போட்ட சூட்டுத் தழும்பைக் காட்டட்டுமா?”

மிச்சமிருந்த திரவத்தை விழுங்கிவிட்டு, “தாங்க முடியாமத்தான்... தாங்கவே முடியாமத்தான் வந்துட்டேன். ஜார்ஜி என்னை ராணி மாதிரி வச்சிருக்கிறார். அடுத்த வாரம் பாலிதீவுக்கு போறம் குட்டிம்மா” என்றாள் மரகதம்.

“போய்ட்டு வா, இதுல ஒரு கையெழுத்துப் போட்டுட்டா என்னைப் பெத்ததுக்கு ஏற்பட்ட பெரும் பாக்கியமாக் கருதுவேன்.”

மரகதம் உதட்டைப் பிதுக்கிக்கொண்டு சின்னக் குழந்தை போல் அழுதாள். “என் செல்லம் என்னமா பாடுவாள் தெரியுமா? எத்தனை சொல்லித் தந்திருக்கிறேன். எங்கே அந்தப் பாட்டைப் பாடும்மா...”

“சீரான பெண்ணுக்கு சிறு வயது நோகுதுன்னு
வாராளே மருத்துவச்சி தங்க ரதமேறி...”

“அம்மா கொஞ்சம் வாயை அடக்கு.”

பங்களாவை விட்டு வெளியே வந்தபோது கிருத்திகா சொன்னால், “உங்க அம்மா நல்லா பாடுறா.”

கல்லூரி சென்றபோது பந்தல் போட்டு மாணவர்கள் ஏதோ ஒரு சுழற் சங்கத்தின் சார்பில் “இரத்த தானம் செய்ய வாரீர்” என்று அழைக்க, என்னைக் காணவில்லையே நேற்றோடே” என்று காற்றில் கதறியது.

ரகு கையில் குத்திய இடத்தில் பஞ்சு வைத்து மடக்கிக்கொண்டு, “என்ன அகல்யா, நீ இரத்தம் கொடுக்கலையா? ஒரு வாரத்தில் சுரந்துருமாம். அது உன் ரத்தம், துடிக்கும் காதல் இதய இரத்தம். ஒரு நாள்ள சுரந்திடும். எங்க போய் பிரண்ட்?”

**கிருத்திகா சாரி மேடம் அகல்யா அழைத்துக் கொண்டு அவள் அம்மா மரகதமிடம் சென்றாள். அவளது தாய் இப்பொழுது நாகரீ கமாக பணக்கார பெண்ணாக, வேறு திருமணமும் செய்திருந்தாள். ஒரு மகளும் இருந்தது. அவளின் அம்மா, என்னை வேண்டாம் என்று கூறிய நீ என்ன திடீரென வந்திருக்கிறாய் என வினவினாள். கருக்கலைப்பதற்கு கையெழுத்து வாங்குவதற்காகவே எனக் கூறினாள். தாயோ அப்பாவிடம் கேட்கும்படி கூறிவிட்டாள். அதற்கு மறுத்த அகல்யா தாயையே கையெழுத்தை வைக்கும்படி கூறினாள். அகல்யாவிற்கு ஏதாவது பிரச்சினை வந்தால் சட்டப்படி குற்றம் என்பதாலேயே மறுத்தாள். இருந்தாலும் அவளுக்கு கையெழுத்தை வைத்து அனுப்பிவிட்டாள்.**

ப்ரமோத், சீனு இருவரும் ரத்தம் கொடுத்துவிட்டு வெளியே வர “வலிக்கவே இல்லையடா” என்றான் சீனு.

“அப்பிள் கொடுத்தாங்க” என்று ப்ரமோத் அதை அகல்யாவிடம் கொடுத்தான். “உடம்பெல்லாம் சரியாப்போச்சா?”

தலையாட்டினாள். “ப்ரமோத்... உங்க கூட பேசணும்...”

“பேசு” என்றான் ரகு.

“தனியா.”

“நாங்கள் எல்லாம் காதைப் பொத்திக்கிறோம். பேசுங்க.”

சீனு அதற்குள் “ இரண்டாம் ஆண்டு ஊடக மாணவ பட்டாளமே இரத்தம் கொடுக்க வந்திருக்கு வாத்தியாரே... ஒவ்வொண்ணும் சும்மா நின்று விளையாடுது.”

“வாடா பாத்திடலாம். நம் காதலர்கள் புல்லுக்கட்டு மாடுன்னு பேசிக்கொண்டு இருங்க. நாங்க வாறோம்...” என்றான் ரகு.

அவர்கள் போனதும் அகல்யாவை மரத்தடிக்கு அழைத்துச்சென்று வளைத்துப் பிடித்து “என்ன அகல்யா, சொல்லு என்றான் பிரமோத்.

அகல்யாவை அதிக ஆராவாரமில்லாத ஒரு இடத்திற்கு அழைத்துச் சென்றான் ப்ரமோத், ‘என்ன சாப்பிடறே கண்ணுக்குட்டி?’ம்ஹூம்! எனக்கு ஏதும் வேண்டாம். ‘எனக்கு ஒரே பசி. பேல்பூரி, பானிபூரி, பாவ்பாஜி, பீட்ஸா ஏதாவது அடிச்சே ஆகணும்.”

“ப்ரமோத் நான் கர்ப்பமா இருக்கேன்.”

பாதித் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தவன் அப்படியே நிறுத்திவிட்டு ‘என்னது? என்றான்.

“ஆமாம், டாக்டர் உறுதிப்படுத்திட்டார்.”

“என்ன சொல்லுறே நீ? நீயா? கர்ப்பமாக இருக்கிறாய்? நீ முதல்ல வயசுக்கு வந்துட்டியா?”

“ விளையாடாதே ப்ரமோத்.”

“நிஜம்மா! பார்த்தா பள்ளி மாணவி போல இருக்கிறாய்.”

“ இந்த மாதிரி பேசினா நான் எழுந்து போறேன்... என்ன ஒரு பதற்றத்தில இருக்கிறன் தெரியமா?”

“ யார் உன்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கினது? எனக்கு என்னவோ இந்த உரையாடலே செயற்கையா இருக்கு. சினிமா போல.”

அவள் மௌனமாக இருந்தாள்.

“என்ன செய்யிறது சிலவேளைகளில் வாழ்க்கையில சினிமா பிரதிபலிக்கிறதே. சொல்லு யாரு காரணம்?”

“நீதான்: என்றாள் நிதானமாக.

அவன் குபீர் என்று சிரித்தான். “நானா? சேச்சே... என்ன நீ? நம்ம இரண்டு பேருக்குள்ள காத்து வழியா மகரந்தச் சேர்க்கை சாத்தியமா இருந்தாத்தான் சாத்தியம்...”

அவள் பொல பொலவென்று கண்ணீர் உகுத்து அழ ஆரம்பித்தாள்.“உனக்கு எல்லாமே விளையாட்டா இருக்கு.”

“இல்லைக் கண்ணு.”

“கண்ணு கண்ணுன்னு கூப்பிடாதே” என்று சீறினாள்.

“சரி அகல்யா, ,மிஸ் அகல்யா... இதை நல்ல விவரமா தெளிவா புரிஞ்சிக்க... உன் நிலைமைக்கு நான்தான் காரணம் என்று சொல்லுறதா இருந்தால் அது அபத்தம். நாம ரெண்டு பேருக்குள்ளயும் பாலியல் சம்பந்தமா எதுவும் நடக்கவில்லை. முத்தம் கொடுத்ததாலயும், அங்க இங்க தடவினதாலயும், கர்ப்பமாகிறது சாத்தியம் என்றா... உலகம் பூரா குழந்தைகளா இருக்கணும். முதல் அழுகையை நிறுத்து எல்லாத்துக்கும் நிவாரணம் இருக்கு.”

உணவு பரிமாறுபவன் காத்திருக்க, அவள் அவசரமாகக் கண்ணைத் துடைத்துக்கொண்டாள்.

“ரெண்டு கோப்பி கொடுப்பா போதும்.”

“எனக்கு எதுவும் வேண்டாம்” என்றாள் அகல்யா.

“நீ போய்யா முதல்ல... ரெண்டு கோப்பியையும் நானே சாப்பிடறேன்”

உணவுபரிமாறுபவன் அவனை முறைத்துக்கொண்டே போனான்.

“சொல்லு” என்று அவள் கண்ணீரைக் கைக்குட்டையால் துடைத்து, ‘நான்தான் காரணம் என்று நினைச்சா எந்த பரிசோனைக்கும் நான் தயாரா இருக்கேன்.

“நான் குழந்தையைப் பெற்றெடுக்கப் போறதில்லை. நீதான் நேரடியாகக் காரணம் என்று சொல்லலை நான்...”

“அன்றைக்கு இசை விழாவின் போது நீ செய்த ஒரு காரியம்தான் ஆதாரமான காரணம்.”

“என்ன செஞ்சேன்?”

“என் கண்ணெதிரில நதிக்கு முத்தம் கொடுத்து ரூமுக்குள்ள அழைச்சுக்கொண்டு போனப்ப...” என்றாள் ப்ரமோத்திடம்.

**இன்பம் தொடரும்**

## இவ்வாரச் சிறுகதை

# தாய்ப்பாசம்



**T. சிந்து**
**கலாசாலை வீதி, திருநெல்வேலி**

“அம்மா சீக்கிரம் எழும்புங்கம்மா” என்று தன் தாயைத் தட்டி எழுப்பினான் சந்துரு.

“என்னப்பா நான் எழும்புறதிற்கு முன்னாடியே எழுத்திட்ட. கொஞ்சம் பொறு. நான் ரீ போடுறன். நீ போய் குளிச்சிட்டு வா” என்றாள் தாய் சிவகாமி.

“அம்மா அதெல்லாம் நானே செய்திட்டன். இன்றைக்கு என்ன விசேஷம் என்று தெரியாதா? இன்றைக்கு அன்னையர் தினம். உங்களுக்கு என்னோட அன்னையர்தின வாழ்த்துக்கள். இந்தாங்க என்னோட பரிசு” என்று ஒரு அழகான புடவையைப் பரிசளித்தான்.

‘ரொம்ப சந்தோசமாக இருக்குப்பா நீ என் கூட இன்னைக்கு கோயிலுக்கு வரவேணும் வருவியாப்பா?’ என்று மகனது தலையைக் கோதியபடி கேட்டாள். “அம்மா இண்டைக்கு நான் வேலைக்கு லீவு போட்டுட்டன். உங்க கூடத்தான் இருப்பன். நீங்க எங்க கேட்டாலும் வருவன் சரியா?” என்றான் சந்துரு. “சரியப்பா” என்று புன்னகைத்தாள் சிவகாமி.

கோயிலுக்குச் செல்லும் இருவரையுமே அனைவரும் பார்த்தனர். அவர்களைப் பற்றி பெருமையாக வேறு பேசிக்கொண்டார்கள். “சிவகாமி அக்காவைப் பாத்தியா. அவவின்ர மகன் அவ மேல எவ்வளவு பாசம் வைச்சிருக்கிறான் தெரியுமா. தாய்க்காக உயிரையும் குடுத்திடுவான். சிவகாமி அக்காவும் மகன்மேல எவ்வளவு அன்பா இருக்கா. கொடுத்து வைச்சவா” என ஒருவருக்கொருவர் கதைத்துக்கொண்டு செல்வதை காது குளிரக் கேட்ட சிவகாமி, மகன் சந்துருவை நினைத்துப் பெருமைப்பட்டாள். அதேவேளை தன் மற்றைய இரு மகன்களையும் எண்ணி வேதனை அடைந்தாள். அவளின் எண்ண ஓட்டங்கள் கடந்த காலத்தை மீட்டுப் பார்க்கத் தொடங்கியது.

திருமணமாகி இரண்டு வருடங்களாகியும் சிவகாமி – சுந்தரம் தம்பதியினருக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்கவில்லை. இறைவனிடம் மன்றாடினர். எந்தப் பலனும் இல்லை. இறுதியாக அனாதை ஆச்சிரமத்தில் ஓர் அழகான ஆண் குழந்தை ஒன்றைத் தத்தெடுத்து வளர்த்தனர். ச்துரு எனப் பெயரிட்டு கண்ணின் மணிபோல அவனைக் காத்தனர். கடவுளின் திரு விளையாடலோ என்னவோ? சந்துருவிற்கு மூன்று வயதாகும்போது சிவகாமி கருவுற்றாள். மட்டற்ற மகிழ்ச்சி அவளுக்கு உண்டாகியது. அவளுக்குப் பிறந்த குழந்தைக்கு ‘அருண்’ என்னும் அடுத்துப் பிறந்தவனுக்கு அருள் என்றும் பெயரிட்டனர். தன் வயிற்றில் குழந்தைகள் பிறந்தபோதும் சிவகாமி சந்துருவைத் தன் மூத்த மகனாக நினைத்தாள். மூன்று பிள்ளைகள் மீதும் அளவற்ற அன்பு பொழிந்தாள்.

மகிழ்ச்சியாக வாழ்ந்த குடும்பத்தில் திடீரென துன்பக் கடல் பொங்கியது. ஆம். சுந்தரம் மாரடைப்பால் திடீரென இறந்துவிடவே திக்குமுக்காடிப் போனாள் சிவகாமி. சிலகாலம் வேதனையோடு இருந்தவள் பின் தன் பிள்ளைகளை வளர்த்து நல்ல நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்தில் தன் வேதனைகளையும் மறந்து வேலைக்குச் சென்று தன்குழந்தைகளை வளர்த்தாள்.

காலங்கள் உருண்டோடின. பிள்ளைகள் மூவரும் வளர்ந்துவிட்டனர். மூவரும் தாயைக் கண்ணீர் சிந்தாமல் பாதுகாத்தனர். தாயின் மீது அளவற்ற பாசம் வைத்திருந்தனர். ஆனாலும் சந்துருவுக்குத்தான் தாய் மீது அலாதிப் பிரியம். சிவகாமி மூன்று பிள்ளைகள் மீதும் ஒரே பாசத்துடன்தான் இருந்தாள்.

ஒரு சமயம் சிவகாமி திருமணப் பேச்சை எடுத்தாள், ‘சந்துரு நீதான் வீட்டில மூத்த பிள்ளை, உனக்குத்தான் முதல்ல பெண் பார்க்க வேணும் நீ என்னப்பா சொல்ற?’

“அம்மா எனக்கு இப்ப திருமணம் செய்ய வேணும் என்ற எண்ணம் இல்லை. நீங்க தம்பிங்க இருவருக்கும் செய்துவையுங்க. நான் உங்களுடனேயே இருக்கிறன்.’ என்றான் சந்துரு. “என்னப்பா நீ என் கூட எத்தனை நாளைக்குத்தான் இருக்கப்போறா?” “நான் எத்தனை நாள் வேணும் என்றாலும் உங்களோடைதான் இருப்பன்.” அதற்கு மேல் சிவகாமி எதுவும் பேசவில்லை.

ஒரு சமயம் அருண் “அம்மா அண்ணாதான் திருமணமே வேண்டாம் என்று பேசாம இருக்கிறான். என்னையும் அருளையும் பற்றி யோசித்து பார்த்தனீங்களா? அம்மா நான் ஒரு பெண்ணை விரும்புறன் நீங்கதான் பார்த்து முடிவு பண்ணனும்” என்றான்.

‘என்னப்பா நீ சொல்ற. இது எப்படி நடக்கும்?’ என்று தயங்கியவாறு கேட்டாள் சிவகாமி. “அருண் என்கிட்ட எல்லாம் சொன்னான். நல்ல பொண்ணு தானாம்மா நீங்க சரி என்று சொல்லுங்க. எல்லாம் நல்லபடியா நடக்கும். நான் நடத்தி வைக்கிறன் என்று சந்துரு தாயை சமாதானப்படுத்தினான். “சரிப்பா சந்துரு நீ சொன்னா சரி. எல்லாம் உன் விருப்பப்படியே நடக்கட்டும்” என்றாள் சிவகாமி.

அருண் விருப்பப்படியே திருமணம் நடந்தது. திருமணமாகி சில மாதங்களில் அருண் தன் மனைவியோடு வெளிநாடு சென்றுவிட்டான். சில காலங்களில் அருளும் வெளிநாடு சென்று அங்கேயே ஒரு பெண்ணை திருமணம் முடித்தான்.


ஆரம்பத்தில் தாய் தமையனுடன் கதைத்த இருவரும் நாட்கள் செல்லச்செல்ல கதைப்பதைக் குறைத்துக்கொண்டனர். மனைவி என்ற உறவு வந்தவுடன் பெற்றெடுத்த தாயை மறந்தனர். சிவகாமி மகன்களை நினைத்து ஏங்கினாள், கண்ணீர் சிந்தினாள். இதனைப் பார்த்துப் பொறுக்க முடியாது சந்துரு ஒரு சமயம் தன் தம்பிகளோடு தொலை பேசியில் தொடர்புகொண்டான். “டேய் அருண் ஏன்ரா அம்மாவோட பேசமாட்டேங்கிறீங்க. அம்மா பாவமடா. உங்கள நினைச்சு உருகியே போட்டா. மாதத்திற்கு ஒரு தடவை யாவது கதைங்கடா’ என சந்துரு கெஞ்சினான். “இதப் பாரு அண்ணா நாங்க திருமணம் முடிச்சிட்டம். எங்களுக்கென்று ஒரு குடும்பம் அமைஞ்சிட்டுது. எங்களுக்கு அதைக் கவனிக்கவே நேரம் சரியாகிடும். இதுக்க உங்க கூட கதைக்கிறதா?” என இரக்கமில்லாமல் கேட்டான் அருண். அதற்கு சந்துரு ‘என்னமா மனசில கொஞ்சம் கூட ஈரமில்லாமல் கதைக்கிற பத்துமாதம் சுமந்து பெற்று உங்கள வளர்க்க எவ்வளவு கஸ்ரப்பட்டிருப்ப. அதை மறந்து கதைக்கிறியா?’ என்றான். ‘அண்ணா உனக்கு அம்மா வேணும் என்றா அம்மா கூட இரு. இல்லாட்டி நீயும் ஒரு கலியாணத்தைப் பண்ணிப்போட்டு அம்மாவை முதியோர் இல்லத்தில சேர்த்திடு’ என்று கூறிவிட்டு தொடர்வைத் துண்டித்தான் அருண். அருளிடமிருந்தும் அதே பதில்தான் வந்தது.

அனைத்தையும் அருகிலிருந்து கேட்ட சிவகாமி தேம்பித் தேம்பி அழுதாள். சந்துரு தாயின் அருகில் சென்று “அம்மா அழாதீங்க! நான் இருக்கிறன் உங்களக் காப்பாற்ற. நீங்க கலங்கக் கூடாது” என்றான். அன்றிலிருந்து சிவாகாமிக்கு எல்லாமே சந்துருதான்.

சிவகாமி மகனை அன்பொழுகப் பார்த்தாள். “சந்துரு உன்னை நினைச்சா பெருமையா இருக்குப்பா. நீ ஒருத்தன் தான் என்னைப் பார்த்துக்கிற” என்று மகனை அணைத்தபடி கூறினாள் சிவகாமி. ‘அம்மாவை மகன் பார்க்கிறது கடமைதானே இல்லையா’ என்றான். இவன் என்னோட வளர்ப்பு மகன் என்று தெரிந்தால் எவ்வளவு கஸ்ரப்படுவான் என்று மனதிற்குள் எண்ணிய சிவகாமி கண் கலங்கினாள். ‘அம்மா எதுக்கு கண் கலங்குறீங்க. உங்க மனசில இருக்கிறது எனக்குப் புரியுது. அம்மா நான் உங்கட பெற்ற மகன் இல்லை எண்டது எனக்குத் தெரியும். ஆச்சரியமா இருக்குதா? நான் கல்லூரியில் படிக்கிறப்போ ஒரு சமயம் நீங்க என்னை தத்தெடுத்த ஆச்சிரமத்திற்குக் கூட்டிக்கொண்டு போனாங்க. அப்போதுதான் எனக்கு எல்லாமே தெரியும்’. என்று சந்துரு தாயைப் பார்த்துப் புன்னகைத்தான். அதற்கு சிவகாமி ‘நான் கொடுத்துவைச்சவ. என்னோட வயிற்றில பிறந்த இரு பிள்ளைகளும் என்னை விட்டிட்டுப் போனாலும் நீ ஒருத்தன் எனக்காக இருக்கிறப்ப எவ்வளவு சந்தோஷமா இருக்குத் தெரியுமா?” என்றாள்.

“அம்மா அவங்க கல்யாணம் முடிச்சவுடன உங்கள மறந்திட்டாங்க. எந்த உறவு வந்தாலும் தாய் என்ற புனிதமான உறவை மறந்திடமுடியாதம்மா. எனக்கு என்றைக்கும் எல்லாமே நீங்கதான்.’ என்று கூறிய மகனை மார்போடு அணைத்துக்கொண்டாள் தாய். ■

# பொன்மொழி



உலகம் எவ்வளவு பெரிதோ அவ்வளவு பெரிதாக உங்கள் இதயத்தை விரிவாக்குங்கள். தன்னைச் சரிப்படுத்திக் கொள்பவனே உலகைச் சரிப்படுத்த தகுதியானவன்.

**சுவாமி விவேகானந்தர்**

# சிந்தியா பதில்கள்

போர்க்குற்ற விசாரணை குறித்து சர்வதேச பொறிமுறை அவசியமானது என்று நவநீதம் பிள்ளையின் அறிவுறுத்தல் பற்றி உங்கள் கருத்து என்ன?

**எஸ்.தணிகாசலம்,**
**யாழ்ப்பாணம்.**

● சர்வதேச அமைப்பு ஒன்றின் பிரதிநிதி என்ற வகையில் நவநீதம்பிள்ளையின் கூற்று நியாயமானது. ஆனால் இலங்கைப் பிரச்சினையில் எச்சசொச்சங்கள் இன்னும் இருக்கவே செய்கிறது. இந்நிலையில் சர்வதேச நோக்கங்களுக்கு இடமளிக்கும் வகையில் இலங்கை அரசை குற்றவாளிக்கூண்டில் ஏற்றிப் பார்த்தால் இலங்கையின் பிரச்சினைக்கு தீர்வை கண்டுவிட முடியாது. மாறாக மீண்டும் இனங்களுக்கிடையே பகைமையுணர்வுகளை கிளறி விடுவதாகவே இது அமையும். நவநீதம்பிள்ளைக்கு உள்விவகார விடயங்களில் அக்கறை இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

பல்கலைக்கழக புதுமுக மாணவர்களுக்கு இராணுவத்தலைமைத்துவ பயிற்சி கட்டாயம் அவசியம் தானா?

**கேஷவன்,**
**திருநெல்வேலி.**

● இவ்விவகாரம் குறித்து இவ்வார முரசில் அலசி ஆராயப்பட்டிருப்பதை நீங்கள் கவனிக்கலாம். இறுதியாகக் கிடைத்த தகவலின்படி உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் அத்தகைய பயிற்சி நல்லது என்று அமைச்சர் ஒருவர் கூறியிருக்கின்றார். இப்படியே போனால் நிலைமை மோசமடையக் கூடும் என்று பொது மக்கள் மத்தியில் அச்சம் எழுந்திருப்பதை மறுப்பதற்கில்லை.

பிள்ளைகளால் கைவிடப்படுகின்ற பெற்றோர்களின் நிலை பற்றி?

**ஜே. ஆதித்தியா,**
**வவுனியா.**

● துரதிர்ஷ்டமான விடயம் அண்மைய நாட்களில் அநாதரவாக விடப்படுகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக ஆய்வுத் தகவல்கள் கூறுகின்றன. இது பொருளாதார நெருக்கடியா? அல்லது சமூகச் சீர்கேட்டின் விளைவா என்பது புரியவில்லை. ஆனால் பெற்றோரை ஒதுக்கும் பிள்ளைகள் நாளை பிள்ளைகளால் ஒதுக்கப்படும் பெற்றோர்களாக ஆகிவிடுவர் என்பது மட்டும் விஷயம். எதிர்காலத்தில் அநாதரவானவர்கள், அங்கவீனர்கள், விதவைகள், முதியோர்கள் பெற்றோர்கள் என்போர் நமது சமூகத்தில் பெரும்பான்மை அங்கமாக மாறிவிடக்கூடிய அபாயமுண்டு.

சிந்தியா! பெண்கள் யாரை அதிகம் நம்பக் கூடாது?

**க.தாமரைச்செல்வன்,**
**பருத்தித்துறை.**

● பெண்கள் என்றால் ஆண்களை; ஆண்கள் என்றால் பெண்களை என்று கூறினால் சுவாரசியமாக இருக்காது. பெண்கள் ஆசை வார்த்தை கூறுபவர்களை, எதற்கும் துணிவேன் என்று உருகுபவர்களை, எதுவும் தெரியாது என்று குழந்தையாய் நடிப்பவர்களை நம்பக்கூடாது. இப்படிச் சொல்வேன் என்று நீங்கள் எதிர்பார்த்திருக்கக் கூடும். அது நியாயமாக இருக்கக் கூடும். ஆனால் பெண்கள் பெண்களையே நம்பக் கூடாது என்ற ஒரு கருத்து என்னிடம் உண்டு.

சொர்க்கம், நரகம் என்பவை எங்கே இருக்கின்றன?

**கே.ஜமுனா,**
**திருகோணமலை.**

● பெற்றோரின் மகிழ்ச்சியையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்டு வாழ்வது சொர்க்கம். அதைப் பெறாத வாழ்க்கை நரகம்.

இன்னொரு வகையில் சொன்னால்

தூய்மையான எண்ணங்களின் வழிநடந்தால் அது சொர்க்கத்தில் சேர்கிறது. தீமையின் வழிநடந்தால் அது நரகத்தீயில் வீழ்த்துகிறது. ஆக, சொர்க்கத்தினதும், நரகத்தினதும் சாவி உங்கள் கையிலேயே இருக்கிறது.

சிந்தியா! நான் அன்புக்கா, அதிகாரத்துக்கா கட்டுப்பட வேண்டும்?

**க.நிர்மல்**
**வவுனியா.**

● இரண்டும் வெவ்வேறாக இல்லாமல் கலந்திருந்தால் அதற்கு கட்டுப்படுவது நல்லது.

சிந்தியா! நிகழ்வுகளில் பிரமுகர்களிடையே பூங்கொத்து பரிமாறப்படுவது ஏன்?

**சி.விதுஷா,**
**கண்டி.**

● பூக்களைப் பரிமாறுகிற வழக்கம் நிகழ்வுகளில் மட்டுமல்ல. அது காதலை சொல்வதற்கும், வரவேற்பதற்கும், எதிர்பார்க்கும் உறவை தெரிவிப்பதற்கும், அழகு, வெளிப்படைத்தன்மை, விருது, ஈர்ப்பு இவை எல்லாவற்றிற்கும் உருவாக மலர்களைப் பரிமாறுவது மனதுக்கு இதமானது.

நம் நேசத்துக்குரிய எல்லோருக்கும் மலர்களால் மனதின் மொழியைப் புரிய வைப்பது மகிழ்ச்சிக்குரியது.

கவிஞனாகப் பார்க்கும் போது அது கண்டனத்துக்குரியது. மலர்களை செடிகளோடு ரசியுங்கள். அவற்றைக் கொய்து செடிகளுக்கு பரிசளிக்க வேண்டாம்.

பிடித்தமான ஒன்றை அதன் இருப்பிலேயே விட்டுவிட்டு ரசிப்பது தான் உயர்தரமான ரசனை.

சிந்தியா! பாகிஸ்தான் செல்ல விரும்பவில்லை என்ற டில்சானின் கருத்துக்கு விமர்சனங்கள் கிளம்பியுள்ளதே?

**எஸ்.வர்ணன்.**
**நுவரெலியா**

● அடிபட்டவனுக்குத்தான் வலி புரியும். அந்தவகையில் பாகிஸ்தானில் மரணத்தின் எல்லை வரை சென்று வந்தவர் என்ற வகையில் டில்சான் தனது தனிப்பட்ட கருத்தை கூறியிருக்கிறார். அது அவருடைய சுதந்திரம்.

அதேவேளை பாகிஸ்தான் கிரிக்கெட்டின் விசுவாசிகளைப் பொறுத்தவரையில் டில்சானின் கருத்து தமது எதிர்கால கிரிக்கெட்டில் தாக்கத்தைச் செலுத்திவிடுமோ என்ற ஆதங்கத்தில் விமர்சனங்களை முன்வைத்திருக்கிறார்கள்.

சூழல் தணிந்து வருகையில் எல்லாம் கனிந்து வரும். நம்பிக்கையோடு பொறுத்திருக்கட்டும் பாகிஸ்தான் ரசிகர்கள்.




# இலக்கிய நய...

## 29

**கே.வி. குணசேகரம்**

# துடிக்கும் நெஞ்சங்கள்

காதலர் அனுபவிக்கும் இன்பங்களைப் பற்றியும் துன்பங்களைப் பற்றியும் வர்ணிப்பதில் சங்ககாலப் புலவர்கள் வல்லவர்கள். அவர்களுக்கு நிகர் அவர்கள் என்று தான் சொல்லுதல் வேண்டும்.

அவன் இருப்பது குறிஞ்சி நிலத்தின் ஓர் ஊர். அவள் இருப்பது இன்னோர் ஊர். தினைப்புலத்தில் கண்டு இருவரும் காதல் கொள்கின்றனர். தினை அறுத்தாயிற்று. காவலுக்கு வந்த அவளும் தோழிகளும் சென்றுவிட்டனர். தினை பயிரிட்ட காலத்தில் இருவரும் இரவில் சந்தித்து அனுபவித்த இன்ப நினைவுகள் யாவும் அவனது மனதில் தோன்றி அவனைச் சித்திரவதை செய்கின்றன. அவளை அவனுக்குத் தேவையாக உள்ளது. எந்நேரமும் அவளுடன் இருக்க வேண்டும். அவளது அழகை ரசிக்க வேண்டும். களவாக அனுபவித்த இன்பங்களை மீண்டும் மீண்டும் அனுபவிக்க வேண்டும் என்று அவனது மனமும் உடலும் அவதிப்படுகின்றன.

வெளியில் அவளுடன் கூடியிருந்த அந்த இன்பமான நிகழ்வுகள் அவனது நினைவுக்கு வருகிறது. நிலவின் பட்டொளி அவள் உடலெங்கும் பரவி ஒளிர்ந்த காட்சி அவனைக் கொல்கிறது. இன்னும் சில நிமிடங்களில் அவளின் பொலிவான உடலைப் பார்க்கப் போகிறோம். அதன் பின்பு என்ற நினைவு அவனது மனதை இனிக்கச் செய்கிறது.

ஏதோ அரவங் கேட்கிறது. அவன் திடுக்கிட்டு மரத்தோடு மறைந்து நின்று வீதியை அவதானித்தான். வீதியில் ஊர்க்காவலர்கள் தீவட்டியுடன் உலாவிக் கொண்டிருந்தனர். அவர்கள் சென்றுவிடுவார்களென நினைத்து அவன் மறைந்திருக்கிறான். அவர்கள் செல்லவில்லை.



அவனுக்குத் துக்கமாக உள்ளது. அதை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. பல்வேறுவிதமான இன்பக்கனவுகளுடனும், திட்டமிடலுடனும் வந்த அவனை ஏமாற்றதுக்குள்ளாக்கி உயிர் பிரிந்த நிலையை அடைந்து நடைப்பிணமாகத் தனது ஊருக்குச் செல்கிறான்.

இரண்டு தினங்களை நிம்மதியின்றிக் கழிக்கிறான். மனம் எதையும் கேட்க மறுக்கிறது. அவளைச் சந்திக்காவிட்டால் உயிர் போய்விடும் போல இருக்கிறது. அதனால் அவன் அன்று இரவு கற்பனைகளுடன் புறப்படுகிறான். கற்பனை இனிக்கிறது. மனம் இன்னென்ன செய்ய வேண்டும், இன்னென்ன பேசவேண்டும் என்று கூறுகிறது. மனதுக்குள் அவளது கவர்ச்சியான அங்கங்கள் தோன்றுகிறது. அவற்றை இன்னும் சில நிமிடங்களில் காணப்போகிறேன் என மனம் ஆர்ப்பரிக்கிறது.

அவளின் ஊருக்கு வந்துவிட்டான் அவனைத் தெரு நாய்கள் கண்டுவிட்டன. அவை அவனது மனநிலையை அறியாது கூட்டமாகக் குரைத்துக்கொண்டு வருகின்றன.. அவன் அதிர்ந்து போனான். நாயின் குரைப்புச் சத்தம் ஊரை விழிப்படையச் செய்கிறது. மேலும் அங்கு நின்றால் ஆபத்து வந்துவிடும் என்று நினைத்து அவன் திரும்பிச் செல்கிறான். அவனது கற்பனைகள் யாவும் சிதைந்துவிட்டன. எப்படி எல்லாம் திட்டமிட்டிருந்தான். அவை நிறைவேறாததால் துவண்டு போனான் அவன்.

எப்படியும் சந்திக்க வேண்டும். சந்திக்காவிட்டால் உயிர் போய்விடும். ஊர்க் காவலர் நின்றால் அல்லது நாய்கள் குரைத்தால் வேறு வழியால் செல்ல வேண்டும். இன்று எப்படியாவது அவளைக் கண்டு மகிழ்ந்து பேசி இன்பம் அனுபவிக்க வேண்டும். விட்டால் உயிர் போய்விடும். உயிர்போனாலும் பரவாயில்லை. இன்று சந்தித்தே தீரவேண்டும் என்று நினைத்துச் செல்கிறான்.

அவள் இருப்பது அவனது ஊரில் இருந்து வெகுதூரத்தில் உள்ள கிராமம். பகலில் சென்று அவளைப் பார்க்க முடியாது. அதனால் இரவில் செல்லத் தீர்மானிக்கிறான். பிரியுமுன் கடைசியாக அவள் தனது வீட்டின் நிலை பற்றி எடுத்துக்கூறி நடு இரவில் வந்து தமது வீட்டின் பின்புறத்தேயுள்ள வேங்கை மரத்தின் கிளையை உலுப்பினால் நான் எழுந்து வருவேன் என்கிறாள்.

அவளைக் காணாத அவன் நடு இரவில் தனது ஊரில் இருந்து புறப்பட்டு அவளின் வீட்டை நோக்கி நடந்துவருகிறான். அப்பொழுது பூரணை நாளில் வெட்ட...

பல நாட்களாக அவன் வருவான்; வந்து வேங்கை மரக்கிளையை உலுப்புவான் என்றெண்ணிக் கொண்டிருந்த அவள் துயரத்துடன் கண் விழித்திருக்கிறாள்.

**தொடரும்...**




**பழைய காயங்களைக் கிளறி இனங்களுக்கிடையில் வைராக்கியத்தை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டாம்.** *-ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.*

"வடக்கிலும் தெற்கிலும் சிங்களா, தமிழ் இனவாதம் கக்குறதுகளுக்கு உந்தச் சொல்லு கட்டாயம் சுடத்தான் செய்யும். நாங்கள் பட்டிருக்கிற காயம் இலேசில மாறக் கூடியதுமல்ல. அதுக்குள்ள எங்கட காயங்களைக் கிளறி அரசியல்ல குளிர்காயுறதுக்கெண்டு கொஞ்சப்பேர் இருக்குதுகளே. உதுகளை என்ன செய்யுறது நாங்கள்.?"

**பாகிஸ்தானில் அரசாங்கக் கட்டடங்களை இலக்கு வைத்து நடத்திய தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 32 பேர் பலி; 56 பேர் படுகாயம்.** *-பத்திரிகைச்செய்தி.*

"அட! நாசமாப்போனதுகள். உதுகள் என்ன வேலையடா செய்யுதுகள்? மனிசற்ற உயிரெண்டு சொல்லுறது அப்பிடி என்ன மலிஞ்ச போன நாறல் மீனே? ஆரோ ஒருவனைப் பழிவாங்குறதுக்காக ஏன் அப்பாவிச் சனங் களைச் சாக்காட்டுறாங்கள்? உது பெரிய வீரமே? இஞ்சையும் உப்பிடித்தானே வீரம்காட்ட வெளிக்கிட்டு இப்ப விழுந்துபோய்க் கிடக்கிறம். ம்... பட்டுக் களைச்ச எங்களுக்குத்தான் தெரியுது. உதின்ர பாடுகளும்; கேடுகளும்."

**நூறு சிறைகளில் அடைத்து, தூக்கு மேடையில் ஏற்றி, அலுக்கோசு கயிற்றை இழுத்தாலும் நான் கண்ணீர் மல்கேன்.** *-சரத்பொன்சேகா.*

"ஹ...ஹ...ஹ...ஹ... அனைவரும் விலகிச் செல்லுங்கள். துணிந்தவனுக்குத் தூக்குமேடை ஒரு பஞ்சமெத்தை.... எண்டு வீரபாண்டிய கட்டப்பொம்மன் படத்தில சிவாசி கணேசன் வசனம் பேசினமாதிரியெல்லோ கிடக்குது உது. சாவுக்குப் பயந்திட்டார் போலக் கிடக்குது. அதுதான் சண்டப்பிரசண்டமா ஏதோ உளறிக்கொட்டுது உந்த மனிசன். உவர்சாவுக்குத் துணிஞ்ச ஆள் எண்டால் ஏனாம் மடுமாதாவுக்கு நேத்திவைக்க வெளிக்கிட்டவையாம். மடுமாதாவே! தாயே! முள்ளிவாய்க்காலில முச்சுவிட்ட சனத்தின்ர ஆவி கள் உதுகளைச் சும்மாவிடுமே...?"

**படுகொலைத் தாக்குதல்களில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக ஒவ்வொரு இரவும் வெவ்வேறு மருத்துவமனையில் தங்குகிறர் கடாபி.** *-பத்திரிகைச்செய்தி.*

"ஹி...ஹி...ஹி.... எனக்கு உந்தச் செய்தியைப் பேப்பரில படிச்சவுடன சிரிப்புத்தான் வருகுது. ஏன் தெரியுமே? ஹி.... ஹி...ஹி... எனக்கு உவற்ற நிலையைப் பார்க்க பிரபாகரன்ர இயக்கப்பாட்டொண்டு ஞாபகத்துக்கு வருகுது. ஓடு... ஓடு... ஓடு... நீ ஓய்ந்துவிட்டால் வரும் கேடு. எண்டு அவனொருவன் பாடினமாதிரி... ஹி...ஹி...ஹி... நாங்களும் மன்னாரிலயிருந்து முள்ளிவாய்க்கால்வரை ஓடித்திரிஞ்ச மாதிரி ஹி...ஹி...ஹி.. இப்ப கடாபி அம்மானும் ஓடிக்கொண்டிருக்கிறார் பார்த்தியளே! நாங்கள் ஓடினது புலியள் செய்த சதியால. உவர் ஓடுறது வில்லண்டமாய் தேடின பழியால. ஹி...ஹி...ஹி...ஹி ஓடு... ஓடு....ஓடு... நீ ஓய்ந்துவிட்டால் வரும் கேடு. ஹி...ஹி...ஹி... உதைத்தான் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையுமெண்டு சொல்லுறது."

**பெண்களுக்கு தோஷம் கழிப்பதாகக் கூறி, பாலியல் சேஷ்டை புரிந்த இந்திய நாட்டுச் சாமியார் இறக்குவானைப் பொலிசாரால் கைது.** *-பத்திரிகைச்செய்தி.*

"அட! கோதாரியில போவார். கொள்ளிவைப்பார்... தங்கட நாட்டிலதான் பட்டையும்; கொட்டையும் மாட்டிக்கொண்டு அங்கத்தேப் பெண்டுகளைப் படாதபாடு படுத்துறாங்களெண்டு பாத்தால், அறுவார்! இஞ்சையும் வந்திட்டாங்களே எளிய கூட்டங்கள். உவங்களை ஆராம் இஞ்சை வரவிட் டது? அட! அந்தக் காவாலிக் காவியள்தான் அப்படியெண்டால் எங்கட பெண்டுகளுக்கு எங்கபோனது புத்தி? செவ்வாய் தோஷம், நாகதோஷம் எண்டு தெரிஞ்சால் சிவன் கோயிலில கிடக்கிற நவக்கிரகங்களுக்குப் பூப்போட்டுத் தோஷத்தைப் போக்கிறதைவிட்டிட்டு, சாமிமாரிட்டை அப்படியென்ன புதினம் கேட்கப் போகுதுகள்? போக்கறுந்ததுகள்..."

**நாட்டின் பல பகுதிகளிலும் அடைமழை காரணமாக ஐந்து பேர் பலி; பெருமளவானோர் பாதிப்பு.** *-பத்திரிகைச்செய்தி.*

"நல்லாத்தான் கலி முத்திப்போச்சுது. சோளகம் வீசவேண்டிய காலத்தில மழை பெய்யுதெண்டால் பாத்துக்கொள்ளுங்கோவன். அக்கிரமங்களும், அநியாயங்களும், அளவு கணக்கில்லாமல் நடந்துகொண்டிருக்க, காலங்களும் மாறத்தொடங்கியிட்டுது போலக்கிடக்குது. இதை ஒருத்தரும் உணர்ந்து நடக்கிறமாதிரித் தெரியேல்லை. உபத்திரவங்களும் எங்களை விட்டுப் போறமாதிரியில்லை. ம்... ஏதோ பகவானே! நீதான் காப்பாத்தவேனும்..."

**சிங்களவர்கள் இல்லாமல் எமக்கு எதிர்காலம் இல்லையென்ற உண்மையை நாம் மீளாய்வு செய்துகொள்ள வேண்டும்.** *-பேராசிரியர் கலாநிதி ஜோசப் சந்திரகாந்தன்.*

"எங்களுக்கு இன உணர்வு இருக்கெண்டு சொல்லுறவைக்கும், இஞ்சை தேசியம் பேசித்திரியிறதுகளுக்கும் உவர் பேராசிரியற்ற பேச்சு பஞ்சில நெருப்புப் பிடிச்சமாதிரியிருக்கும். ஆனா ஆற அமர இருந்து யோசிச்சுப் பார்த்தா அதுதான் உண்மையெண்டது உறைக்கும். அதுக்காக அவைய ளிட்டை அடங்கி, அடிமைப்பட்டுப்போக வேணுமெண்டில்லை. பேராசிரியர் சொன்னமாதிரி இப்ப நாங்கள் கையறு நிலையில இருக்கேக்கை இனி அவங்களோடை கொஞ்சம் அனுசரிச்சுப் போய் எமக்கு ஆகவேண்டியதைப் பார்க்கிறதுதான் எங்களுக்கான புத்திசாலித்தனம் கண்டியளே!"

**போதைவஸ்து கடத்திய பௌத்த பிக்கு பொலிசாரால் கைது.** *-பத்திரிகைச்செய்தி.*

"புத்தம் சரணம் கச்சாமி... எண்டு பிரித் ஓதித் திரியவேண்டியவர் சத்தம் கித்தம் போடாமல் சாதுவாக இருந்தபடி நித்தம் நித்தம் வஸ்து வித்து இப்ப நிம்மதியைத் துலைச்சிட்டு இருக்கிறார். அரசமரத்துக்குக் கீழேயிருந்து ஆகம போதனை செய்யிறதை மறந்ததால இப்ப ஆறடி அறைதான் தஞ்சமாப் போட்டுது. போட்டிருக்கிறது புத்தம் வேஷம் அதுக்குள்ள போதைவஸ்து வியாபாரம்... என்ன மனிசரடா உதுகள்...?"

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி
## இலங்கைக்கு...)

அப்படியாயின், ஆலோசனை குழுவின் அறிக்கையை குறித்து இலங்கை அலட்டிக கொள்ளத் தேவையில்லையே என்ற எண்ணம் சிலருக்கு ஏற்படலாம்.

தற்போதைய உலகப் போக்குகளும், உலகமய மாக்கலும் யாரும் யாருடனும் முறைத்துக் கொண்டு பயணிப்பதில் பலன் இல்லை என்ற யதார்த்தத்தினைப் புரிய வைக்கிறது. அதுவும் அபிவிருத்திக்காக முயன்றுகொண்டிருக்கும் நாடுகள் அனைத்துத் தரப்பினரின் ஆசீர்வாதம் இருந்தாலே மிகவும் வேகமாக இலக்கை எட்டமுடியும்.

இதற்கு இந்தியாவே சிறந்த உதாரணம். இந்தியா சீனாவுடனும் கை குலுக்குகின்றது. அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்கிறது. பாகிஸ்தானுடனும் அவ்வப்போது சிரித்துக் கொள்கிறது. ரஷ்யாவையும் கைக்குள் வைத்திருக்கிறது. அதனால் வேகமாக வளர்ச்சியடைகிறது. எனவே இலங்கை போன்ற நாடுகள் முரண்டு பிடிக்க முடியாது என்பதுதான் தற்போதைய யதார்த்தம்.

இலங்கையைப் பொறுத்தவரையில், யுத்தம் முடிவடைந்த நிலையில், மீள்கட்டுமானம், புனர் வாழ்வு, அபிவிருத்திப் பணிகள் எனப் பாரிய திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது. அத்தோடு எதிர்கொண்டு வருகின்ற பாரிய பொருளாதார சிக்கல் களையும் சமாளிக்க வேண்டும்.

இலங்கையின் இந்த நிலை-யைப் புரிந்து கொண்டு, ஏற்கெனவே இந்தியாவும், சீனாவும் ஏட்டிக்குப் போட்டியாகக் கோடிக்கணக்கான பெறுமதியான அபி விருத் தித்திட்டங்களை நடை முறைப்படுத்தல் என்ற போர்வையில் இலங்கையில் கால் பதித்துள்ளன.

உதாரணமாகச் சீன அரசின் உதவியுடன், 1000 ஏக்கர் விஸ்தீரணமான விசேட வர்த்தக வலயம் அம்பாந்தோட்டையில் உருவாகி வருகிறது. அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சீனா கைகளில் வைத்துள்ளது. நுரைச்சோலை அனல்மின் நிலையம், கொழும்பு-கட்டுநாயக்கா நெடுஞ்சாலை, பளை-காங்கேசன்துறை புகையிரதப்பாதை எனப் பட்டியல் நீள்கிறது.

அதேபோன்று, இந்தியாவும் 50,000 வீடமைப்புத் திட்டம், வடக்கு- தெற்கு புகையிரத விஸ்தரிப்பு, சம்பூர் அனல்மின் நிலையம் எனத் தொடர்கிறது. அதைவிட இந்தியாவிற்குச் சொந்தமான சுமார் நூறு நிறுவனங்கள் இலங்கையில் இயங்குகின்றன. அவை சுமார் 45,600 மில்லியன் ரூபாய்களை முதலீடு செய்துள்ளன.

இவையெல்லாம், இந்தியா, சீனா ஆகிய நாடுகளுக்கு இலங்கையில் இருக்கின்ற ஆதிக்கத்தைத் தெளிவுபடுத்துகின்றன. எனவே இந்த இரு நாடுக-ளுடனும் முட்டிக்கொள்வது தற்போதைக்கு இலங்கைக்கு மோசமான விளைவுகளையே தோற்றுவிக்கும்.

அதேபோன்று மேற்குலகுட னும், முற்றுமுழுதாக ஒதுங்க முடியாது. ஏற்கெனவே ஜி.எஸ்.பி. வரிச்சலுகை நீக்கப்பட்டதால் சிறிய நடுத்தர புடைவைக் கைத்தொழில் பாதிப்புகளை சந்தித்து வருகிறது. பல ஆயிரக்கணக்கானோர் வேலைகளை இழந்து வருகின்றனர். இந்நிலையில் சர்வதேச நாணய நிதியம் 2.6 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்க சம்மதித்துள்ளது. அதை கட்டம் கட்டமாகவே வழங்கி வருகிறது. இந்த சர்வதேச நிதியத்தின் 1/3 பங்கு ஐரோப்பிய ஒன்றியத்தினதும் 17 வீதம் அமெரிக்காவிடமும் என மேற்குலகின் ஆதிக்கத் திலேயே இருக்கிறது. ஆக எந்தத் தரப்பினருடன் பகைத் துக் கொண்டாலும், வெட்டி விட்டாலும் எதிர்காலத்தில் பொருளாதார அபிவிருத்தி ரீதியில் பாரிய பின்னடைவை களைச் சந்திக்க நேரிடும். அதேவேளை ஏனைய தரப்புக்களிடம் முற்றுமுழுதாக தஞ்சமடைந்து அவர்களின் தாளத்திற்கு ஆட வேண்டி ஏற்பட்டு விடும். இதனை இலங்கை அரசு நன்றாக உணர்ந்து கொண்ட நிலை யிலேயே காய்களை நகர்த்தி வருகிறது என்பதற்கு அண் மைய நிகழ்வுகள் சாட்சிகளாக அமைக்கின்றது.

இந்தியாவின் அழைப்பை யேற்று அங்கு சென்ற வெளி விவகார அமைச்சருக்கு இந்தியா கடுமையான அறிவு ரைகளைக் கூறியதாக தக வல்கள் கசிந்துள்ளன. அது ஓரளவுக்கு கூட்டறிக்கையிலும் வெளிப்பட்டது.

உடனடியாக சீனாவின் அழைப்பை ஏற்று அங்கு சென்ற வெளிவிவகார அமைச்சர், இலங்கை தன் இனப்பிரச்சினைகளைக் கையாளும் தகுதி வாய்ந்த இறைமையுள்ள நாடு என்ற செய்தியை சீன வெளியுறவு அமைச்சரின் குரலாக வெளியிட வைத்தார். அதே வேளை, போர்க்குற்ற விசாரணைக்கு ஐந்து நீதிபதிகள் அடங்கிய குழுவை அமைத்து, "அது சீனாவின் கருத்து. ஆனால் நீங்கள் சொன்னதையும் நாங்கள் செய்கின்றோம்" என இந்தியாவையும் தஜா பண்ணியுள்ளது.

இந்தியாவின் அண்மைய செயற்பாடுகள் உள்நாட்டில் அதிருப்தியை ஏற்படுத்து கின்றன என்ற செய்தி இந்தியாவிற்குச் சொல்லப்பட வேண்டும் என்பதற்காய் அமைச்சர் விமல் வீரவன்ச பயன்படுத்தப்பட்டுள்ளார். அவருடைய கருத்து இந்தியாவை எச்சரிக் கும் தொனியில் அமைந் திருப்பதை அவதானிக் கலாம். மறுபுறத்தில் ஐ.நா வின் நவநீதம்பிள்ளை அம்மையாரின் கருத்துக் களுக்கு அரச தரப்பில் இருந்து பலத்த விமர்சனம் கிளம்புவதை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

இவ்வாறு பார்க்கும்போது, இலங்கையைத் தமது சதிவலைக்குள் வைத்திருக் கும் சர்வதேசத்தின் விருப்பமும் அதனைக் கையாண்ட, கையாளுகின்ற இலங்கையின் இராஜதந்திர மும் இலங்கை அரசைக் கயிற்றின் மேல் நடக்கும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. எனவே எதிர் காலத்தில் இலங்கை அரசு எடுத்துவைக்கப் போகின்ற ஒவ்வொரு அடியும் அவதா-னமானதாகவே இருக்க வேண்டும். ■

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி
## பயங்கரவாதமாய்...)

பிரதான பாதைகளில், ரயில் பாதை களில், நெடுஞ்சாலைகளில், எவ்வாறு செல்ல வேண்டும் என்ற விதிமுறையை மறந்து நம்மில் பலர் கண்மூடித்தனமாகப் பயணம் செய்கின்ற னர். நாமும் இவற்றைப் பார்த்துக் கொண்டு கண்மூடித்தனமாகப் போகின்றோம்.

இப்படி கண்டும் காணாமல் அக்கறையில்லா மல் கண்மூடித்தனமாகப் போவதா இல்லா விட்டால் இதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதா என்பதை நாம் தீர்மானித்துக்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி சிந்திக்கத் தூண்டினார்.

வீதி விபத்துக்கள் காரணமாகப் பாதிக்கப்படுவோர் குறித்துக் கருத்து வெளியிட்ட ஜனாதிபதியவர்கள், வீதி விபத்துக்களில் மரணிப்போர் இந்த நாட்டின் சுபீட்சத்திற்காகவும் எழுச்சிக்காகவும் பாடுபடக்கூடியவர்கள். இதில் தனது குடும்பங்களையும் வாழவைக்கின்ற குடும்பத்தலைவர்களும் மரணித்திருப்பது கவலைக்குரிய விடயமாகும். இதனால் எத்தனையோ குடும்பங்கள் அநாதரவாகிப் போயிருக்கின்றன என்று கவலை வெளியிட்ட ஜனாதிபதியவர்கள் இதற்காக அரசு என்ற ரீதி யில் ஒவ்வொரு வருடமும் பாரிய முதலீட்டை ஒதுக்க வேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

பயங்கரவாத காலகட்டத்தைப் பற்றி நினைவு கூர்ந்த ஜனாதிபதி, இந்த நாடு பல வருடங்களாகப் பயங்கரவாதத்திற்குள் சிக் குண்டு கிடந்தது. பயங்கரவாதிகளுடன் யுத்தம் செய்த எத்தனையோ இளைஞர்கள் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்திருக்கிறார்கள். பயங்கரவாதம் நிலவிய போது பிரதான பாதை களில் நடக்கக்கூட முடியாமலிருந்தது.

ஆனால் இப்போது அந்த நிலைமை மாறி விட்டது. ஆயினும் பாதைகளில் விபத்து எனும் பயங்கரவாதம் இப்போது தலை தூக்கியிருக்கிறது. இதையும் நாம் முற்றாக ஒழிக்க வேண்டும். பயங்கரவாதம் எப்படி அடி-யோடு ஒழிக்கப்பட்டதோ அதேபோல் பாதை-தகளில் ஏற்படுகின்ற விபத்துக்களையும் நாம் இல்லாதொழிக்க வேண்டும் என்று அறைகூவல் விடுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள், இந்தக் குறைபாடுகளையெல்லாம் சரி செய்து சரியான முறையில் வாகனத்தைச் செலுத்தும் காலம் உருவாகியிருக்கிறது என்றும் கூறினார்.

உரிய அதிகாரிகள் தத்தமது கடமைகளை மதித்து சேவை மனப்பான்மையோடு சட்ட நடவ டிக்கைகளை எடுத்து வீதி விபத்துக்களைத் தவிர்க்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இது தொடர்பாகப் பொலிசார் அதிக கவனம் செலுத்த வேண்டும். பிரதான வீதிகள் மலர்ப் பாதைகளாக மாற வேண்டும். அதற்கான காலம் இப்போது உதயமாகி இருக்கிறது. ஆகவே அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.

# இந்தவாரம் உங்கள் பலன்

(02.06.2011 தொடக்கம் 08.06.2011 வரை

ஸ்ரீதர்

## மேடம்

இந்த வாரம் உங்களுக்கு அனுகூல மான வாரம். தொழில் ஸ்தானத்தில் மதிப்பு உயர்வடையும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பு நல்குவார்கள். திட்டமிட்ட காரியங் கள் நல்ல முறையில் நடைபெறும். செய்காரி யங்களால் நன்மைகள் கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்ப உறுப்பினர்கள் சகல விதத்திலும் நல்லபடி நடந்துகொள்வார்கள். பந்தபாசங்கள், இரத்தத் தொடர்புள்ளவர்கள் வெளிநாடு சென்று நன்றாகவே வாழ்வர். உடல் ஆரோக்கியம் நன்றாகவே இருக்கும். மாணவர்கள் கல்வியில் நாட்டங் காட்டவர். வர்த்தகர்கள், கலைஞர்கள் உயர்ச்சியடைவர். விபத்துவர இடமுண்டு. கவனமாக இருக்கவும். அதிர்ஷ்ட நாள்: வெள்ளி

## இடபம்

தொழில் ஸ்தானத்தில் சிறிது குழப்பங் கள் ஏற்பட்டாலும் ஈற்றில் நன்மை கிட்டும். மேலதிகாரிகள் பாராட்டுவர். செய்காரியங்கள் தாதமாகும். எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் சிந்தித்தே செயற்படவும். கூட இருப்போர் குழி பறிக்கப் பார்ப்பார்கள். குடும்பத்தில் சஞ்சலம் இருக்கும். உடல் நலம் குன்றும். பிள்ளைகள் சொல்வழி கேட்கமாட்டார்கள். ஏறுக்கு மாறாக நடந்து துன்பத்தைத் தேடிக் கொள்வார்கள். நண்பர்கள் ஆபத்து நேரத்தில் கைவிட்டு விடுவார் கள். தூரதேச நற்செய்தி ஆறுதலளிக்கும். மாணவர் கள் கேளிக்கைகளில் ஈடுபடுவர். கல்வியில் நாட்டம் குறையும். வாணிபர்கள் நன்மை அடைவார்கள். புதிய முதலீடு செய்ய வெண்டாம். தனிவழிப்பயணங்களைத் தவிர்க்கவும். அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு

## மிதுனம்

தொழில் ஸ்தானத்தில் ஆதாயம் அதி கரிக்கும். சக ஊழியர்கள் பொறாமைப் படுமளவுக்கு மதிப்பு உயரும். தந்தை வழியில் பொருள் சேர வாய்ப்புண்டு. திட்டபடி யாவும் நடந்தாலும் குறை கேட்க நேரிடும். உடல்நலம் சுமாராக இருக்கும். குடும்பத்தில் நிம்மதி நிலவும். குடும்ப உறவினர்கள் ஒத்துழைப்பு நல்குவார்கள். நண்பர்கள் தானாக வந்து உதவி செய்வர். தூரதேச செய்தி ஒன்று கவலையைத் தரலாம். மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்துவார்கள். கொஞ்சம் வேலைப் பளு அதிகரிக்கலாம். மாணவ சமுதாயம் நல்ல சாதனை படைக்கும். அரசியலில் உள்ளவர்களுக்கு இலாபம் உண்டு. வியாபாரிகளுக்கும் கலைஞர்களுக்கும் வருமானம் கிடைக்கும். அதிர்ஷ்ட நாள்: திங்கள்

## கடகம்

இந்த வாரம் மகிழ்ச்சிக்குரிய நல்ல வாரம். நீங்கள் நினைத்ததெல்லாம். நினைத்தபடியே நடக்கப் போகிறது. தொழில் ஸ்தானத்தில் நல்ல காரியங்கள் நடை பெறும். குடும்பத்தில் குதூகலம் நிலவும். குடும்ப அங்கத்தவர்கள் முதலில் ஒத்துழைக்க மறுப்புத் தெரிவித்துப் பின்னர் சம்மதத்துடன் வருவார்கள். காணி மூலமாக ஒரு நல்ல வருமானம் வர இடம் உண்டு. உடல் உபாதை சற்று இருக்கத்தான் செய்யும். உறவினர்களும் நண்பர்களும் உற்ற நேரத்தில் வந்து உதவுவார்கள். மாணவ சமூகம் கல்வியில் நாட்டம் காட்டும். வர்த்தகர்களும் கலைஞர்களும் கௌரவிக்கப்படுவர். எழுத்தாளர்களுக்கு மதிப்பு உயரும். அதிர்ஷ்ட நாள்: வெள்ளி

## சிங்கம்

இது கொஞ்சம் சிக்கல் கொடுக்கும் வாரம். தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டியாகவே எல்லாம் நடக்கும். திட்டமிட்டபடியே ஓரளவு காரியங்கள் நடைபெற்றாலும் நன்மை கேட்கமாட்டீர்கள். குறை கேட்கவே நேரிடும். சிரித்துச் சிரித்துப் பேசுபவர்களை நம்ப வேண்டாம். உடம்பு நல்ல ஆரோக்கியமாகவே இருக்கும். பயப்படத் தேவையில்லை. தூரதேசச் செய்தி ஒன்று ஆறுதல் தரும். மாணவ உலகம் நன்மையடையும். குடும்பத்தில் ஓரளவு மகிழ்ச்சி நிலவும். வர்த்தகர்கள் வாணிபர்கள் நட்டமடைவர். இலாபம் குறை யும். கலைஞர்கள் இலாபமீட்டலாம். அதிர்ஷ்ட நாள்:புதன்

## கன்னி

இந்த வாரம் உங்களுக்கு நல்லதொரு வாரமாக அமையப் போகிறது. தொழில் ஸ்தானத்தில் வரவேற்புக் கிடைக்கும். சக ஊழியர்கள் மறை முகமான எதிர்ப்புக்களால் பாதிப்படைவார்கள். உடல் நிலையில் மாற்றம் ஏதுமில்லை. மாணவ சமுதாயம் கல்வியில் சிந்தனையைச் செலுத்தும். நண்பர்கள். தாமாகவே வந்து உற்ற நேரத்தில் கைகொடுப்பார்கள். கவலையை விடுங்கள். வர்த்தகர்கள், கலைஞர்களுக்கு வருமானம் கிடைக்கும்.

அதிர்ஷ்ட நாள்: சனி.

## துலாம்

தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் அதி கரிக்கும். சக ஊழியர்கள் ஒத்துழைப் புடன் நடந்த கொள்வார்கள். நீங்கள் நினைத்த காரியம் வெற்றியளிக்கும். வெளிநாட்டி லிருந்து பணம் வர வாய்ப்புண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சொந்தக்காரர்கள் அயலவர்களால் இடையிடையே தொந்தரவுகள் வரலாம், என்றாலும் பாதிப்பில்லை. உடல்நிலை சீராகவே இருக்கும். நண்பர்கள். உதவுவார்கள். மாணவ உலகம் கொஞ்சம் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளும். வர்த்தகர் கள், வாணிபர்கள் கொழுத்த இலாபமீட்டுவர். எந்நேர மும் முகத்தில் புன்னகை பூத்திருக்கும். எதிர்ப்புக் களைச் சமாளிப்பீர்கள். கலைஞர்களுக்குப் பரவா யில்லை. அதிர்ஷ்ட நாள்: செவ்வாய்

## விருச்சிகம்

இந்த வாரம் மங்களகரமான வாரமாகும். நீங்கள் எதிர்பாராத வகையில் நல்ல பலன் நடக்கும். குடும்பத்தில் குதூ கலம். குடும்ப உறுப்பினர்கள் நல்ல ஒத்துழைப்புத் தருவார்கள். நண்பர்களால் தொல்லை உண்டு. மாணவ சமுதாயம் நல்ல சாதனை படைக்க வாய்ப்புண்டு. தூர தேசத்துச் செய்தி மகிழ்ச்சியைத் தரும். பல நாள்கள் காணாத ஒருவர் உங்களைச் சந்திக்க வருவார். உடல்நிலை ஆரோக்கியமாக இருக்கும். ஆனால் வைத்தியச் செலவுகள் இருக்கும். வர்த்தகர்கள், வாணிபர்கள் இலாமீட்டுவார்கள். கலைஞர்கள் வருமானமீட்டுவர். அயல் வீட்டுக்காரர் ஒருவர் வீண் சண்டைக்கு வரக்கூடும். விபத்து வர இடமுண்டு. கவனமாக இருக்கவும்.

அதிர்ஷ்ட நாள்: வியாழன்.

## தனுசு

இந்த வாரம் கொஞ்சம் மந்த நிலையே இருக்கும். தொழில் ஸ்தானத்தில் பிரச்சினையில்லை. எல்லாம் சுமூகமாகவே நடக்கும். குடும்பத்தில் ஓரளவு நிம்மதியுண்டு. குடும்ப அங்கத்தவர்கள் எதிர்ப்புக் கிளப்புவார்கள். நீங்கள் செய்யும் காரி யம் ஒவ்வொன்றையும் குறை கூறுவார்கள். வரவேற்பு இருக்கமாட்டாது. சொந்த பந்தங்கள் உறவுக்காரர்களால் தொல்லைகள் ஏற்படலாம். மாணவ உலகம் நல்லபடியாக நடந்து கொள்ளும். கல்வியில் நாட்டம் காட்டும். உடல் ஆரோக்கியமும் சற்றுக்குன்றியே காணப்படும். நண்பர்கள் உதவி செய்வார்கள். வர்த்தகர்கள், வாணிபர்கள் நன்மையடைவார்கள், கலைஞர்களுக்கும் வருமா – னம் உண்டு. அதிர்ஷ்ட நாள்: திங்கள்

## மகரம்

இது உங்களுக்குச் சிறப்புக்களைத் தரும் மங்கள வாரம். வெளிநாட்டிலிருந்து நல்ல சேதி உங்களை நாடித் தேடி ஓடி வரும். அதனால் பணவரவும் உண்டு. குடும்பத்தில் மனநிறைவு இருக்கும். தொழில் ஸ்தானத்திலும் நல்ல காரியங்கள் நிகழும். நண்பர்கள் அயலவர்கள் தாமாகவே வந்து உதவுவார்கள். நீங்கள் தேடிப் போக இருந்தவர் முன்னால் வந்து நின்று ஆச்சரியத் தைத் தரப்போகின்றார். உடல்நிலை பரவாயில்லாமல் இருக்கும். மாணவ உலகம் சாதனை படைக்கும். வைத்தியச் செலவு வந்தாலும் வரலாம். வாகனங்கள் பழுதுபடும். ஆனால் தொந்தரவு கொடுக்காது. வர்த்த கர்கள், வாணிபர்கள் இலாபமீட்டுவார்கள். கலைஞர் கள் கௌரவிக்கப்படுவர், அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு.

## கும்பம்

இந்த வாரம் உங்களுக்கு நல்ல பயன் நடக்கப் போகிறது. கையில் பணப் புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடும். குடும்ப உறுப்பினர்கள் உங்களுக்கு மதிப்புக் கொடுப்பார்கள். தாகத்துக்குத் தண்ணீர் உடனே கிடைப்பது போல் எல்லாம் நடக்கும். தொழில் ஸ்தானத்தில் மதிப்பு உயர்வைத் தரும். சக ஊழியர்கள் முகமலர்ச்சியுடன் நடந்து கொள்வார்கள். உடல்நிலை ஆரோக்கியமாகவே இருக்கும். மாணவ உலகம் கல்வியில் அக்கறையுடன் முன்னேறும். தூரத்து உறவுகளால் தொல்லைக்கு இடமுண்டு. அயலவர்கள், நண்பர்கள் கைகொடுத்து உதவி செய்வார்கள். வர்த்தகர்கள், வாணிபர்கள் நன்மையடைவர். கலைஞர்களும் இலாபமீட்டுவர். அதிர்ஷ்ட நாள்: வெள்ளி

## மீனம்

மங்களகரமான வாரம். தொழில் ஸ்தானத் தில் இதுவரை நாளும் தொல்லை கொடுத்த ஒரு விடயம், நல்ல முடிவுக்கு வரும். சகஊழியர்கள் மறைமுக எதிர்ப்புக் காட்டுவார் கள். ஆனால் வெற்றி உங்களுக்கே. குடும்பத்தில் நன்மை நடக்கும். குடும்ப உறுப்பினர்கள் ஒத்துழைப் புடன் நடந்து கொள்வார்கள். உடம்பு ஓரளவுக்கு ஆரோக்கியமாகவே காணப்படும். நண்பர்கள் உற்ற நேரத்தில் ஓடிவந்து கைகொடுப்பார்கள். மாணவ சமுதாயம் கல்வியில் அக்கறை காட்டும். வர்த்தகர் கள், வாணிபர்கள் இலாபமடைவர். கலைஞர்களுக்கு வருமானம் அதிகரிக்கும்.

அதிர்ஷ்ட நாள்: புதன்

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வதெல்லாம் பொய்
பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
– காதில பூ கந்தசாமி –

**வணக்கமுங்கோ** எப்புடி இருக்கீங்கள். நாட்டில யுத்தமில்லாட்டியும் செய்திகளுக்குப் பஞ்சமில்லையுங்கோ. வெளிவிவகார அமைச்சரின்ர வெளிநாட்டு விஜயங்கள், சரத் பொன்சேகாவின்ர ஸ்டேட்மெண்டுகள், தமிழ் கூட்டமைப்புக்குள்ள நுழைஞ்ச கட்சிகளின்ர அரசியல் காட்சிகள் எண்டு போய்க் கொண்டு இருக்குதுங்கோ.

இதிலை எதை எடுத்துக் கொண்டால் பொழுது போக்காக இருக்குமெண்டு யோசிச்சுப் பார்த்தால் நம்முடைய கூத்தாடிகளின்ர கதைகளைச் சொன்னால்தானேங்கோ உங்களுக்கு மொழியும் விளங்கும் அர்த்தமும் புரியும் எண்டு தோனுதுங்கோ.

உதில லேட்டஸ்ட் பகிடி என்ன தெரியுமோ?! கடிதப்புகழ் ஆனந்த சங்கரியார் இருக்கிறாரெல்லோ அவர் அண்மையில ஒரு ஸ்டேட்மெண்ட் விட்டவர். அதில தமிழ் கூட்டமைப்பு "தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் இல்லை" எண்டும் அதுக்கு ஆதாரமாக அந்த எலக்ஷனில இத்தனை வாக்கு எடுத்தவை எண்டும் அதுக்கு அடுத்த எலக்ஷனில இத்தனை வாக்கு எடுத்தவை எண்டும் பட்டியல் போட்டுக் காட்டி கூட்டமைப்புக்கு வர வர வாக்குகள் சரிந்து கொண்டே வருகுது எண்டும் ஐயா தெளிவு படுத்தியிருக்காருங்கோ.

கூட்டுக்குள்ள போயிட்டாலும் சங்கரியார் கொடுக்க வேண்டிய நேரத்தில கடுக்காயை சரியாக தூளாக்கி பிசைஞ்சு தீத்திப் போடுவாருங்கோ. அந்த நேர்மையை மதிச்சு மீண்டுமொரு முறை யு. என். விருது கிடைச்சாலும் கிடைக்குமுங்கோ. ஏன் உதைச் சொல்லுறன் எண்டால்பாருங்கோ ஏற்கெனவே விருது வாங்கினவர் எண்டதாலை சங்கரியாருக்கு எந்த ரைமில என்ன செய்ய வேனுமெண்டது நல்லாத் தெரியுமுங்கோ.

சங்கரியார் கூட்டமைப்போடை ஒரு கொள்ளைக்காக, மன்னிக்கவும் கொள்கைக்காக கூட்டுச்சேந்தாரோ தெரியாதுங்கோ ஆனால் நிச்சயம் உண்மைகளைச் சொல்லி தெளியப் பண்ணுவார் எண்டது மட்டும் தெளிவாத் தெரியுதுங்கோ.

சங்கரியாரோடை கூட்டமைப்பின்ர கூத்து முடியுமெண்டு நினைச்சால் முடிஞ்சபாடில்லையுங்கோ. இன்னொருவரும் தன்ர திருவாயைத் திறந்திருக்காருங்கோ

அவர் யார் எண்டு நான் சொல்ல முன்னமே நீங்களே கண்டுபுடிச்சிருப்பியள், அவ்வளவு பேமஸான ஆள் அவர். அட நம்முடைய சிவாஜியார் தானுங்கோ. அண்ண என்ன சொல்லியிருக்கார் தெரியுமோ? இந்தியாவை நம்ப வேண்டாமாம். இந்தியா இதுவரையும் தமிழ் மக்களுக்காக எதையும் செய்யவில்லையாம். ஏதிர்காலத்திலையும் எதையும் செய்யாதாம்.

என்னே கண்டுபிடிப்பு இவரும் லேசுப்பட்ட ஆள் இல்லையுங்கோ மனிசன் எதையாவது கண்டுபிடிச்சுப் போடுவார். ஊதில இவர் கண்டு பிடிக்காதது என்ன தெரியுமோ? சிவாஜியாரில்லை சிவாஜியாரின்ர பாட்டன் முப்பாட்டன் வந்து வாய் கிழியக் கத்தி உபதேசம் செய்தாலும் உந்தக் கூட்டமைப்புக் காரர் கேட்கமாட்டினமாமுங்கோ. ஏன் எண்டால் பெரும்பாலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு அண்டை நாட்டிடமிருந்து மாதாந்தம் கிடைக்க வேண்டியது கிடைக்குது எண்டு நெருக்கமான நண்பர் ஒருவர் சொன்னாருங்கோ.


நண்பர் சொன்னது எந்தளவுக்கு உண்மையோ யாருக்குத் தெர-யும். எல்லாம் சர்வமே வங்கி மயம். சரி அதை விடுங்கோ, கூட்டமைப்பு இப்ப கொஞ்ச நாளாகவே ஒரு கனவு கண்டுகொண்டு இருக்குதுங்கோ. அந்தக் கனவுதான் எதிலைபோய் முடியப்போகுதெண்டு ஒண்டுமாத் தெரியுதில்லையுங்கோ.

என்ன கனவு தெரியுமோ? இலங்கை அரசு மீது போர்க் குற்றச்சாட்டு வந்திருக்குது, அதாலை சர்வதேசம் தலையிட்டு தமிழ் மக்களுக்கு தீர்வைப் பிடுங்கித் தருவினம் எண்ட கனவு தானுங்கோ. முன்னம் புலிகள் இப்ப சர்வதேசம் எப்புடிப் போகுது இவையின்ர பொலிரிக்ஸ் பாத்தியளோ.

சிந்திக்கத் துணியாத தமிழ் மக்களின்ர தோழில ஏறிட்டம். யோசிக்காமல் பந்திக்கு அழைப்பு வந்த திசையில ஓட்டுறா தம்பி வண்டிய எண்டு முணுமுணுக்கினமுங்கோ.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# மின்சாரத்துக்குக் கடிவாளமிட்டவர்



இளையவன் மைக்கேலுக்கு 'ர' என்ற வார்த்தை யைச் சரியாக உச்சரிக்க வரவில்லை. 'ர'வை 'வ' என்பான். அண்ணா ராபர்ட்டை, வேபார்ட் என்று அழைப்பான். குழந்தைகளின் மழலை-யை ரசிக்கத் தெரியாத ஆசிரியை, மைக்கேலை அதட்டினாள், மிரட்டினாள், அடித்தாள்-சரியாக உச்சரிக்குமாறு கண்டித்தாள். ஆனால் மைக்கேலுக்கு 'ர' வரவில்லை. இதனால் எரிச்சல் அடைந்த ஆசிரியை அண்ணன் ராபர்ட்டை அழைத்து, அவனிடம் அரைப் பென்னி நாணயத்தை அளித்து, கடையில் போய் புதுப் பிரம்பு வாங்கி வருமாறு அனுப்பினாள். -அதனால் - 'ர' உச்சரிப்பை ஊட்டுவதற்காக. ஆனால் அண்ணா ராபர்ட், தம் தம்பி அப்படிச் சித்திரவதைப்படுவதை விரும்பாமல் காசுடன் நேரே வீட்டுக்கு ஓடினான்.

படிப்பை விட குழந்தைகளின் உடல்நலம்தான் முக்கியம் என்று கருதிய மார்க்கரெட், தன் குழந்தைகள் இருவரையுமே இனிப் பள்ளிக்குப் போக வேண்டாம் என்று கூறிவிட்டாள். 'இப்படி ஆரம்பப் பள்ளிப்படிப்புக்கு மேல் போகாத மைக்கேலை, பிற்காலத்தில் மிகச் சிறந்த விஞ்ஞானி யாக உலகம் போற்றியது. புகழ்ந்தது. பள்ளிப் படிப்பு இல்லாத பையன் எப்படி இந்த நிலைக்கு உயர்ந்தான்?

இன்று நீங்கள் காணும் சினிமா, கேட்கும் ரேடியோ மற்றும் மின்சார விசிறி, தொழிற்சாலைகளில் உள்ள இயந்திரங்கள் இவைகளெல்லாம் எப்படி இயங்குகின்றன? மின்சாரத்தினால், தன் இச்சைப்படி அடங்காமல் திரியும் ஒரு முரட்டுக் குதிரை இருக்கிறது. அதனால் யாருக்குப் பயன்? அதே குதிரை யைப் பல்வேறு அலுவல்களுக்குப் பயன்படுமாறு பழக்க, அதற்குக் கடிவாளம் இடுகிறான் மனிதன்.

உலகை வியக்க வைத்தவர்கள்


[வியப்புக்கள் தொடரும்...]

Regd. as a News paper at the G.P.O.(QD/129/NEWS/2011)


# மரம்


## இயற்கை = செயற்கை





பாரிய காட்டு மரங்களை தறித்து தளபாடங்கள், உருவங்கள் செய்வது எமக்கு ஒன்றும் புமையானது அல்ல. ஆனால் இங்கு வலப்பக்கத்தில் காணப்படுகின்ற புகைப்படங்களில் உள்ள உருவங்கள் மரங்களைத் தறித்து உருவாக்கப்பட்டவை அல்ல. உயிர் வாழும் மரங்களையே வெவ்வேறு உருவ அமைப்பில் செதுக்கி அழகுபடுத்தியிருக்கிறார்கள் மேலைத்தேசத்தவர்கள். இது ஒருபுறமிருக்க மனிதர்கள் மீது இரக்கம் கொண்ட மரம் ஒன்று தானாகவே மனிதர்களின் தோற்றத்தை ஒத்ததாக வளர்ச்சியடைந்துள்ளது. சிந்திக்கத் தெரிந்த மரம் போலும். தனக்கும் வலி ஏற்படாமல் மனிதர்களுக்கும் வேலைப்பளுவைக் கொடுக்காமல் தானாகவே உருப்பெற்றுள்ள விந்தையையே இடது பக்கத்தில் உள்ள படத்தில் காண்கிறீர்கள்.





---

## அதிசயப் பயணம்

நாம் பொதுவாக ஆகாயத்தில் பறந்திருக்கின்றோம், கடலிலே மிதந்திருக்கின்றோம், வீதிகளில் பயணித்திருக்கிறோம். ஆனால் இங்கு படத்தில் காணப்படுவது எங்களுக்கெல்லாம் விசித்திரமான போக்குவரத்து மார்க்கமாகவே தெரிகின்றது. பொதுவாக தண்டவாளத்திலே சீறிக் கொண்டு செல்கின்ற ரயில் வண்டி இங்கு தலைகீழாக பயணித்துக் கொண்டிருக்கிறது. பார்ப்பதற்கு இது அந்தரமாக தெரிந்தாலும் இந்த ரயில் வண்டி இவ்வாறுதான் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஜேர்மனியில் நெடுஞ்சாலைகள் ஆறுகள், காடுகள் என்பவற்றைத் தாண்டி மக்கள் பயணிப்பதற்கு வசதியாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இந்த ரயில் வண்டியானது, எங்கள் அனைவருக்கும் ஓரளவுக்குப் பரீட்சயமான கேபிள் கார் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதாக இந்த புகையிரதத்தின் சிற்பிகள் தெரிவிக்கின்றனர்.






## இரட்டை வலு

பொதுவாக வாகனங்களுக்கு ஒரு சாதாரண இயந்திரம் மாத்திரம் பொருத்தப்படுவது வழக்கம். ஆனால் இந்த ஜீப் வண்டிக்கு இரண்டு இயந்திரங்களைப் பொருத்தி வடிவமைத்துள்ளார்கள். இதன் முன் பகுதியில் ஓர் இயந்திரமும், பின்புறத்தில் இன்னொரு இயந்திரமும் பொருத்தப்பட்டுள்ளது.

இதனால் இந்த வாகனத்தின் வேகத்திறன் சுமார் 740 குதிரைவலு வரை வெளிப்படுகிறது.

## இறப்பர்...

இந்தியாவின் புதுடில்லியைச் சேர்ந்த 27 வயதான விஜய் சர்மா என்பவரையே இங்கு படத்தில் காண்கிறீர்கள். இவர் தனது உடலை இறப்பர் போன்று வளைத்து சாதனை படைக்க முயற்சி எடுத்து வருகிறார்.

இதுவரை உடலை அதிகளவு வளைத்த இந்திய அளவிலான சாதனையை தனதாக்கியிருக்கும் விஜய் சர்மாவிற்கு உலக சாதனை கைக்கு எட்டும் தூரத்திலேயே இருக்கின்றது. வாழ்த்துக்கள்.



## சாதுரியம்



விமானத்தில் நாம் பயணக்கும் போது விமானம் தற்செயலாக கடலில் இறங்க நேரிட்டால் என்ன செய்ய வேண்டுமென விமானப் பணியாளர்கள் எமக்கு செயன்முறைகளைச் செய்து காட்டுவதை விமானத்தில் பயணிப்பவர்கள் அறிந்திருப்பர்.

ஆனால் அதனை யாருமே கவனத்தில் எடுப்பதில்லை. இந்தப் படத்தைப் பாருங்கள். ஒரு விமானம் இயந்திரக் கோளாறு காரணமாக அவசரமாகவும், நேர்த்தியாகவும் கடலில் தரையிறக்கப்படுகிறது. அதன் விமானி, அனைத்துப் பயணி-களையும் பேரழிவிலிருந்து காப்பாற்றி கடலில் பயணித்துக் கொண்டிருந்த கப்பலின் மீது பாதுகாப்பாக ஏற்றிக் கொண்டிருக்கிறார்.